Follow us:

# தமிழன்

THAMILAN තමිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 276 பிலவ வருடம், ஆனி மாதம் 30ஆம் திகதி புதன்கிழமை (14.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹிஜ்ஜா பிறை - 03, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## நக்கல் நமசிவாயம்




## குரியர் சேவையூடாக போதைப்பொருள்

### பொம்மைகளூடாக 'குடு நோனி' சூட்சுமக் கடத்தல்



*•நா. தினுஷா*

குரியர் சேவை ஊடாக போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட பெண்ணொருவரும் அதனைப் பெற்றுக் கொண்ட நபரும் பொலிஸாரால் அதிரடியாக கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொம்மைகள் மற்றும் பரிசுப்பொருட்களுக்குள் சூட்சுமமாக மறைத்துவைத்து போதைப்பொருள் கடத்தல் இடம் பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த வியாபாரத்தை நடத்திவந்த கொழும்பு கொம்பனித்தெருவைச் சேர்ந்த 'குடு நோனி' எனப்படும் 49 வயதான பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கருத்து வெளியிடுகையில்,

போதைப்பொருள் விற்பனைக்கென புதியமுறை... 02»

## மாகாணங்களிடையே

## இன்றுமுதல் மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை



மாகாணங்களுக்கு இடையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பஸ் சேவை இன்றுமுதல் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கு கொவிட் – 19 ஒழிப்பு தேசிய செயலணியின் அனுமதி கிடைத் துள்ளது.

அதனடிப்படையில், அரச மற்றும் தனியார் பிரிவுகளில் அத்தியாவசிய சேவை நிமித்தம் செல்பவர்கள் மாத்திரமே இவற்றில் பயணிக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் பயணிகள், அரச அல்லது தனியார் நிறுவனங்களின் அடையாள அட்டை அல்லது தாம் செல்லும் பணி தொடர்பிலான ஆவணத்தை வைத்திருக்க வேண்டும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# பொருளாதார நெருக்கடியின் விளிம்பில் இலங்கை!

## சர்வதேச நிறுவனமொன்று எச்சரிக்கை

*•நமது விசேட செய்தியாளர்*

இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியின் விளிம்பில் இருப்பதாக ஆசியாவின் மிகப்பெரிய முதலீட்டு நிபுணத்துவ மற்றும் மூலோபாய நிறுவனமான பவர் க்ரூப் ஏசியா (பி.ஜி.ஏ.) எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் அண்மைக்கால நடைமுறைகளை மேற்கோள் காட்டி இந்த விடயத்தை அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

மிகப்பெரிய வெளிநாட்டுப் படுகடன் தொகையை அரசாங்கம் செலுத்தவேண்டியுள்ளதால் வறுமையைத் தணிக்க போதியளவு இயலுமை இல்லையென அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. மோசமடைந்து வரும் நெருக்கடிக்கு இலங்கை அரசாங்கமும் மத்திய வங்கியும் காத்திரமான நடவடிக்கை எடுக்காமல் குறுகிய கால கொள்கைகளைத் தொடரும் பட்சத்தில்... 02»

## மேலும் அறுவருக்கு டெல்ட்டா தொற்று

நாட்டில் டெல்ட்டா தொற்று மேலும் ஆறு பேருக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இதன்படி, நாட்டில் இதுவரை 24 டெல்ட்டா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும்... 02»



## கொத்தலாவல பல்கலைக்கழக சட்டம்;

## இலவசக் கல்விக்கு விழுந்த மரண அடி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கண்டனம்

இலவசக் கல்வி மற்றும் அதன் மரபுரிமையாளர்களின் சுதந்திரத்துக்காக போராட்டங்கள் மூலம் முன்மொழியப்பட்ட கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைகழக சட்டத்தை தோற்கடிப்பதற்கு செயற்படப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். 02»

## இலங்கை உள்ளிட்ட 3 நாடுகளுக்கு எமிரேட்ஸின் பயணத்தடை நீடிப்பு

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இலங்கை உட்பட 3 நாடு களுக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத் தடையை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மேலும் நீடித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 21ஆம் திகதி வரை இந்த பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது. இலங்கை, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷிலிருந்து வரும் பயணிகள் 21ஆம் திகதிவரை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளுக்கு செல்ல அனுமதிக்கமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. 02»

## தொழிற்சங்கத்தினரை அடக்கும் முயற்சியில் ஈடுபடும் அரசாங்கம்

### போராட்டம் தொடருமென கிழக்கு மாகாண ஆசிரிய சேவை சங்கம் சூளுரை




ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பள முரண்பாடு, தொழிற்சங்க உரிமைகள், உட்பட இந்நாட்டின் மாணவர்களின் இலவசக் கல்வியை பாதுகாப்பதற்காகவும் போராடும் தொழிற்சங்கத் தலைவர்களை இரும்புக்கரம் கொண்டு... 02»

## போராட்டக்காரர்கள் ஏன் தனிமைப்படுத்தப்பட்டனர்?

### தலையீடுகள் எதுவுமில்லையென அரசு விளக்கம்

*•யோ.தர்மராஜ்*

நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கைதுசெய்து தனிமைப்படுத்தப்பட்டதில் அரசாங்கத்தின் எவ்வித தலையீடுகளும் இல்லை. அது சுகாதார அதிகாரிகள்... 02»

## இலங்கை அரசாங்கம் குடும்ப நிறுவனமாக மாறி வருகிறது!

### நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை விமர்சனம்




இலங்கையின் தற்போதைய அரசாங்கம் ராஜபக்ஷ குடும்பத்தின் நிறுவனமாக மாறிவருவதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவின் மூன்று சகோதரர்கள் அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகித்துவருவதாகவும்... 02»

## பொதுபலசேனாவை தடை செய்யும் சிபாரிசு இல்லை

### அமைச்சரவை உப குழு மேற்கொள்ளவில்லையென அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவிப்பு

*•றிப்தி அலி*

பொதுபலசேனா அமைப்பினை தடைசெய்யுமாறு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையினை ஆய்வுசெய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவினால் எந்தவித சிபாரிசும் மேற்கொள்ளப்படவில்லை என அரசாங்கம் நேற்று... 02»

## கேப்பாப்பிலவில் ஆசிரிய சங்கத்தினரை சந்திக்க மனித உரிமை அதிகாரிகளுக்கு அனுமதி மறுப்பு

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு விமானப்படை தளத்தில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள ஆசிரியர் சங்க செயற்பாட்டாளர்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலக அதிகாரிகள் சந்திப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதேவேளை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள தங்களின் தகவல்கள் எதுவும்,... 02»

## விசேட அறிவிப்பு!

வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'தமிழன்' தினசரி பத்திரிகை இனி பிரதி சனிக்கிழமைகளிலும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். (ஆ-ர்)







# இரு வாரங்களுக்குள்

# கல்முனை பிராந்தியத்திற்கு தடுப்பூசி வழங்கப்படும்

*றிப்தி அலி*

அடுத்த இரு வாரங்களுக்குள் கல்முனை பிராந்தியத்திற்கு கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்படும் என அரசாங்கம் நேற்று தெரிவித்தது.

கல்முனை சுகாதார மாவட்டத்தில் பொதுமக்களுக்கான கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விடியல் இணையத்தளத்தினால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சரவை பேச்சாளரும், ஊடக அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“தடுப்பூசி வழங்குவதென்பது விசேட நிகழ்ச்சித் திட்டமொன்றாகும். கொவிட் பரவலின் விகிதத்தின் அடிப்படையிலேயே கொவிட் தடுப்பூசிகளின் ஒதுக்கீடு தீர்மானிக்கப்படுகின்றது.

இதனை சுகாதாரத்துறையினரே மேற்கொள்கின்றனர்.

எவ்வாறாயினும், கல்முனை சுகாதார மாவட்டத்திற்கு இதுவரை தடுப்பூசி வழங்கப்படாமை தொடர்பில் நாங்கள் கலந்துரையாடியுள்ளோம்.

அடுத்த இரண்டு வார காலப்பகுதிக்குள் எமக்கு கிடைக்கவுள்ள தடுப்பூசிகளை நிச்சயமாக கல்முனை சுகாதார பிரிவுக்கு வழங்குவோம்.

இந்த விடயத்தினை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தமைக்கு மிக்க நன்றிகள். இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின் கவனத்திற்கு நிச்சயம் கொண்டு செல்வேன்” - என்றார்.

## இலங்கை உள்ளிட்ட ...

இருப்பினும், இந்தத் தடை ஐக்கிய அரபு அமீரக பிரஜைகள், ஐக்கிய அரபு எமிரேட் விசா வைத்திருப்பவர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு பொருந்தாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கேப்பாப்பிலவில் ஆசிரிய...

உத்தியோகபூர்வமாக பதிவுசெய்யப்படாமல் இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். கொத்தலாவல சட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டமைக்காக கைது செய்யப்பட்டு கேப்பாப்பிலவு விமானப்படை தனிமைப்படுத்தல் மையத்தில் வைக்கப்பட்டுள்ள செயற்பாட்டாளர்கள் நேற்று ஊடகப் பதிவொன்றை வெளியிட்டபோது செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனை தெரிவித்துள்ளார் .

## பொதுபலசேனாவை...

செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

குறித்த ஆணைக்குழுவின் அறிக்கையை விரிவாக ஆராய்ந்த அமைச்சரவை உப குழு, பொதுபலசேனா அமைப்பினை தடைசெய்யுமாறு எந்தவித சிபாரிசினையும் முன்மொழியவில்லை என குறித்த அமைச்சரவை உப குழுவின் உறுப்பினரான அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஈஸ்டர் தற்கொலை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலேயே குறித்த அமைப்பினை தடைசெய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் ஏனைய சட்ட அமுலாக்கல் துறையினர் ஆணைக்குழுவின் அறிக்கையினை மதிப்பீடு செய்வதாகவும் அமைச்சர் கூறினார்.

இது தொடர்பான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் இறுதி முடிவினை அமைச்சரவை உப குழு அறிவிக்க காத்துக்கொண்டிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் அடிப்படையிலேயே பொதுபலசேனா அமைப்பினை தடைசெய்வதா இல்லையா என்பது தொடர்பான இறுதித் தீர்மானமொன்றை மேற்கொள்ளும் என அமைச்சர் ரமேஷ் பத்திரன மேலும் குறிப்பிட்டார்.

## பொருளாதார...

இலங்கை நாணயத்தின் பெறுமதியில் பாரிய வீழ்ச்சியை சந்திக்க நேரிடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அமெரிக்க டொலர்களின் இருப்பில் பற்றாக்குறை நிலவுவதால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை அரசாங்கம் உடனடியாக நாட வேண்டும் எனவும் பி.ஜி.ஏ. தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசின் நடப்புக் கணக்கில் பாரிய பற்றாக்குறை நிலவுகிறது. அந்நிய செலாவணி இருப்பு வீழ்ச்சியடைந்துள்ளதன் காரணமாக இலங்கை ரூபாவின் பெறுமானத்தில் தேய்மானம் ஏற்படும். சர்வதேச கடன்கொடுநர்கள் இலங்கையை கறுப்புப்பட்டியலில் இணைத்திருக்கிறார்களா என்பது தொடர்பில் முதலீட்டாளர்கள் அவதானம் செலுத்தவேண்டியது அவசியமாகும்.

பலவீனமான நிதி நிலைமைகள் பொருத்தமற்ற கொள்கைகளாலேயே உருவாகின்றன. இரசாயன உரம் திடீரென தடைசெய்யப்பட்டுள்ளதால் இறக்குமதி செலவீனங்கள் அதிகரிக்கும். மேலும் உணவு வகைகளின் விலைகளும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

போதுமான உணவு இறக்குமதி செய்யப்படாவிட்டால் இலங்கை பட்டினி நெருக்கடிக்கு ஆளாக வேண்டி ஏற்படும்.

இலங்கையில் மே மாத இறுதியில் அந்நிய செலாவணி இருப்பு 4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக சரிந்தது. அதேநேரம் அடுத்த 12 மாதங்களுக்கான வெளிநாட்டுப் படுகடன் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இலங்கையில் ஏற்படப்போகும் நிதிப்புயல், பொருளாதாரத்தை கடுமையாகப் பாதிக்கக்கூடும். நாடு அதற்கு தயாராக இருக்கவேண்டும். இலங்கை வெளிநாட்டுக் கடனை செலுத்தாத பட்சத்தில் உலகளாவிய ரீதியில் கறுப்புப்பட்டியலில் இணைக்கப்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை அரசாங்கம்...

அவர்களின் புதல்வர்களுக்கும் அதிகாரமிக்க பதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் நிதியமைச்சராக பெசில் ராஜபக்ஷ பதவியேற்றுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை, இது குடும்ப ஆட்சியை உறுதிப்படுத்தும் நடவடிக்கை எனவும் கூறியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் ஜனாதிபதியாக பதவி வகிப்பதுடன், அவரின் சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவி வகித்து வருகிறார். மேலும் மற்றுமொரு சகோதரரான சமல் ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் அமைச்சர்களாக பதவி வகித்து வருகின்றனர்.

சமல் ராஜபக்ஷவின் புதல்வர் ஷசீந்திர ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சராக பதவி வகித்து வருகிறார். இந்நிலையில், அண்மையில் அமெரிக்காவிலிருந்து திரும்பிய பெசில் ராஜபக்ஷ, நாட்டின் மிக முக்கிய அமைச்சுப் பதவிகளில் ஒன்றான நிதியமைச்சு பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இவர்களைத் தவிர, ராஜபக்ஷ சகோதரர்களில் தங்கையின் புதல்வரான நிபுண ரணவக்க நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து வருகிறார்.

இலங்கையின் அரசதுறையிலுள்ள நிறுவனங்களில் கிட்டத்தட்ட 80 வீதமான நிறுவனங்கள் ராஜபக்ஷ குடும்பத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளனவென நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## கொத்தலாவல...

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

முன்மொழியப்பட்டுள்ள கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகச் சட்டம் இலவச கல்விக்கு ஒரு மரண அடியாகும்.

நாட்டில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான உயர் கல்வியை வழங்குவதற்காக சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் வலுப்படுத்தப்படுவதை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம். அதனை தேசிய சேவைப்பாடாகவும் கருதுகின்றோம்.

எவ்வாறாயினும், பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்கான அடிப்படை கட்டமைப்பிலிருந்து விலகி, தற்போதுள்ள இலவசக் கல்வி அழிந்துபோவதையும் உயர்கல்வியின் கட்டமைப்பிற்கு வெளியே நிறுவனங்கள் நிறுவுவதையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் இச்செயற்பாட்டில், உயர் கல்வியின் குணாம்சங்கள், தரம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆதிக்கம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு இலவசக் கல்வி கடுமையான நெருக்கடியில் தள்ளப்படும். அதேநேரத்தில், அரசாங்கத்தின் இந்தச் செயலினால் பல்கலைக்கழக முறைமையின் அறிவுசார் சுதந்திரம் சுயாதீனத்தன்மை அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் என்பதுடன், இது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு வெளியே உயர் கல்வி நிறுவனங்களையும் உருவாக்கும்.

எனவே, இலவசக் கல்வி மற்றும் அதன் மரபுரிமையாளர்களின் சுதந்திரத்துக்காக போராட்டங்கள் மூலம் முன்மொழியப்பட்ட சட்டத்தை தோற்கடிப்பதற்கு நாம் செயற்படுவோம் - என்று குறிப்பிட்டுள்ளார் சஜித பிரேமதாச.

# வழக்குத் தாக்கல் மாத்திரம் தீர்வல்ல;

# விசாரணைகளில் திருப்தியில்லாத நிலை



படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

## போராட்டம் தொடருமென பேராயர் மெல்கம் ஆண்டகை தெரிவிப்பு

நா. தினுஷா

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இருபது அல்லது முப்பது வழக்குகள் தாக்கல் செய்தால் மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று அரசாங்கமோ சம்பந்தப்பட்ட நிறுவனமோ எண்ணுமாக இருந்தால் அவர்களை அவர்களே ஏமாற்றிக்கொள்ளும் செயலாகும். ஆகவே, இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் திருப்தியளிப்பதாக இல்லை என்றும் விசாரணைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்றும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பான தற்போதைய நிலைமை மற்றும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்பிலான எங்களின் நிலைப்பாட்டை அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கிறோம். அந்த அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் தற்போதுள்ள விசாரணை நடவடிக்கைகளின் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்ததன் பின்னரே அறிக்கையைத் தயாரித்துள்ளோம். தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளை விட தீவிரமான விசாரணைகள் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்த உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் என்ற எங்களின் நிலைப்பாட்டிலேயே இருந்தோம். அதுதொடர்பில் சகல அரசியல் கட்சிகளுக்கு அறிவித்திருந்தோம். ஆனால், இந்த விசாரணைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைமைகள் திருப்தியடையக்கூடிய விதத்தில் செயற்படுகின்றன என்று கூற முடியாது.

இதுதொடர்பில் மேலும் கீழுமாக விசாரணைகளை செய்து ஒருசிலரை மாத்திரம் நீதிமன்றங்களுக்கு அழைத்துவிட்டு, விசாரணை நடவடிக்கைகள் முடிந்துவிட்டன எனக் கூறி மறைக்க முயற்சிக்க வேண்டாம். இருபது அல்லது முப்பது வழக்குகளைத் தாக்கல்செய்து மக்களை மகிழ்ச்சிப்படுத்த முடியும் என்று அரசாங்கமோ அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனங்களோ எண்ணுமாக இருந்தால் அவர்களை அவர்களே ஏமாற்றிக்கொள்வதாகவே அமையும் என்றும் இந்தப் போராட்டத்தை இத்தோடு நிறைவுக்கு கொண்டுவரப் போவதில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

## மேலும் அறுவருக்கு...

அவர் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு பொதுமக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தநிலையில், நாட்டில் டெல்ட்டா கொரோனா வைரஸ் பிறழ்வு பரவியுள்ளமை தொடர்பில் ஆராய்வதற்காக மற்றுமொரு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டகொரோனா நோயாளிகளின் 96 உயிரிமாதிரிகளைக் கொண்டு இந்த ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை,நீர்பீடணம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இந்த மாதிரிகள் எழுமாறாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளின் முடிவுகளை இன்னும் ஒரு வாரத்தில் வெளியிட எதிர் பார்த்துள்ளதாக சந்திம ஜீவந்தர மேலும் குறிப்பிட்டுள்ளார்

## தொழிற்சங்கத்தினரை...

அடக்கும் முயற்சியில் தற்போது அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என கிழக்கு மாகாண இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் நவரட்ணம் ஜெயதீபன் தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர்கள் முன்னெடுத்துள்ள தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பொன்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அதன் திருகோணமலை பணிமனையில் நடத்தியது. இச்சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்நாட்டின் இலவச கல்வியை குழிதோண்டி புதைத்து கல்வியை தனியார்மயப்படுத்தும் செயல்பாடான சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிராக ஜூலை 8ஆம் திகதி நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட பலர் கைதுசெய்யப்பட்டனர். இக்கைதானது அரசியல் யாப்பில் காணப்படும் எதிர்ப்புகளைத் தெரிவிக்கும் உரிமையை முற்றாக மீறும் செயல்பாடாகும்.

கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தினால் விடுதலைசெய்யப்பட்ட ஜோசப் ஸ்டாலின் உட்பட பலர் நீதிமன்ற வளாகத்திற்கு வெளியில் வரும்போது பொலிஸாரால் பலவந்தமாக கடத்தப்பட்டு தனிமைப்படுத்தல் என்னும் போர்வையில் முல்லைத்தீவு விமானப்படை முகாமுக்குள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

2020 மார்ச் 12ஆம் திகதி தொடக்கம் நோய்ப் பரவல் காரணமாக பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. இந்நிலைமையில் ஒரு வருடமும் 3 மாதங்களும் கடந்த நிலையில் தொலைக்கல்வி முறைகள் பல காணப்பட்டபோதும் கொவிட்-19 நிலைமையால் பாதிக்கப்பட்ட பாடசாலை கல்வியை கொண்டுசெல்வதற்கு அரசாங்கத்தின் ஒரே தீர்வாக காணப்படுவது நிகழ்நிலை (online) கற்பித்தல் மாத்திரமே ஆகும்.

எனினும், கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வி அதிகாரிகள் மூலம் நிகழ்நிலை கற்பித்தலுக்குத் தேவையான கருவிகள் மற்றும் தரவு (Data) போன்ற எவ்வித வசதிகளும் ஆசிரியருக்கு ஏற்பாடுசெய்து தரப்படாத நிலையில், தற்போது நடைபெறுகின்ற நிகழ்நிலை கற்பித்தலுக்குத் தேவையான செலவுகளை ஆசிரியர்களே சுயமாக மேற்கொள்கின்றார்கள். எனினும், இம்முறையின் மூலம் 60 வீதத்துக்கு அதிகமான மாணவர்கள் பாதிப்படைகின்றனர்.

இந்நிலைமையில் கல்வி அமைச்சு, மாகாண மற்றும் வலய கல்வி பணிமனைகள் மூலமாக ஆசிரியர்கள் சுயமாக மேற்கொள்ளும் நிகழ்நிலை கல்வி செயற்பாடுகளை மேற்பார்வை செய்து வருகின்றது. ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமல் அவர்கள் சுயமாக முன்வந்து செய்யும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

மேலும், இந்நாட்டின் கல்வி செயற்பாடுகளில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடானது 24 வருடங்கள் கடந்தும் இன்னும் தீர்க்கப்படாமல் தொடர்ந்து செல்கின்ற நிலையே காணப்படுகின்றது. ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் தொடர்ச்சியாக இவ்விடயத்தில் எம்மை ஏமாற்றி வருகின்றன. இந்நாட்டின் அரசு ஊழியர்களின் குறைந்த சம்பளத்தை பெறுகின்றவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள். ஆசிரியர் சேவை தரம் இருப்பவரின் நாட்சம்பளம் ரூபா 1,498 ஆகும். எனவே, அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றோம்.

இதேபோன்று தமது உரிமைகளைக் கோரி போராட்டங்களில் ஈடுபடும் விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர் உட்பட பொது மக்களை அடக்கும் செயற்பாட்டை அரசாங்கம் வெட்கமின்றி முன்னெடுத்து வருகின்றது. எதிர்வரும் காலங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்த்துக்கொள்ளும் போராட்டத்தை முறியடிப்பதற்கான செயற்பாடாக ஆசிரியர் தொழிற்சங்கத் தலைவர்களை கைதுசெய்தும் தடுத்தும் வைத்திருப்பதன் மூலமான செயற்பாடுகளின் மூலம் இது தெளிவாகின்றது.

மேற்படி கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக தற்போது சுய விருப்பத்தோடு செயல்படுத்தும் நிகழ்நிலை கற்பித்தலிலிருந்து விலகுதல் மற்றும் உயர்தர விண்ணப்பப்படிவம் இணையம் மூலம் விண்ணப்பிக்கும் செயற்பாடுகளிலிருந்து விலகி தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் எனவும் கிழக்கு மாகாண இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் நவரட்ணம் ஜெயதீபன் குறிப்பிட்டுள்ளார்.

## போராட்டக்காரர்கள்...

மற்றும் பரிசோதகர்களின் ஆலோசனைக்கு அமையவே தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேச்சு சுதந்திரத்தை இல்லாது செய்வதற்கோ அல்லது முடக்குவதற்கு எங்களுக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை என்பதை நாங்கள் பொறுப்புடன் கூறிக்கொள்கின்றோம். ஆகவே, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சுகாதார அதிகாரிகள் மற்றும் பரிசோதகர்களின் ஆலோசனைக்கு அமையே தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இது அரசாங்கத்தின் நோக்கத்திற்காக முன்னெடுக்கப்பட்ட விடயமல்ல. மாறாக, தொற்று பரவுவதை கட்டுப்படுத்துவதற்கான சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சுகாதார விதிமுறைகளுக்கமைய பரிசோதகர்களின் அனுமதியுடனே தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் அரசாங்கத்தின் எவ்வித தலையீடுகளும் இல்லை. இது முற்றுமுழுதாக சுகாதார அதிகாரிகளின் தலையீட்டுடன் முன்னெடுக்கப்பட்ட விடயமாகும்.

இன்று மட்டுமல்ல, கடந்த காலங்களிலிருந்து இவ்வாறான செயற்பாடுகள் சுகாதார சேவைகளின் பணிப்பாளரின் ஆலோசனைக்கமையவே இவை அனைத்தும் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக, கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு பிணை வழங்கப்பட்ட பின்னர் பலவந்தமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகின்றன. ஆனால், அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பொது சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனை மற்றும் அனுமதியுடனே அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் - என்றார்.

## குரியர் சேவையூடாக...

கையாளப்படுவதாக தெரியவந்துள்ளது. நான்கு தினங்களுக்கு முன்னர் கொழும்பு போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்துக்குத் தகவலொன்று கிடைக்கப்பெற்றிருந்தது.

அந்த தகவலுக்கமைய, கொழும்பிலுள்ள ஒரு குரியர் சேவை நிறுவனத்துக்கு அனுராதபுர பிரதேசத்துக்குப் பொதியொன்றை அனுப்புவதற்கான உத்தரவு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரியவந்தது. அதனடிப்படையில் சம்பந்தப்பட்ட குரியர் நிறுவனத்தினால் அந்த பொதி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்து. அது அனுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரின் பெயருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டிருந்த விசாரணைகளில் தெரியவந்தது.

அதன்பின்னர் அனுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த நபர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்த விசாரணைகளின் பின்னர் இந்த பொதியைப் பெற்றுக்கொடுத்த நபர் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அந்த பொதியில் சிறிய பொம்மையொன்று இருந்ததுடன், அது பரிசளிக்கும் வகையிலேயே அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்த பொதியை அனுப்பிவைத்தவர் தொடர்பில் தேடிப்பார்த்தபோது இலங்கையில் போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் இதற்கு முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்த பெண் ஒருவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டதுடன் அவர் கொம்பனித்தெரு பிரதேசத்தைச் சேர்ந்த குடு நோனி என்றழைக்கப்படும் 49 வயதுடைய ஒருவர்.

அதனடிப்படையில், கடுவலை பிரதேசத்திலுள்ள அவரின் வீட்டைப் பரிசோதனை செய்தபோது அங்கிருந்து 55 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்த பொதியை பெற்றுக்கொள்ளவிருந்த நபர் அனுராதபுரம் பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர்களை கடுவலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதன் பின்னர் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதற்கான உத்தரவுக்கமைய தொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சாதாரண முறையிலன்றி குரியர் சேவையினூடாக போதைப்பொருள் கடத்தல் இடம்பெறுவதற்கான அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விசேடமாகப் பொம்மைகள் போன்ற ஏதாவதொரு பரிசில்களாக பெற்றுக்கொடுக்கப்படும் பொருட்களினூடாக இந்த போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெறலாம். இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# சமூக வலைத்தளங்களினூடான துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பு!

## கடந்த வாரத்தில் மாத்திரம் ஐவரைக் கைதுசெய்துள்ளதாக அஜித் ரோஹண தெரிவிப்பு

இணையத்தளம் மற்றும் சமூக வளைத்தளங்களினூடாக நிர்வாணப் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை வெளியிடும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும், இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணையத்தளம் மற்றும் சமூக வலைத்தளங் களினூடாக துஷ்பிரயோகம் செய்தல், பல்வேறு முறைகளில் படங்களை வெளியிடுதல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

குறிப்பாக திருமணத்துக்கு முன்னர் காதலர்களாக இருக்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள், காணொளிகள் என்பவற்றை வேறொருவரை திருமணம் செய்யும்போது பல்வேறு வழிகளில் சமூக வலைத்தளங்களில் வெளியிடுவது இயல்பான விடயமாக தற்போது மாறியுள்ளது.

இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸ் இணையத்தள குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், கடந்த வாரத்துக்குள் மாத்திரம் 05 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய புறக்கோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த 26



வயது நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர் நிர்வாணப் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதேவேளை, மேலுமொரு 26 வயது நபரொருவர் ராஜகிரிய பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக கண்டி, பூஜாபிட்டிய பிரதேசத்தில் 23 வயது நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரும் இவ்வாறான நிர்வாணப் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார். பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரொருவர் பெண்ணொருவரின் நிர்வாணப் புகைப்படம் மற்றும் காணொளிகளை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா, ஹங்குரகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயது நபரொருவர், இன்னுமொரு நபரின் கடவுச்சொல்லை மாற்றி அவரின் முகப்புத்தகக் கணக்கில் நுழைந்து தேவையற்ற புகைப்படங்களை பதிவிட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சட்டத்துக்கமைய, ஒருவரின் தேவையில்லாத புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை வெளியிடுவது, தண்டனை சட்டக்கோவை மற்றும் தேவையில்லாத பிரசாரங்களை வெளியிடும் சட்டத்துக்கமைய தண்டனைக்குரிய குற்றமாகும். அதனடிப்படையிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய, அவர்கள் பயன்படுத்திய தொழில்நுட்ப உபகரணங்கள், மடிக்கணினிகள், கையடக்கத் தொலைபேசிகள் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துபவர்களிடம் கேட்டுக்கொள்வதாகவும், அவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்தால் அதுதொடர்பில் கடுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 14.07.2021 புதன்கிழமை**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**மேடம்**
வீடு மற்றும் காணி வாங்கும் செயல்கள் இடம் பெறலாம். இல்லத்திலும், காதலிலும் உறவுகள் சீராகும். பணியிடங்களில் பிரச்சினைகள் குறையலாம்.

**ரிஷபம்**
பணிகளில் விரைந்து செயற்படவேண்டியிருக்கும். மாணவர்கள் தங்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இறைவணக்கம் தேவை.

**மிதுனம்**
பணிகள் தேடுவாருக்கு நல்ல பதவிகள் அமையலாம். வியாபாரிகளுக்கு நல்ல நாள். பணியிடங்களில் உங்கள் திறமை நிறைவேறும்.

**கடகம்**
பண விடயங்களிலும், வீட்டைத் தவிர்ந்த உணவிலும் கவனம் தேவை. வாழ்க்கைத்துணை மட்டுமே அனைத்திலும் நன்மை. அதிக செலவு கவலையைத் தரும்.

**சிம்மம்**
இல்லற சூழ்நிலை தம்பதியரிடையே அன்பைப் பெருக்கும். புதுமையான செய்திகள் கிடைக்கக்கூடும். பணிச்சுமை அதிகரித்தாலும் அனைத்தும் சிறப்பாக நடைபெறும்.

**கன்னி**
இன்று நன்மையான நாளாக அமைய இறைவனைத் தியானியுங்கள். கூட்டு வணிகத்தில் சிறிய பிரச்சினைகள் ஏற்படலாம். மனநிலையை தெளிவான நிலைமையில் வைத்திருப்பது நன்மை.

**துலாம்**
நிதி நிலைமை சீராகும். அரசாங்கப் பணிகளில் இருப்பவர்களுக்கு உயர்வு நிலை உண்டாகலாம். வாழ்க்கைத்துணையும் உதவி செய்வார்.

**விருச்சிகம்**
நம்பிக்கை அதிகரிப்பால் மனதில் எதிர்ப்பு உணர்வுகள் குறையலாம். வணிகர்கள் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடலாம்.

**தனுசு**
இல்லத்தில் மகிழ்ச்சியும், உடல்நல மகிழ்ச்சியும் மேம்படலாம். பணித்தேர்வுகள் வெற்றியைத் தரும்.

**மகரம்**
வாழ்க்கைத்துணையிடம் சண்டையிடாது, அன்புடன் விட்டுக் கொடுத்தல் மன அழுத்தத்தைக் குறைக்கும். இறைவணக்கம் அனைத்திலும் அமைதி தரும்.

**கும்பம்**
வீட்டு வேலை திருத்தங்கள் சிறப்புடன் நடைபெறலாம். தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு நல்ல நாள். மிக அவசிய தேவைக்கான கடன் கொடுப்பதும்/வாங்குவதும் மட்டுமே செய்யலாம்.

**மீனம்**
உடல்நலத்திற்காக அதிக பணிகளைக் குறைக்கலாம். பணியிடங்களில் வெகுமதிகள் கிடைக்கப் பெறலாம்.

# குற்றம் தவிர்

Police Roundup

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – தலங்கம

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாலபே பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் தலங்கம பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 10 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் இருவர் கைது – அனுராதபுரம்

அனுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்நாயக்கபுர பிரதேசத்தில், அனுராதபுரம் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, நேற்று முன்தினம் மாலை 4.50 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 13 கிராம் 590 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பூகொட மற்றும் கிரிபத்கொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 34 மற்றும் 39 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – மஹிஜய செவன

மஹிஜய செவன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்ஹர உயன பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் பொலிஸ் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 09 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் மேலுமொரு சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு-14 பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – மஹிஜய செவன

மஹிஜய செவன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்திய உயன பிரதேசத்தில் மஹிஜய செவன பொலிஸ் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் மாலை 3.40 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 08 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயினுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மோதர பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்பிகொட்டுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெத்சர உயன பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் பொரளை பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 670 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளையைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – கல்கிசை

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லிகாராம வீதிக்கு அருகில் கல்கிசை குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் மாலை 5.05 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 620 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு கல்கிசை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – தலங்கம

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலல்கொட பிரதேசத்தில் தலங்கம பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் நேற்று முன்தினம் முற்பகல் 11.15 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் மேலுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹம்பாந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – மன்னார்

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்புக்குளம் மைதானத்துக்கு அருகில் மன்னார் பொலிஸ் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் காலை 8.25 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 03 கிராம் 620 மில்லிகிராம் ஹெரொயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெத்சர உயன பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை 3.25 மணியளவில் பொரளை பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 02 கிராம் 110 மில்லிகிராம் ஹெரொயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா பிரதேசத்தைச் செர்ந்த 27 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

## துப்பாக்கியுடன் நபரொருவர் கைது – கேகாலை

ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளகொல்ல பிரதேசத்தில் கேகாலை குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு ரம்புக்கனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ஹேவாதிவல பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் கைது – பாதுக்கை

பாதுக்கை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹேன்யாய பிரதேசத்தில் பாதுக்கை பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் முன்னெடுக் கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 67.5 லீற்றர் சட்டவிரோத மதுபானம், சட்டவிரோத மதுபான உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் ஆயிரத்து 98 லீற்றர் கோடா மற்றும் மதுபான உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் ஆகியவற்றுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

தும்மோதரை பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை எதிர்வரும் 22 ஆம் திகதி அவிசாவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்து அவரை பொலிஸார் பிணையில் விடுவித்துள்ளனர்.

## புதையல் தோண்ட முயற்சித்த ஐவர் கைது – ஹிங்குராக்கொட

ஹிங்குராக்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிம்புலாவல பிரதேசத்தில் புதையல் தோண்டுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக ஹிங்குராக்கொட பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, நேற்று முன்தினம் இரவு 10. 00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள், பூஜைப் பொருட்கள் மற்றும் சந்தேகநபர்கள் வருகை தந்த 02 மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹிங்குராக்கொட, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 27, 34, 36, 43 மற்றும் 46 வயதுடைய ஐவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

## வீதி விபத்து – கொபெய்கனே

கொபெய்கனே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொரளுவெவ சந்தியில் ஹாதலவ கிளை வீதியில் நா கெலே விகாரை சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் பொரளுவெவயிலிருந்து பயணித்த ரிப்பர் வாகனம் அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளின் பின்னால் மோதியதில் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தவிபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி (பெண்) நிகவெரட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

தித்தெனிய, பொரளுவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் நிக்கவெரட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இந்த விபத்துடன் தொடர்புடைய ரிப்பர் வாகனத்தின் சாரதி தப்பிச்சென்றுள்ளார்.

அவரைக் கைதுசெய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள கொபெய்கனே பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வீதி விபத்து – பிங்கிரிய

பிங்கிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போவத்தை, குருகொட வீதியில் வீரபொகுண பாடசாலைக்கு அருகில் நேற்று முன்தினம் காலை 10. 00 மணியளவில் போவத்தையை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியோரமாகப் பயணித்த பெண்ணொருவரின் மீது மோதியதில் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான பெண் வீரபொகுண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டவேளையில் உயிரிழந்துள்ளார்.

வீரபொகுணகம – வீரபொகுண பிரதேசத்தைச் சேர்ந்த 87 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சிலாபம் வைத்தியசாலையில் அவரின் சடலம் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் மோட்டார் சைக்கிளின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## வீதி விபத்து – அம்பலாங்கொட

அம்பலாங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காலி – கொழும்பு வீதியில் ஊராவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 9.20 மணியளவில் காலியை நோக்கிப் பயணித்த ஜீப் வாகனம் முன்னாள் வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளின் ஓட்டுநரும், பின்னால் பயணித்தவரும் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது ஓட்டுநர் உயிரிழந்துள்ளார்.

தல்கஸபே, எல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் பலபிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்துடன் தொடர்புடைய ஜீப் வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**தொகுப்பு: நா.தினுஷா**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2021, ஜூலை 14ஆம் திகதி, புதன்கிழமை

# அரசின் விரைவு தீர்வு தேவை

ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்தை கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றத்தில் கிழித்தெறிந்துவிட்டு பதவி விலகவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 08ஆம் திகதி நாடாளுமன்றத்திற்கு முன்பாக நடைபெற்ற ஜோன் கொத்தலாவல சட்டமூலத்திற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் உட்பட 30 பேர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த அடக்குமுறை செயற்பாட்டை இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட சகல சங்கங்களும் கண்டனம் தெரிவித்து அவரது விடுதலைக்கான அழுத்தங்களை வழங்கிக்கொண்டிருக்கின்ற நிலையில், இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட அனைத்து சங்கங்களும் ஒன்லைன் மூலமாக சுயமாக கற்பித்தல் செயற்பாடுகளை இலவசமாக முன்னெடுக்கும் ஆசிரியர்களும் பிராந்திய கற்கை நிலையங்களிலிருந்தும் அதன் செயற்பாடுகளிலிருந்தும் உயர்தரப் பரீட்சைக்காக ஒன்லைன் மூலமாக மாணவர்களை விண்ணபிக்கச்செய்யும் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்த ஆசிரியர்களும் அந்தப் பணிகளிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

இலவசக் கல்வியை வலுப்படுத்தவேண்டும், அந்த இலவசக் கல்வி பாதுகாக்கவேண்டும் என்ற நோக்குடன் நாடாளுமன்ற சுற்றுவட்டத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது 30இற்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு பின்னர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் சாத்வீக முறையில் போராட்டங்களை முன்னெடுத்தவர்கள். நாட்டின் அரசியலமைப்பிற்கமைய ஜனநாயக ரீதியாக போராடியவர்கள் இன்று தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். 1994ஆம் ஆண்டிலிருந்து பொருத்தமான சம்பளம் இல்லாமல் தமது கடமைகளை சிறப்பாக முன்னெடுத்துவரும் அதிபர், ஆசிரியர்களின் செயற்பாடுகளை முறியடிக்க வேண்டும், அவர்களின் உரிமையை முறியடிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்த கைதுகள் நடைபெறுவதாக ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடந்த காலத்தில் சம்பள அதிகரிப்பைக் கோரி பல இடங்களில் போராட்டங்களை நடத்தியதாகவும் பெரும்பாலான அதிபர்கள், ஆசிரியர்கள் இந்த நியாயமான போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த காரணத்தினால் அதனைக்கண்டு இந்த அரசாங்கம் அச்சமடைந்து பழிவாங்கல்களை செய்வதாகவும் ஆசிரியர் சங்கத்தினர் குறிப்பிடுகின்றனர்.

கொரோனா காலகட்டத்தில் மாணவர்களுக்கு எந்த கல்வி நடவடிக்கைகளையும் முன்னெடுக்காத இந்த அரசாங்கம், கல்விக் கொள்கையில் தோல்வியடைந்த இந்த அரசாங்கம், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளை கைதுசெய்து அதிபர், ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு கோரிக்கையை முறியடிக்கவேண்டும் என்றவகையில் செயற்படுவதாக கண்டனங்கள் எழுந்திருக்கின்றன.

ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலம் நாட்டின் அரசியலமைப்புக்கும் இறையாண்மைக்கும் சவாலாகியிருப்பதாக கூறியே, பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட சகலரும் இதற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால், மாணவர்கள் மற்றும் தொழிற்சங்கவாதிகளின் மீது அடக்குமுறையை பிரயோகிப்பதில்லையென ஜனாதிபதி ஊடகமொன்றுக்கு தெரிவித்திருக்கிறார்.

அதேசமயம், இலங்கையில் அமைதி ஆர்ப்பாட்டங்களை நடத்தும் பொதுமக்களின் உரிமை பாதுகாக்கப்படவேண்டும். இந்த உரிமை கொரோனா கட்டுப்பாட்டு சட்டங்களால் மீறப்படக்கூடாதென இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளார் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர்.

கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், பொதுமக்களின் பாதுகாப்புக்கப்பால் செல்லக்கூடாது என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், கருத்து வெளியிடும் சுதந்திரம் மற்றும் ஏனைய உரிமைகள் கொரோனா கட்டுப்பாட்டுச் சட்டங்களால் மீறப்படக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஆசிரியர்களின் போராட்டத்துடன் அரசின் அடக்குமுறைகள் தொடர்வதால் பாதிக்கப்பட்டிருப்பது அப்பாவி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளே. கடந்த வருடம்முதல் பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதால் இணையவழி கல்வியை மட்டும் நம்பியிருக்கும் மாணவர்கள் இப்போது ஆசிரியர்களின் போராட்டம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்காக ஆசிரியர் சமூகத்தை ஒரேயடியாக குற்றஞ்சாட்டிவிட முடியாது. அவர்களின் போராட்டத்தை பலவந்தமாக அடக்கமுயன்ற அரசே இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றாக வேண்டும் .

பிள்ளைகள் இணையமூல கல்விக்கு தேவைப்படும் உபகரணங்களை வாங்கவும், அதற்குரிய தொலைபேசி டேட்டாக்களை கொள்முதல் செய்யவும் பெற்றோரின் வருமானத்தில் பெரும்பகுதி செலவாகிறது. சிலர் தமது நகைகளை அடகுவைத்து கடன்களைப் பெற்று அவற்றை வாங்கி வழங்கியிருக்கும்போது மாணவர்களின் இணையவழி கல்வியும் தடைப்பட்டிருப்பது பெரும் கவலைக்குரிய விடயமாகும். அரசு இதனை உடனடியாக கவனித்து மாணவர்களின் பாதிப்பை நிவர்த்தி செய்யவேண்டும்.

ஏற்கனவே கல்விச் செயற்பாடுகள் முடங்கியுள்ள சூழ்நிலையில், பரீட்சைகள் எப்போதும் நடக்கலாம் என்ற நிலைமையில் மாணவர்களின் கல்வி இனியும் பாதிக்கப்படக்கூடாது. அரசு இதில் தலையிட்டு உடனடி தீர்வை வழங்கியாக வேண்டும்.

# திண்மக் கழிவுகளால் அவலப்படும் உடப்பு

புத்தளம் மாவட்டத்தின் உடப்பை அண்டிய பிரதேசங்களில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளின் சரியான முகாமைத்துவம் இன்மையால் இப்பிரதேசம் பாரிய சுகாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உடப்பு பிரதேசத்தின் ஒட்டுமொத்த கழிவுகளும் ஊர்பான் கவுன்ஸிலால் சுத்தப்படுத்தப்படுகின்றன. இந்நிலையில், ஒன்றுசேர்க்கப்படும் கழிவுகள் கொட்டப்படும் இடம் முன்னர் குளத்தடியாக இருந்தபோதும் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஆராச்சிகட்டுவ பிரதேச சபை இந்தக் குப்பைகளை வேறோர் இடத்திற்கு இடம் மாற்றியிருக்கிறது. இப்போது இந்தக் குப்பைகள் உடப்பு புளிச்சாக்குளம் பிரதான வீதியின் இருமருங்கிலும் கொட்டப்பட்டு வருகின்றன. மக்கும் மக்காத பிளாஸ்ரிக் ரப்பர் உள்ளிட்ட கழிவுகளும் தலைமயிர், கோழி மற்றும் இறைச்சிக் கழிவுகள், பாவித்த ரப்பர் மற்றும் கண்ணாடிப் போத்தல்கள், உக்காத பைகள், பொலித்தீன்கள் ரப்பர் பொருட்கள் என இந்தப் பிரதேசத்தில் கழிவுகள் நிறைந்து கிடக்கின்றன

இந்தக் கழிவு குப்பைகளை ஆடு, மாடுகள், நாய்கள் உள்ளிட்ட கால்நடைகள் இழுத்துச் செல்வதையும் அவை காற்றில் பறந்து அருகிலிருக்கும் வீடுகளுக்கு செல்வதும் அந்த வீதியூடாக போக்குவரத்து செய்வோருக்கு மூக்கை பொத்திக்கொண்டு போகவேண்டிய அளவுக்கு துர்நாற்றமும் இந்தப் பிரதேசத்தின் அழகை சீரழிக்கின்றன.

இந்தக் குப்பைகளின் மூலம் இப்பிரதேசத்தின் இயற்கை வளங்களான மண், நீர், காற்று என்பன மெல்ல மெல்ல அசுத்தமாகிக்கொண்டு வருகின்றன. இது தவிர, இப்பிரதேசத்தின் கடற்கரையோரங்களில் கொட்டப்படும் கழிவுப்பொருட்கள், குப்பை கூளங்களால் கடற்கரை அழகு மெல்ல சிதைந்து வருகிறது. கடலில் கொட்டப்படும் அனைத்து குப்பைக் கழிவுகளும் பின்னர் கரையில் வந்து ஒதுக்கிவிடுகின்றன.

எத்தனையோ விழிபுணர்வு செயற்பாடுகளை பிரதேச சபை ஊடாக முன்னெடுத்தபோதும் கடற்கரையை அண்டிய பிரதேச மக்களின் அலட்சியப்போக்கு இந்த நிலைமைக்கு பிரதான காரணமாகும். கடற்கரையை காண வரும் மக்கள் அதனை ரசிக்க முடியாமல் முகம் சுழிக்கும் நிலையில், இதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் இது குறித்து முழுமையான ஒரு நீண்டகால தொடர் நடவடிக்கைகளை எடுத்தாலன்றி இன்னும் சிறிதுகாலத்தில் இப்பிரதேசம் பாரியதொரு சிக்கலை எதிர்நோக்க காத்திருக்கிறது.

குப்பைகளை முகாமை செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்தால் இந்த நிலைமையை சீர்செய்ய முடியும். குப்பைகளை பிரதேச சபையின் மூலம் குப்பைகள் கொட்டுவதற்கென முறையான ஓர் இடத்தை தெரிவுசெய்து அங்கே மக்கக்கூடிய கழிவுகள், மக்காத கண்ணாடி றப்பர் பொருட்கள், தலைமுடி உள்ளிட்ட இதர குப்பைகள், பொலித்தீன் பைகள், கண்ணாடி மற்றும் றப்பர் போத்தல்களை தனித்தனியே பிரித்து ஓர் இடத்தில் சேர்ப்பதன் மூலம் முதற்கட்டமாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். பின்னர் இதிலிருந்து திண்மக் கழிவுப்பொருட்களை வேறுபடுத்தி அதனை மீள்சுழற்சிக்கு உட்படுத்துதல் மற்றும் மக்கும் குப்பைகளை உரமாக்கும் செயற்பாட்டை மின்னெடுத்தல் மிக மிக அவசியம்.

மக்காத குப்பைகளான பிளாஸ்ரிக் போத்தல்கள், பொலித்தீன் பாவனை பொருட்களை பயன்படுத்தி கைப்பணி பொருட்கள் செய்வது உள்ளிட்ட தூர நோக்குடன் செயற்பட்டால் நாட்டில் இதுபோன்ற பாரிய சிக்கல்களுக்கு தீர்வாக அமையும். மேலும், இவை மண்ணில் புதையுண்டு போவதால் மண்ணுக்கு மேலும் கீழுமான தொடர்பு அற்றுபோய் நீர் உள்ளிட்ட இயற்கை பொருட்கள் மண்ணுக்குள் செல்லாமல் மேலேயே தேங்கிவிடுவதால் மண் வளமற்று போகிறது. இது மெல்ல மெல்ல மண்ணை மலடாக்கும் செயலாகும்.

குப்பைகள் என்பது உரமாக்கப்பட வேண்டும். உரமாக்கி அது மீள்சுழற்சிக்கு வரவேண்டும். முந்தைய தலைமுறைகள் பாதுகாத்து பத்திரமாக கொடுத்த இயற்கையை - இயற்கை வளங்களை நாமும் பத்திரமாக நம் அடுத்த தலைமுறைக்கு கொடுப்பது நம் கடமை. அதனை சரிவரச்செய்து மேற்கொள்ள வேண்டிய விடயங்களை உரிய தரப்பு முன்னெடுக்க வேண்டிக் கொள்கிறார்கள் இப்பிரதேச மக்கள்.



(கிரிசலிஸ் அமைப்பினர் முன்னெடுக்கும் திண்மக்கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் அமைப்பின் உடப்பு பிரதேச செயற்பாட்டாளர் கணேஸ்)

# என்னவாகும் ஆப்கானிஸ்தான்?

'சாம்ராஜ்ஜியங்களின் மயான பூமி' என்கிற அடைமொழி ஆப்கானிஸ்தானுக்கு உண்டு. ஆப்கானிஸ்தானிலிருந்து தனது படைகளை திரும்பப்பெறுவது என்கிற அமெரிக்காவின் முடிவு, ஆப்கன் தேசிய அரசை மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகத்தையுமே அச்சத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

கடந்த எட்டு ஆண்டுகளாக தலிபான்களுக்கு எதிரான தேசிய அரசை வலுப்படுத்தவும், எல்லாவிதத் தாக்குதல்களையும் சமாளிக்க முடியும் என்கிற நிலைமையை ஏற்படுத்தவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆப்கானியர்களின் தலைமையில்தான் தலிபான்களை வீழ்த்தி ஆட்சி அமைய வேண்டும் என்று மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இப்போது வீணாகிவிடுமோ என்கிற கவலையை எழுப்புகிறது அமெரிக்காவின் சுயநல முடிவு.

பிற நாடுகளில் அமெரிக்கா தலையிட்ட போதெல்லாம் தனது இலக்கை அடையாமல் தோல்வியுடன் திரும்பியது அதற்கு அமெரிக்காவும் முக்கியமான காரணம்.

வியட்நாம், ஈராக் பிரச்சினைகளில் அமெரிக்கா தனது நோக்கத்தை நிறைவேற்றிவிட்டு பின்வாங்கியது என்பதுதான் வரலாறு. வியட்நாமிலும் சரி, அதன் பிறகு ஈராக்கிலும் சரி அமெரிக்கா முன்மொழிந்த இராணுவ முயற்சிகள் அரைகுறையாக முடிந்தன என்பதை உலகறியும். இதற்கு முன்னால் ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சியைக் கவிழ்ப்பதில் காட்டிய முனைப்பை ஈராக்கில் அமைதியை ஏற்படுத்துவதிலும், அங்கு நல்லாட்சியை நிறுவுவதிலும் அமெரிக்கா காட்டவில்லை. அதன் விளைவாக ஐஎஸ் பயங்கரவாத அமைப்பு பூதாகரமாக வளர்ந்து, இப்போது உலகத்தையே பயமுறுத்திக்கொண்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் இதற்கு முன்னால் நடந்த சோவியத் யூனியனின் இராணுவத் தலையீடும் தோல்வியில்தான் முடிந்தது. என்றால், ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளிடம் மண்டியிட்டு சரணடைந்திருக்கிறது. எந்தவித பின்புலமோ, ஆட்சியதிகாரமோ இல்லாத பயங்கரவாதிகளிடம் அடிபணிவதென்பது அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளுக்கு ஏற்படும் மிகப் பெரிய அவமானம். அல்கொய்தாவுக்கும் அதன் தலைவர் ஒசாமா பின்லேடனுக்கும் முடிவு கட்டியது மட்டும்தான் அமெரிக்கா அடைந்த இலாபம்.

ஆப்கானிஸ்தானில், ஆப்கான் தேசிய இராணுவமும், காவல்துறையும் மிகத் துணிவுடன் கடந்த 20 ஆண்டுகளாக தலிபான்களை எதிர்கொள்கின்றன. ஏறத்தாழ மூன்று இலட்சம் வீரர்கள் கொண்ட அந்தப் படைகள் ஆண்டொன்றுக்கு சராசரியாக 8,000 உயிரிழப்புகளை எதிர்கொண்ட நிலையிலும், தலிபான்களுக்கு எதிரான நிலைப்பாட்டிலிருந்து தளராமல் இருந்திருக்கின்றன. ஆப்கன் தேசிய அரசின் அங்கத்தினர்களும் உயிரையும் பொருட்படுத்தாது துணிந்து நின்றார்கள். அவர்களுக்கு நம்பிக்கை மோசம் செய்திருக்கிறது அமெரிக்கா.

ஆப்கன் தேசிய இராணுவத்தை அமெரிக்கா நம்பவில்லை. தனது இராணுவத்தை ஆப்கானிஸ்தானில் நிலைநிறுத்தி பாதுகாப்பு வழங்க முற்பட்டதே தவிர, ஆப்கன் இராணுவத்துக்குப் போதுமான தளவாடங்களை வழங்குவதிலோ, அவர்களுக்குப் போர்ப்பயிற்சி வழங்குவதிலோ ஆர்வம் காட்டவில்லை. அவர்களிடம் நவீன ஆயுதங்களை வழங்கினால் அவை தலிபான்கள் கையில் சிக்கிவிடுமோ என்கிற அச்சத்துடன் செயற்பட்டதால் இப்போது ஆப்கன் இராணுவம் செயலிழந்து நிற்கிறது.

அமெரிக்காவை போலல்லாமல், ஆப்கான் இராணுவ அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் இந்திய இராணுவம் பயிற்சியளித்திருக்கிறது. தளவாடங்களையும் தந்து உதவியிருக்கிறது. இராணுவத்துடன் மட்டுமல்லாமல், ஆப்கன் மக்கள் மத்தியிலும் தனது வளர்ச்சிப் பணிகளாலும் உதவிகளாலும் நன்மதிப்பை பெற்றிருக்கிறது.

அமெரிக்கா நினைப்பதுபோல் தனது படைகளின் வெளியேற்றம் தலிபான்களுக்கும் அஷ்ரப் கனி தலைமையிலான ஆப்கன் அரசுக்கும் இடையில் உடன்பாடு ஏற்படுத்தும் என்கிற எதிர்பார்ப்பு வெறும் மாயை. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா, அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையைக் குறைக்கத் தொடங்கியபோதே தலிபான்கள் விழித்துக் கொண்டுவிட்டனர்.

ஆப்கானிஸ்தானின் 120 மாவட்டங்களில் தலிபான்களுக்கும், பொது மக்களின் ஆதரவுள்ள ஆப்கான் படைகளுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அகதிகளாக மக்கள் காபூலை நோக்கி நகரத் தொடங்கியிருக்கிறார்கள். மிகப் பெரிய குழப்பம் ஏற்பட்டு, ஆட்சி நடத்த முடியாமல் அஷ்ரப் கனி உள்ளிட்டோர் ஆப்கானிஸ்தானிலிருந்து ஓடிவிடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றனர் தலிபான் பயங்கரவாதிகள்.

ஆப்கனில் வெற்றிடம் ஏற்படுவதை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது சீனா. பாகிஸ்தானுக்கும், ஈரானுக்கும் அடுத்தபடியாக தனது வலையில் ஆப்கானிஸ்தானையும் வீழ்த்தக் காத்திருக்கிறது.

நன்றி - தினமணி

# அமைச்சரவை தீர்மானங்கள்!

## 2021.07.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிய பிள்ளைகளின் சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் ஒன்பது அலகுகளை மாகாண மட்டத்தில் நிறுவுதல்**

பல்வேறு வகையில் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிய பிள்ளைகளால் வழங்கப்படும் குறித்த சம்பவத்திற்குரிய சாட்சிகள் மிகவும் முக்கியமானவையாகும். எனினும், அவ்வாறு பாதிக்கப்பட்ட பிள்ளையொருவர் நீதிமன்றத்தில் திறந்த அரங்கில் சாட்சி வழங்கும்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுவதால், குறித்த சாட்சிகள், ஒளிப்பதிவு செய்து பெற்றுக்கொண்டு சமர்ப்பிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் 1999ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க சாட்சியங்கள் (விசேட ஏற்பாடு) சட்டத்தின் மூலம் இலங்கையின் நீதித்துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, 2001ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் காணொளி பதிவுசெய்யும் அலகொன்றைத் தாபித்து சாட்சிகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது கொழும்பில் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றன. குறித்த வசதிகளை மாகாண மட்டத்தில் ஏற்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கியதாக மருத்துவமனை சார்ந்த சாட்சியங்களை ஒளிப்பதிவுசெய்யும் ஒன்பது அலகுகளை நிறுவுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகமும் சீனாவின் செங்டு விவசாயக் கல்லூரிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்**

இரு தரப்பினருக்குமிடையில் கல்வி மற்றும் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகள் தொடர்பான தரவுகள் மற்றும் தகவல்கள் பரிமாற்றம், பணிக்குழாம் மற்றும் மாணவர் பரிமாற்றம், ஒருங்கிணைந்த பாடவிதான அபிவிருத்தி மற்றும் பகிர்ந்துகொள்ளல், தேயிலை மற்றும் மூலிகைப் பயிர்கள் தொடர்பான ஒருங்கிணைந்த ஆராய்ச்சிகளை நடத்துதல் மற்றும் உற்பத்தி போன்ற துறைகளின் ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் ஜப்பான் மெய்ஜோ பல்கலைக்கழகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எட்டுதல்**

மாணவர்கள் மற்றும் பணிக்குழாம் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல், பொதுவாக ஆர்வம் காட்டும் துறைகளின் கல்வி வெளியீடுகள் மற்றும் கற்றல் உபகரணங்களைப் பரிமாறிக்கொள்ளல், ஒருங்கிணைந்த கற்றல்கள் மற்றும் விஞ்ஞான ரீதியான செயற்பாடுகள் தொடர்பான விரிவுரைகள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை ஒழுங்குபடுத்தல் போன்ற நோக்கங்களை உள்ளடக்கியதாக பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் ஜப்பான் மெய்ஜோ பல்கலைக்கழகத்திற்கும் இடையில் உயர்கல்வி ஒத்துழைப்புகளை ஏற்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இலங்கையில் இலத்திரனியல் வாகனப் பாவனையை அதிகரித்தல்**

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் தரவுகளுக்கமைய 2020ஆம் ஆண்டிறுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 08 மில்லியன்களைத் தாண்டியுள்ளது. அவற்றில் குறிப்பிடத்தக்களவு வாகனங்கள் 10 வருடங்களுக்கும் அதிகமாக பழைய வாகனங்களாவதுடன், அவ்வாறான பழைய வாகனங்கள் சரியான வகையில் பராமரிக்கப்படாமையால் நச்சு வாயுக்கள் வெளியிடப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையின் வாயு மாசடைதலில் 60 வீதமானவை மோட்டார் வாகனங்களால் இடம்பெறுவதாக மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மீள்பிறப்பாக்க எரிசக்தித் திட்டங்களைத் துரிதமாக மேற்கொள்வது அரசாங்கத்தின் முன்னுரிமைப் பணியாக அமைவதால், மோட்டார் வாகனப் போக்குவரத்திற்கு மீள்பிறப்பாக்க எரிசக்தியைப் பயன்படுத்துதல் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, இலத்திரனியல் வாகனப் பாவனையை ஊக்குவிப்பதற்காக மூலோபாயத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




**05. பரிஸ் ஒப்பந்தத்திற்கமைய தேசிய ரீதியில் நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புகள் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான சட்டகப்படுத்தப்பட்ட சமவாயத்திற்கு சமர்ப்பித்தல்**

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான சட்டகப்படுத்தப்பட்ட சமவாயத்தில் அரசாங்கம் என்ற ரீதியில் இலங்கை 1993ஆம் ஆண்டு தொடக்கம் செயலாற்றிவருகின்றது. அதற்கமைய, இலங்கை 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பரிஸ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதுடன், அந்த வருடம் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி குறித்த ஒப்பந்தத்தை தேசிய ரீதியாக உறுதிசெய்துள்ளது. உலக வெப்பமயமாதல், தொழிற் புரட்சிக்கு முன்னிருந்த மட்டத்துடன் ஒப்பிட்டு வெப்பநிலையை 02 செல்சியஸ்களுக்குக் குறைவாகப் பேணுதல், குறித்த வெப்பநிலையை 1.5 செல்சியஸ் மட்டத்திற்குச் செல்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதே பாரிஸ் ஒப்பந்தத்தின் பிரதான நோக்கமாகும். குறித்த நோக்கங்களை அடைவதற்காக பங்காளர்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தேசிய ரீதியில் நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புகள் என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, 2020 - 2030 காலப்பகுதியில் இலங்கை நடைமுறைப்படுத்துவதற்கு அடையாளங்காணப்பட்டுள்ள முதலாவது தேசிய ரீதியில் நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புகள் அமைச்சரவை அங்கீகாரத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான சட்டகப்படுத்தப்பட்ட சமவாயத்திற்கு 2016ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிரதான 14 துறைகளின்கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறித்த பங்களிப்புகள் 05 வருடங்களுக்கு ஒருமுறை காலத்தோடு தழுவியதாக மேம்படுத்தி மேலும் திட்டவட்டமான இலக்குகளுடன் மீளத் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடத்தப்படவிருந்த பங்காளர்களுக்கான 26ஆவது கூட்டத்தொடர் குறித்த மேம்படுத்தப்பட்ட பங்களிப்புகளை சமர்ப்பிப்பதற்கு நிச்சயிக்கப்பட்டிருப்பினும், கொவிட் தொற்று நிலைமையால் குறித்த கூட்டத்தொடர் 2021 நவம்பர் மாதம்வரை பிற்போடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த துறைகளின் பங்காளி நிறுவனங்களின் பங்குபற்றலுடன் அரசாங்கத்தின் சமகாலக் கொள்கைகளுக்கமைய மீண்டும் மேம்படுத்தப்பட்டுள்ள தேசிய ரீதியில் நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புகள் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான சட்டகப்படுத்தப்பட்ட சமவாயத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், குறித்த பங்களிப்புகள் வினைத்திறனாகவும் பயனுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை தொடர்பாக கண்காணிப்பதற்கான நடவடிக்கைக் குழுவொன்றை அமைப்பதற்கும் சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. இலங்கைக்கான டிஜிட்டல் சுற்றுலாப் பயணிகளுக்கு நட்புமிகுந்த பயணத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால விஸா அனுமதியொன்றை அறிமுகப்படுத்தல்**

வாழ்வாதாரத்திற்காக டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும், சுற்றுலாப் பயணிகளாக நாடு நாடாக பயணித்து வாழ்ந்துவரும் நபர்கள் டிஜிட்டல் சுற்றுலாப் பயணிகள் என அழைக்கப்படுவர். அவ்வாறான சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை வழங்கல் சுற்றுலாத்துறையின் போக்காக அண்மைக்காலத்தில் வளர்ந்துவருகின்றது. டிஜிட்டல் சுற்றுலாப் பயணிகள் கூடுதலாக உணவு விடுதிகள், பொது நூலகங்கள் மற்றும் அவ்வாறான இடங்களில் பொழுதுபோக்காக வாகனங்களில் இருந்துகொண்டே இணையத்தள வசதிகளுடன் உபகரணங்களைப் பயன்படுத்தி மெய்நிகர் (online)) வழியாக சில சேவைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். தொடர்பாடலுக்காக அதிதுரித இணையத்தள வசதிகள் இருத்தல், நீண்டகால விஸா அனுமதிப்பத்திரம், இலாபகரமான தங்குமிட வசதிகள், வருமான வரிகளை விடுவித்தல் போன்றவை அவ்வாறான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுப்பதற்கு ஏதுவான காரணிகளாக அமையும். டிஜிட்டல் சுற்றுலாப் பயணிகளை எமது நாட்டுக்குக் கவர்ந்திழுத்தல், அதிக காலம் எமது நாட்டில் தங்கி வைத்திருப்பதற்கான வசதிகளை வழங்குவதன் மூலம் அதிகமான அந்நிய செலாவணியை எமது நாட்டுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கமைய டிஜிட்டல் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுப்பதற்காக இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தால் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும், டிஜிட்டல் சுற்றுலாப் பயணிகளுக்கு நீண்டகால (ஒரு வருடம் வரை) விஸா அனுமதிப்பத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்காகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. விளையாட்டுத்துறையின் பங்களிப்புகளை பலப்படுத்துவதற்காக இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்**

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் விளையாட்டுத்துறையில் பங்களிப்புகளை பலப்படுத்துவதற்காக இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்கீழ், மெய்வல்லுனர் விளையாட்டுகள், நீச்சல், ஜிம்னாஸ்ரிக், கைப்பந்து, பாரம் தூக்கல், குத்துச்சண்டை, வாள் சண்டை, காற்பந்து மற்றும் ஸ்கொஷ் போன்ற விளையாட்டுத்துறைகளுக்காக விளையாட்டுப் போட்டிகள் நிறுவனம், உயர்கல்வி விளையாட்டு நிறுவனம், விளையாட்டு சம்மேளனம் மற்றும் இதர அங்கீகாரம் பெற்ற விளையாட்டு அமைப்புகளுக்கிடையிலான நிகழ்ச்சித் திட்டங்கள், அனுபவங்கள் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. 1964ஆம் ஆண்டு 29ஆம் இலக்க நீர்வளச் சபைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

மட்டுப்பாடற்ற வகையில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக நிலத்தடி நீரைப் பயன்படுத்தலைக் கட்டுப்படுத்தல் மற்றும் நீர் மாசுபடுவதைத் தடுக்கும் நோக்கில், அவ்வாறான செயற்பாடுகளை நீர்வளச் சபையின் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகளுக்காக 1964ஆம் ஆண்டு 29ஆம் இலக்க நீர்வளச் சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த கட்டளைகள் 2017 மார்ச் மாதம் 16ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. ஆனாலும், அது தொடர்பான குற்றங்கள் மற்றும் அவற்றுக்கான தண்டனைகளை விதிப்பதற்குப் போதுமான ஏற்பாடுகள் நீர்வளச் சபைச் சட்டத்தில் காணப்படாமை கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல் குறித்த கட்டளைகளுக்கமைய நீர்வளச் சபையின்கீழ் பதிவுசெய்யப்படாத சட்டவிரோத ஆழ்துளை இயந்திரங்களை வைத்திருத்தல் மற்றும் பயன்படுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தாலும், குறித்த கட்டளைகளை மீறும்போது சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதுமானளவு சட்ட ஏற்பாடுகள் தற்போது நீர்வளச் சபைச் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. அதனால், மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காகவும் குறித்த சபையால் சேவைகளை வழங்கும்போது எதிர்கொள்ள நேரிட்டுள்ள ஏனைய சவால்களுக்கும் தேவையான சட்ட ஏற்பாடுகளை தயாரிப்பதற்காக பொருத்தமான சட்ட ரீதியான ஏற்பாடுகளைக் குறித்த சட்டத்தின்மூலம் அறிமுகப்படுத்துவதற்காக நீர் வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. நீர்த்துறை சமகாலத்திலும் எதிர்காலத்திலும் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

1974ஆம் ஆண்டு 02ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1975ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தற்போது 331 நீர் வழங்கல் முறைகளை நடைமுறைப்படுத்தி 2.4 மில்லியன் வீட்டு அலகுகளுக்கான இணைப்புகள் மற்றும் 2,07,000 வர்த்தக ரீதியான இணைப்புகளையும் செயற்படுத்தி வருகின்றது. அதன்கீழ் நாட்டின் மொத்தமான 93.8 வீதமான பாதுகாப்பான குடிநீர் வழங்கலில் 43.8 வீதத்தை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றது. ஆனாலும் கடந்த சில வருடங்களாக இடம்பெற்றுவரும் துரித நகரமயமாதல், காலநிலை மாற்றங்கள், நீருக்கு அதிகரித்துள்ள நுகர்வோர் கேள்வி மற்றும் நீர்த்துறை நடவடிக்கைகளுக்காக டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல் போன்ற விடயங்களுக்கு எதிர்காலத்தில் முகங்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேற்கொள்ளவேண்டியுள்ளது. குறித்த செயற்பாடுகளை எதிர்கொள்வதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டம் திருத்தப்பட்டிருந்தாலும், சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் குறித்த சட்டத்தை மேலும் திருத்தவேண்டியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் தொடர்பாக அரச மற்றும் தனியார் துறையினரின் பங்காளர்களிடம் யோசனைகளையும் பரிந்துரைகளையும் பெற்றுக்கொண்டு அடிப்படைச் சட்டமூலத்தை தயாரிப்பதற்கு நீர் வழங்கல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்காக நீர் வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. ஆண்டின் நடுப்பகுதிக்கான நிதி நிலைமை தொடர்பான அறிக்கை**

2003ஆம் ஆண்டு 03ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய ஆண்டின் நடுப்பகுதியின் நிதி நிலைமை தொடர்பான அறிக்கை நிதி அமைச்சர் பொதுமக்களுக்கு ஒவ்வொரு நிதியாண்டிலும் ஜூன் மாத இறுதியில் சமர்ப்பிக்கவேண்டியதுடன், பின்னர் குறித்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கமைய, 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள 2021ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கான நிதி நிலைமை தொடர்பான அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 2021/2022 பெரும் போகத்திற்கான நெற்செய்கையில் விவசாயிகள் உரத்தைத் தயாரித்து பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டம்**

2021/2022 பெரும்போகத்திற்காக 8,00,000 ஹெக்ரயர்கள் அளவில் நெற்செய்கைக்கான சேதன உரத்தைத் தயாரித்துக்கொள்வதற்காக கமத்தொழில் அமைச்சு வேலைத்திட்டமொன்றைத் தயாரித்துள்ளது. அதன்கீழ் பிரதானமாக கமநல சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் பிரகாரம் விவசாயிகள் தரமான சேதன உரத்தைத் தயாரிப்பதற்கும், அனுமதிப்பத்திர உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளையின் அளவுகளை அதிகரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, சேதன உரத்தைத் தயாரிக்கும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக சேதன உரத்தைத் தயாரித்து தமது விவசாய நிலங்களுக்குப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு ஹெக்ரயர் ஒன்றுக்கு 12,500 ரூபா வீதம் உயர்ந்தபட்சம் 02 ஹெக்ரயர்களுக்கு (05 ஏக்கர்கள்) அதிகரிக்காமல் ஊக்குவிப்புக் கொடுப்பனவை செலுத்துவதற்காக கமத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)**

# சீரற்ற காலநிலையால் குருநாகல் – கண்டி வீதியில் ஐந்து மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்தது



(கண்டி)

கண்டி - குருநாகல் பிரதான வீதியில் யடிவாவெல, செனரத்கம என்ற இடத்தில் புதிதாகக் கட்டப்பட்டு வந்த ஐந்து மாடிக் கட்டடமொன்று இடிந்து விழுந்துள்ளதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குருநாகல் – கண்டி வீதியில் கட்டுகஸ்தோட்டை முச்சந்திக்கு 02 கிலோமீற்றர் தொலைவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ஐந்து மாடிக்கட்டடம் ஒன்று நேற்று முன்தினம் (12) மாலை தாழிறங்கியுள்ளதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதனால், மறு அறிவித்தல் வரை கட்டுகஸ்தோட்டை – குருநாகல் வீதியில் கனரக வாகன போக்குவரத்தில் இருந்து விலகியிருக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக கட்டடம் இடிந்து விழுந்துள்ளதாகவும் கட்டடம் சரிந்தபோது எவரும் அருகில் இல்லாத நிலையில் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என்றும் கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தினால் குறித்த வீதியின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

# நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளராக திருமதி பி.கே.போதிமான்ன நியமனம்

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளராக திருமதி பி.கே.போதிமான்ன நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்று (13) நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, நுவரெலியா மாநகர சபையின் மேயர் சந்தனலால் கருணாரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளராகப் பணியாற்றிய பி.ஏ.சரத்சந்திர புத்தசாசன, பௌத்த மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராக இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து, திருமதி பி.கே.போதிமான்ன நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இதற்கு முன்னர் இவர் நுவரெலியா பிரதேச செயலாளராகவும், நுவரெலியா மாநகர ஆணையராகவும் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்படும் வரை போராட்டம் தொடரும்

(தலவாக்கலை நிருபர்)

கைதுசெய்யப்பட்டு, தனிமைப் படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட தொழிற்சங்க உறுப்பினர்களை விடுவிக்கும்வரை போராட்டம் தொடரும் என ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனிதாபிமானமற்ற இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அரசாங்கத்தின் மீது எனது கண்டனத்தை தெரிவிப்பதுடன், பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்க தலைவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

கொரோனா தொற்று காரணமாக தற்போது இணையத்தளம் ஊடாக கற்பித்தல் நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் 12 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இணையத்தள கற்பித்தல் நடவடிக்கைகளிலிருந்து விலக அதிபர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் தீர்மானித்தன.

கடந்த வாரம் பத்தரமுல்லை பொல்துவ சுற்றுவட்ட சந்திக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் பலரும் கைதுசெய்யப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இணையத்தள கற்பித்தல் நடவடிக்கைகளிலிருந்து ஆசிரியர்கள் வெளியேறினர்.

இந்த பணிப்பகிஷ்கரிப்பு இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எமக்கு நியாயமான முடிவு கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும் என்றார்.

# மஸ்கெலியாவில் 8,067 பேருக்கு இன்று முதல் இரண்டாம் கட்ட தடுப்பூசி

(கினிகத்தேனை, மஸ்கெலியா நிருபர்கள்)

மஸ்கெலியா பொதுச் சுகாதார பிரதேசத்திற்குட் பட்ட பகுதிகளுக்கான இரண்டாம் கட்ட கொரோனா தடுப்பூசியேற்றும் பணிகள் இன்று முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நடைபெறுவதற்கான அட்டவணை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டி.சந்திரராஜனால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று நோர்வூட் பிரதேச மக்களுக்கு நோர்வூட் சிங்கள பாடசாலையில் காலை 9 மணி முதல் பி.ப 1 மணி வரையிலும், அதே தினத்தன்று கவிரவில்ல மக்களுக்கு காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை கவிரவில தமிழ் பாடசாலையிலும், ஓல்ட்டன் பிரதேச மக்களுக்கு பி.ப 12.30 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை அதே பாடசாலையிலும் இடம்பெறும்.

அதேபோல் நாளை 15 ஆம் திகதி ஸ்டரபி பிரதேச மக்களுக்கு காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கவிரவில தமிழ் பாடசாலையிலும், மாணலி பிரதேச மக்களுக்கு பி.ப 12.30 தொடக்கம் மாலை 3 மணி வரை அதே பாடசாலையிலும் இடம்பெறும். அதே தினத்தன்று மொக்கா பிரதேச மக்களுக்கு காலை 9 மணி தொடக்கம் மு.ப 11.30 மணி வரை மஸ்கெலியா கோவில் மண்டபத்திலும், புரன்ஸ்விக் பிரதேச மக்களுக்கு நண்பகல் 12 மணி தொடக்கம் மாலை 3 வரை அதே கோவில் மண்டபத்திலும் இடம்பெறும்.

மேலும் 16 ஆம் திகதி மஸ்கெலியாவில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும், கெனியன் மின் நிலையத்தில் பி.ப 12.30 முதல் பி.ப. 1.30 மணி வரையும், மௌசாக்கலையில் பி.ப 1.30 முதல் மாலை 3.30 வரை மஸ்கெலியா கோவில் மண்டபத்திலும் இடம்பெறும். அதே தினத்தன்று புரோன்லோவில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மோராவில் பி.ப 12.30 முதல் பி.ப 2 மணி வரையும், சித்தாகனுகலவில் பி.ப 2.30 மணி முதல் மாலை 4 மணி வரை மஸ்கெலியா பொதுசுகாதார வைத்திய நிலையத்திலும் இடம்பெறும்.

அதேபோன்று 17 ஆம் திகதி நிவ்வலியில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும், வனராஜாவில் பி.ப. 12.30 மணி முதல் மாலை 3 மணி வரையும் நோர்வூட் சிங்கள வித்தியாலயத்திலும் இடம்பெறும். அதே தினத்தில் லெதன்டி பிரதேச மக்களுக்கு காலை 9 மணி தொடக்கம் பி.ப. 1 மணி வரை காசல்ரி மின்சார பயிற்சி நிலையத்தில் இடம்பெறும் என அவரால் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஸ்கெலியா பொதுச் சுகாதார பிரிவிற்குட்பட்ட வைத்திய நிலையத்தினூடாக முதல் தடவை தடுப்பூசிகளை பெற்றுகொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 8067 ஆவர். இவர்களுக்கே இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை செலுத்துவதற்கான ஓழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# நுவரெலியா மாவட்டத்தில் 24 மணிநேரத்தில் 106 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

## 148 பேர் உயிரிழப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் இது வரையில் 8058 பேர்கொரோனா தொற்றுடன் இனம் காணப்பட்டுள்ளனர். 148 பேர் உயிரிழந்துள்ளனர். 24 மணிநேரத்தில் 106 பேர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தின் கொரோனா தொற்று தொடர்பாக நேற்று முன்தினம் மாலை வெளியான அறிக்கையின்படி 8058 பேருக்கு தொற்று உறுதியாகி யுள்ளது. இவர்களில் 148 பேர் மரணமடைந் துள்ளனர். 5272 குடும்பங்கள் தனிமைப்படுத் தப்பட்டுள்ளன. நேற்று முன்தினத்துடன் முடிவடைந்த 24 மணித்தியாலயத்தில் 106 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாகவும், 19 குடும்பங் கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அம்பகமுவ பகுதியில் 1911 குடும்பங்களும், கொத்மலை பகுதியில் 1242 குடும்பங்களும் , ஹங்குரன்கெத்த பகுதியில் 244 குடும்பங்களும், வலப்பனை பகுதியில் 1064குடும்பங் களும், நுவரெலியாவில் 811 குடும்பங்க ளுமாக மொத்தமாக 5272 குடும்பங் கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரேனா தொற்று உறுதியானவர் களில் அதிகமானவர்கள் அம்பகமுவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் அம்பகமுவவில் 1522, பொகவந் தலாவையில் 974, ஹங்குரன்கெத்தவில் 412, கொட்டகலையில் 557, கொத்மலையில் 681, லிந்துலையில் 563, மஸ்கெலியாவில் 462, மதுரட்டவில் 142, நுவரெலியா மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களில் 479, புதிய திஸ்பனையில் 760, நுவரெலியாவில் 617, இராகலையில் 526, வலப்பனையில் 363 பேருமாக மொத்தமாக 8058 பேர் பி.சி.ஆர். பரிசோதனையின் மூலமாக தொற்றுடன் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதுவரையில் நுவரெலியா மாவட்டத்தில் 148 பேர் உயிரிழந்துள்ளதுடன், அதில் அதிகமானவர்கள் நுவரெலியா பகுதியிலேயே (55பேர்) உயிரிழந்துள்ளனர். இதுதவிர அம்பக முவ பகுதியில் 51 பேரும், வலப்பனை பகுதியில் 17 பேரும், கொத்மலையில் 21 பேரும், ஹங்குரன்கெத்த பகுதியில் 4 பேருமாக 148 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் நேற்று முன் தினம் (12) மாலை 4 மணி வரை பொகவந் தலாவை பகுதியிலேயே 47 பேர் நோயாளர் களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

# 40 இலட்சம் தென்னை மரக்கன்றுகளை நடும் தேசிய வேலைத்திட்டம் பலாங்கொடையில் ஆரம்பம்



(மஹிந்தகுமார்)

40 இலட்சம் தென்னை மரக்கன்றுகளை நடும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் தென்னை மரக்கன்றுகளை விநியோகம் செய்து வருகின்றார்கள்.

அந்த வகையில் தென்னை மரக்கன்றுகளை விநியோகம் செய்வதற்காக தேங்காய் சாகுபடி வாரியத்தினுடாக நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொடவுக்கு 500 தென்னை மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

தென்னை மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்கிவைக்கும் நிகழ்வை கடந்த 10 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட ஆரம்பித்து வைத்தார்.

பலாங்கொடை - காஹடபிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொடவின் அலுவலகத்தில் வைத்தே குறித்த கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

காமினி வலேபொடயின் பொது ஒருங்கிணைப்பு செயலாளர் குசும்சிறி நேற்று (13) பலாங்கொடை அலுவலகத்தில் பிரதேசத்தில் உள்ள ஊடகவியலாளர்கள் சிலருக்கும், பொதுமக்களுக்கும் தென்னை மரக்கன்றுகள் வழங்கிவைத்தார்.




# ஹட்டன் கல்வி வலய ஆசிரியர்களுக்கு நாளை கொரோனா தடுப்பூசி

(கினிகத்தேனை நிருபர்)

ஹட்டன் கல்வி வலயத்தின் அம்பகமுவ சுகாதார பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான முதலாம் கட்ட கொரோனா தடுப்பூசியேற்றும் பணி நாளை 15 ஆம் திகதி இடம்பெறுமென அம்பகமுவ பொதுச் சுகாதார வைத்திய நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஹட்டன் கல்வி வலயத்தின் அம்பகமுவ சுகாதார பிரதேசத்திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கான கொரோனா முதலாம் கட்ட தடுப்பூசியேற்றும் பணிகள் அன்றைய தினம் காலை 9.00 மணி முதல் கினிகத்தேனை மத்திய கல்லூரியிலும், ஹட்டன் ஸ்ரீபாத பாடசாலையின் மத்திய நிலையத்திலும் ஏற்றப்படும். தடுப்பூ ஏற்றுவதற்குத் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு அதிபர்களினூடாக அறிவிக்குமாறு அம்பகமுவ பொதுச் சுகாதார வைத்திய நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் மருத்துவமனையினால் அதிசொகுசு வசதிகளுடன் கூடிய சர்வதேச தரத்திலான 7 C Wing வாட்டுத் தொகுதி திறப்பு

தேசிய மற்றும் சர்வதேசமட்ட விருதுகள் பலவற்றை வென்றுள்ள இலங்கையின் தரமான சுகாதார சேவை வழங்குநராக தடம்பதித்துள்ள லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் மேலுமொரு படி முன்னேறி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நோயாளர்களுக்கும் சுகாதார சுற்றுலாப் பயணிகளுக்கும் சர்வதேச தரத்திலான சுகாதார சேவை அனுபவத்தை வழங்கும் நோக்கத்துடன் சுமார் 100 மில்லியன் ரூபா முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 7 C Wing வாட்டுத் தொகுதியை அண்மையில் வெகுவிமரிசையாக திறந்துவைத்துள்ளது. அதிநவீன தொழில்நுட்பத்திலான மருத்துவச் சாதனங்கள், ஆகத்தரமான சுகாதார வசதிகள் மற்றும் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்களையும் கொண்டதாக 7 C Wing சொகுசு வாட்டுத் தொகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது.





சகல வசதிகளுடன் கூடிய போதிய இடவசதிகளைக்கொண்ட மனங்கவர் சூழலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வாட்டுத் தொகுதி, நோயாளர்களுக்கும் அவர்களின் விருந்தினர்களுக்கும் அதிகபட்ச பிரத்தியேக சுதந்திரத்தையும் சுகத்தையும் தரவல்லது. ஐந்து நட்சத்திர ஹோட்டல் அறைகளிலுள்ள வசதிகள் அளவுக்கு வசதிகளைக்கொண்ட வதிவிட அறைகளுடன் கூடிய 7 C Wing வாட்டுத் தொகுதி நோயாளர்களுக்கும் சுகாதார சுற்றுலாப் பயணிகளுக்கும் சொகுசு சுகாதார சேவைகளுடன் நேயமிக்க இதமான அனுபவத்தை வழங்குவதோடு நோய்களை துரிதமாக அடையாளங் காணக்கூடிய வகையில் இரசாயன ஆய்வுகூடங்களுக்கு மிக அண்மித்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“பயன்மிக்கதும் வினைத்திறன்மிக்கதுமான சேவைகளுடன் ஆகச்சிறந்த தரத்துடன்கூடிய சர்வதேச மட்டத்திலான சுகாதார அனுபவத்தினை நோயாளர்களுக்கு வழங்குவதற்கு லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் தமது சகல சாத்தியக்கூறுகளையும் ஆதாரங்களையும் பயன்படுத்தி இந்த வாட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு தீர்மானித்தது. ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் வழங்கப்படுகின்ற சொகுசு வசதிகளையும் அனுபவங்களையும் பெறக்கூடிய வகையில் இந்த வதிவிட வாட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மேம்பட்ட தரத்திலான சிகிச்சை சேவைகளுக்கு புகழ் பெற்ற எமது மருத்துவமனைக்கு இப்புதிய சொகுசு வசதிகளுடன் கூடிய வாட்டுத் தொகுதி காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நோயாளர்கள் ஏராளமானோர் எதிர்காலத்தில் வருவார்கள் என்பதை உறுதியாகச் சொல்லமுடியும். நோயாளர்களுக்கு தான் இருப்பது மருத்துவமனையில் என்ற உணர்வை மறக்கடிக்கும் வகையில் கவர்ச்சிகரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த சுகமான சூழல் நோய் விரைவாக குணமடைய காரணமாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை” என லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கூட்டு நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி தீப்தி லொக்குஆரச்சி தெரிவித்தார்.

பொறுப்புமிக்கதும் நம்பிக்கைமிக்கதுமான சுகாதாரசேவை வழங்குநராக பெருமைமிகு வரலாற்றைக்கொண்டுள்ள லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் 2002ஆம் ஆண்டு தொடக்கம் நிகரில்லா சுகாதார சேவைகளை நோயாளர்களுக்கு வழங்குவதோடு, தற்போதைய கொவிட்-19 நெருக்கடி நிலையில் தொற்று மற்றும் வைரஸ் கட்டுப்பாடு தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்து வருவதை எல்லோரும் பாராட்டியுள்ளார்கள். பூகோள பயணத்தடைகள் உள்ளபோதிலும் கடந்த காலங்களில் ஏராளமான சுகாதார சுற்றுலாப் பயணிகள் சேவைகளை பெறுவதற்கு லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் மருத்துவமனைக்கு வருகை தந்தமைக்கு காரணம், உயர்தரத்திலான மருத்துவ சேவையினை பாதுகாப்பான சூழலில் வழங்குவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்தமையாகும்.

சுகாதார சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டவர்கள், இராஜதந்திரிகளுக்கு சிறப்பு சுகாதார சேவையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. குறிப்பாக, மாலைதீவிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் மிகச்சிறந்த செயன்முறைகளின் கீழ் நியூரோன், இருதய, சிறுசீரக மற்றும் எலும்புமுறிவுகள் போன்ற பலதரப்பட்ட சத்திரசிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொள்கிறது. வாரத்தின் 07 நாட்களிலும் 24 மணித்தியாலங்களாக இயங்கும் அவசர சிகிச்சைப் பிரிவு உயிர் அபாயத்துடன் கூடிய நோயாளர்கள் தொடர்பாக சிறப்பு கவனம் செலுத்தி துரித சிகிச்சைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறது. சகல வசதிகளுடன் கூடிய வினைத்திறன்மிக்க அம்பியூலன்ஸ் சேவையுடன் கூடிய லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் ஆகாய மார்க்கமாக நோயாளர்களை அழைத்து வருவதற்கு ஹெலிகொப்டர்களை நிறுத்தி வைக்கும் தளமொன்றையும் கொண்டுள்ளது.

## மக்கள் வங்கியின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

# தேசிய வைத்தியசாலைக்கு அதிநவீன செல்லிட ஸ்கேனர் இயந்திரம்




மக்கள் வங்கியின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சமூக பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் ஒரு பகுதியாக மக்கள் வங்கி ஊழியர்களின் பங்களிப்புடன் கொவிட்-19இனால் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை அளித்திட தேவையான ரூ. 6 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதியிலான அதிநவீன செல்லிட ஸ்கேனர் இயந்திரம் ஒன்றினை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கொவிட் -19 தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு கையளித்தனர்.

இந்நிகழ்வுக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் குமார விக்கிரமசிங்ஹ, கொவிட் தீவிர சிகிச்சைப் பிரிவின் பிரதானி விசேட வைத்தியர் தில்ஷான் பிரியங்கர, மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பிரதான நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு, பிரதி முகாமையாளர் (தொழில்முனைவோர் வங்கி நடவடிக்கைகள்) கிரிஷாணி நாரங்கொட, பிரதி முகாமையாளர்(வங்கி உதவிச் சேவைகள்) லலித் விதான, சந்தைப்படுத்தல் தலைவர் நாலக விஜேவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ கருத்து தெரிவித்தபோது,

“இந்நாட்டின் பொதுமக்களுடன் இணைந்துள்ள வங்கியாக நம் நாடு தேசிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் ஒவ்வொரு தருணத்திலும் இந்நாட்டு மக்களுக்காக பொருளாதார ரீதியாக கட்டியெழும்பிட தேவையான நிதியுதவிகளை மக்கள் வங்கி பெற்றுக்கொடுத்தது. மக்கள் வங்கியால் மற்றும் மக்கள் வங்கியின் சமூகத்தினரால் பெறுமதியில் அதிகமான PCR இயந்திரங்கள் உள்ளடங்கலாக சுகாதார நல உபகரணங்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டன. அதேபோல் கொவிட்-19 தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு தேவையான நிதியுதவிகளையும் மக்கள் வங்கி வழங்கியது.

தற்போது அரசு வெற்றிகரமாக இப்பெருந்தொற்றினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளமை புலப்படுகிறது. அதனடிப்படையில் எதிர்வரும் காலத்தில் நாட்டின் நிலைமை மிகவும் சிறப்பாக அமைந்திடும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்நாட்டின் கொவிட்-19 நோயாளர்களை குணப்படுத்துவதற்காக ஏதாவதொரு வகையில் பங்களிப்பு செய்திட மக்கள் வங்கியினால் முடிந்தமையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மக்கள் வங்கியின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள சமூக பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தும்போது தற்போது நிலவும் கொவிட்-19 பெருந்தொற்றினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு நடைமுறைப்படுத்தும் விடயங்களுக்கு முன்னுரிமை அளித்திட நாம் நடவடிக்கை எடுத்தோம். அதற்காக எமது ஊழியர்கள் தங்களது ஒருநாள் சம்பளத்தினை நன்கொடையாக வழங்கினர். நான் அவர்களையும் இத்தருணத்தில் நினைவுகூர விரும்புகின்றேன்” - எனத் தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் குமார விக்கிரமசிங்ஹ இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

“எமது கொவிட் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு இந்த இயந்திரத்தின் தேவை அதிகமாக இருந்தது. இந்த இயந்திரம் கொவிட் தீவிர சிகிச்சைப் பிரிவின் நோயாளிகளுக்கு சிகிச்சையளித்திட மிகவும் அவசியமானதொன்றாகும். தீவிர சிகிச்சைப் பிரிவின் பிரதான விசேட வைத்தியர், வைத்தியர்கள், தாதியர் உள்ளடங்கலாக அனைத்து ஊழியர்களும் இந்த கொவிட் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். அவர்களுக்கும் எமது வைத்தியசாலைக்கு இந்த இயந்திரத்தை பங்களிப்புசெய்த மக்கள் வங்கிக்கும் அவர்களது ஊழியர்களுக்கும் நான் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதிலும் குறிப்பாக, எமக்கு அத்தியவசியமான வேளையில் இவ்வாறான பங்களிப்பினை செய்தமையையிட்டு நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்” - எனத் தெரிவித்தார்.

கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம் குறைந்த பின்னர் இந்த இயந்திரத்தினை வேறு நோயாளர்களின் தேவைக்காக பாவனைக்குட்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்னர் கொவிட்-19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலம் மக்கள் வங்கி சமூகத்தினர் மற்றும் மக்கள் வங்கியின் ஓய்வுபெற்றோர் சங்கத்தின் மூலம் ரூ. 15 மில்லியன் நிதி நன்கொடையாக கடந்த ஆண்டு வழங்கப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.


NLB

## கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2799 சீட்டிழுப்பு திகதி: 13.07.2021

ஆங்கில எழுத்து: H

வெற்றி இலக்கங்கள்: 08 19 35 63

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 139 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 324 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8522 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5500 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 138142 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 25101 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 177,731

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை ரூ. 5,239,060.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 78,306,763.20

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk



NLB

## தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: H

வெற்றி இலக்கங்கள்: 12 34 45 60

திகதி: 13.07.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0534

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 4 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 75 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 157 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 4130 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2845 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 69961 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 13167 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 4,028.260.00

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 90,340

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை ரூ. 98,763,901.20

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Web: www.nlb.lk



சீட்டிழுப்பு இலக்கம்: 4504 உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

## மஹஜன சம்பத

திகதி: 13.07.2021

வெற்றி எழுத்து: B வெற்றி இலக்கங்கள்: 5 9 0 2 6 5

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ | 5 | 9 | 0 | 2 | 6 | 5 | ரூபா. 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | ■ | ■ | 9 | 0 | 2 | 6 | 5 | ரூபா. 100,000/- | 10 |
| 3ஆம் பரிசு | ■ | ■ | ■ | 0 | 2 | 6 | 5 | ரூபா. 10,000/- | 96 |
| 4ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | 2 | 6 | 5 | ரூபா. 1,000/- | 961 |
| 5ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | 6 | 5 | ரூபா. 100/- | 9511 |
| 6ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | 5 | ரூபா. 20/- | 94411 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ | 5 | 9 | 0 | 2 | 6 | ■ | ரூபா. 10,000/- | 10 |
| 8ஆம் பரிசு | ■ | 5 | 9 | 0 | 2 | ■ | ■ | ரூபா. 1,000/- | 97 |
| 9ஆம் பரிசு | ■ | 5 | 9 | 0 | ■ | ■ | ■ | ரூபா. 100/- | 945 |
| 10ஆம் பரிசு | ■ | 5 | 9 | ■ | ■ | ■ | ■ | ரூபா. 50/- | 9418 |
| 11ஆம் பரிசு | B | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ரூபா. 20/- | 37712 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 9,276,960.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,089,023.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை

32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

www.nlb.lk



Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 0852

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 13.07.2021

NLB

ஆங்கில எழுத்து: F சுப்பர் இலக்கம்: 18 வெற்றி இலக்கங்கள்: 16 46 51 76

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 2 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 69 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 196 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4222 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2856 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 71028 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 12959 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.136,285,116.40

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.2,583,180.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112 470662, 0114 607000 இணையம்: www.nlb.lk

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

# வீதி அபிவிருத்தி என்ற பெயரில் தமிழர் நிலம் கபளீகரம்; இந்நிலை தொடர்ந்தால் வீதிக்கு இறங்கி போராடுவோம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அணியின் தலைவர் புஸ்பராஜ் துசானந்தன்

**(பாறுக் ஷிஹான்)**

வீதி அபிவிருத்தியின் பெயரால் தமிழர் நிலம் கபளீகரம் செய்யப்படுவதை அனுமதியோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அம்பாறை இளைஞர் அணியின் தலைவர் புஸ்பராஜ் துசானந்தன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு கிராமத்தின் இருப்பைக் கபளீகரம் செய்யும் மாவடிப்பள்ளி - கல்முனை கார்பட் வீதி அபிவிருத்தி குறித்து உடனடியாக ஊடகங்களுக்கு இன்று (13) அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வீதி அபிவிருத்தி என்னும் பெயரால் தமிழ் மக்களின் வயல் நிலங்கள், விவசாய நிலங்களை கபளீகரம் செய்யும் நோக்கில் மாவடிப்பள்ளி தொடக்கம் - சாய்ந்தமருது வரையான வயல் காட்டுபாதை அவசர அவசரமாக கார்பட் பாதையாக அபிவிருத்தி செய்யப்படுகிறது. இவ்வீதி சாய்ந்தமருதுடன் நிற்காமல் தொடர்ந்து கல்முனை பஸ் தரிப்பு நிலையம் வரை நீடிக்கப்படும் எனவும் அறிய முடிகிறது.

நீண்ட காலமாக சகோதர இஸ்லாமியர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் பகைமையை வளர்க்கும் நோக்கில் முஸ்லிம் அரசியல்வாதிகள் பலர் செயற்பட்டுவந்துள்ளார்கள். மீண்டும் தாங்களின் வங்குரோத்து அரசியல் நோக்கங்களுக்காக துரோகம் இழைக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் வெட்கம்கெட்ட செயற்பாட்டினால் மீண்டும் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் பகைமையை வளர்க்கும் நோக்கில் அவர்களால் இத்திட்டம் நகர்த்தப்படுகின்றதாகவே இதை நாம் பார்க்கிறோம்.

1980களில் தமிழர் பெரும்பான்மையாகவும் மிக சொற்ப அளவில் சிங்களவர்களையும் கொண்டதாக எமது கல்முனை நகர் காணப்பட்டது. எனினும், தமிழ் மக்கள் மீதான இனவழிப்பு யுத்த காலத்தில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டும், அகதிகளாக விரட்டப்பட்டும் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழர் பொருளாதார ரீதியிலும் வலுவிழந்து காணப்பட்ட சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கல்முனை நகர மத்திய வர்த்தக நிலையங்களையும் கைப்பற்றி, அண்டை கிராமங்களான கல்முனைக்குடி சாய்ந்தமருதில் இருந்த தமிழர் சொத்துகளையும் எரியூட்டி நயவஞ்சகமாகவும், பலாத்காரமாகவும் கைப்பற்றினார்கள் என்பது யாவரும் அறிந்ததே.



சிறிய உதாரணமாக அப்போது தமிழ் கலவன் பாடசாலையாக இருந்த பாடசாலையானது பின் நாட்களில் ஸாகிரா கல்லூரியாக மாற்றம் பெற்றமையைக் குறிப்பிடலாம். இப்போது கல்முனைக்குடி என்ற ஊர் கூட இல்லாமல் சாய்ந்தமருது என்றும் மீதம் கல்முனை என்றும் எஞ்சி நிற்கின்றது.

முஸ்லிம்கள் கரையோர மாவட்டம் என்ற கோட்பாட்டில் கல்முனையை அதன் தலைநகராக அவர்கள் சித்திரிப்பதால் கல்முனை அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில் தமிழர்களது நிலங்களை கபளீகரம் செய்து தமிழர்களை வெளியேற்றி, திட்டமிட்ட குடியேற்றங்களை செய்தும் தமிழரது விகிதாசாரத்தை குறைக்கும் திட்டம் ஒன்று இங்கே திரை மறைவில் முன்னெடுக்கப்படுவது பலரும் அறிந்ததே. அந்த திட்டத்தின் ஒரு பாகம்தான் இந்த வீதி அபிவிருத்தித் திட்டம். வயல் காட்டுப்பாதையை கார்பட் பாதையாக்கி, அதனைச் சூழ அப்பிரதேசத்தில் உள்ள தமிழர்களின் வயல் காணிகளையும் தங்கள் அதிகார பலத்தைப் பயன்படுத்தி சுவீகரித்து தொடர்மாடி குடியிருப்புகள் மற்றும் வர்த்தக நிலையங்களை அமைத்து தமிழர் விகிதாசாரத்தை இன்னும் குறைப்பது அவர்கள் பலநாள் கனவுகளில் ஒன்று. ஆக இப்பொழுது அதை அவர்கள் நடைமுறைப்படுத்தவும் தொடங்கிவிட்டார்கள். உரிய நேரத்தில் இதை நாங்கள் தடுத்து நிறுத்தாவிட்டால் கல்முனையில் தமிழர் இருப்பை சுத்தமாக துடைத்து எறிந்து விடுவார்கள். கடந்த சுனாமி அனர்த்தத்தின் போது, தமிழ் செல்வந்தர் ஒருவரது பூரண நிதியுதவியின் மூலம் கல்முனை மக்களுக்கு என கட்டப்பட்ட மீள் குடியேற்ற வீட்டுத் தொகுதிகளை அப்போது வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சராக இருந்த முஸ்லிம் அரசியல்வாதியினால் ஒரே இரவில் வெளியூர் முஸ்லிம்களைக் கொண்டு குடியேற்றப்பட்டார்கள். அதன்மூலம் இன விகிதாசாரம் மாற்றப்பட்டு காலப்போக்கில் கல்முனை நகர மத்தியில் கிறவல் குழி, தேக்கம்சோலை ஆகியவை தற்போதைய இஸ்லாமாபாத் ஆக்கப்பட்டுள்ளது. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு உரிய அதிகாரங்களை நடைமுறைப்படுத்த விடாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக இருப்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

ஆகவே, எம் கல்முனை தமிழ் மக்களின் இருப்பினை பாதுகாக்கும் பொருட்டு தமிழர் நிலங்களை கபளீகரம் செய்யும் நோக்கில் அபிவிருத்தி என்னும் போர்வையில் இடம்பெறும் இந்நிகழ்வை வன்மையாக கண்டிப்பதுடன், இது போன்ற செயற்பாடுகள் தொடருமானால் எம் மக்கள் மற்றும் பொது அமைப்புக்களுடன் வீதிக்கு இறங்கி ஜனநாயக ரீதியாகப் போராடும் நிலைமைகளும் ஏற்படலாம் என்பதனை பதிவுசெய்கிறேன் என்றார்.

# வங்குரோத்து பொருளாதாரத்தை மீட்டெடுக்கவே பெசில் நிதியமைச்சராக பொறுப்பேற்றார்

## நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட்

**(மட்டக்களப்பு நிருபர்)**

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள வங்குரோத்துப் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவே பெசில் முன்வந்துள்ளார். அதன் காரணமாக அபிவிருத்தித் திட்டங்களும் நம்பிக்கையோடு இடம்பெறுகின்றதென மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூரில் நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பு அலுவலகத்தில் நேற்று (13) இடம்பெற்ற வீட்டுக்கு வீடு தென்னை மரம் வளர்க்கும் திட்டத்தின் கீழ் ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவுக்கான தென்னங்கன்றுகள் விநியோகத்தை அவர் ஆரம்பித்து வைத்தார்.

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய உதவிப் பணிப்பாளர் கே.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட 250 குடிமனைப் பயனாளிகளுக்கு தலா இரண்டு கன்றுகள் வீதம் 500 பொதியிடப்பட்ட நல்லின தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட், எல்லாமே வங்குரோத்து நிலைக்குச் சென்றுவிட்டது என்று கூறப்படுகின்ற இந்த கால கட்டத்தில் சகலவற்றையும் மாற்றியமைக்கும் சவாலை எதிர்கொண்டு நிதியமைச்சராக பெசில் ராஜபக்ஷ பாரமெடுத்துள்ளார்.



அவருடைய ஆளுமையை நன்றாகத் தெரிந்தவன் என்ற வகையில் இந்த நாட்டில் ஒரு பொருளாதார மறுமலர்ச்சி விரைவில் ஏற்படுவது நிச்சயமாகும். அதிலும் குறிப்பாக கிராமிய பொருளாதார அபிவிருத்திகளையும் நன்கு திட்டமிட்டுச் செயற்படுத்த அவர் தொடங்கி விட்டார்.

நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் எடுத்து அடுத்த ஒரு மணிநேரத்தில் தனது அமைச்சு அலுவலகத்திற்குச் சென்றவர் நள்ளிரவு வரை பணியாற்றினார் என்பதே ஒரு முன்னுதாரணமாகும்.

பொருளாதாரப் பிரச்சினையை எதிர்நோக்கியிருக்கின்ற இந்தவேளையில் சின்னஞ்சிறிய நாடான இலங்கை ஏற்கனவே யுத்தத்திற்கு முகம்கொடுத்து அதிகளவான பாதிப்புக்களைச் சந்தித்து அது மீளக் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்ற வேளையில், தாங்கிக்கொள்ள முடியாத பொருளாதார நெருக்கடி இருக்கின்ற வேளையிலும் இந்த அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளை அணுகுவதற்குத் தயங்காமல் இருப்பதுதான் இந்த அரசாங்கத்தின் தைரியமாகும்.

ஒரு இலட்சம் கிலோமீற்றர் பாதைகள் இந்த நாட்டில் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு, நாட்டில் கிட்டத்தட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்கல், கிராமிய வீட்டுத்திட்டம், பயிர்ச்செய்கைத் திட்டங்கள் என முன்கொண்டு செல்லப்படுகின்றன.

இந்த அபிவிருத்தித் திட்டங்களின் பிரதிபலன்கள் உடனடியாகக் கிடைக்காவிட்டாலும் இவை நீடித்து நிலைக்கும் பொருளாதார நன்மைகளாக உள்ளன என்றார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே.கருணாகரன், ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாரா உள்ளிட்ட இன்னும் பல அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# நிந்தவூரில் கடந்த 10 நாட்களில் 11 பேருக்கு கொரோனா

**(கே.எ.ஹமிட்)**

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 10 நாட்களில் 11 பேர் புதிதாக கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி பறூசா நக்பர் தெரிவித்துள்ளார்.



நிந்தவூர் பிரதேசத்தில் தொடரும் கொரோனா தொற்று அபாயம் சம்பந்தமாக அவர் விடுத்துள்ள அறிவுறுத்தலில் இது தொடர்பாக மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று (13) வரை 202 பேர் கொவிட் நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் இன்று வரை 06 பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளனர். கடந்த 10 நாட்களில் புதிதாக 11 பேர் கொவிட்-19 கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே, கொரோனா தொற்று அபாயம் முற்றுப்பெறாத நிலையில், அன்றாட வாழ்வாதார பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு கொரோனாவுடனான இயல்பு வாழ்க்கைக்கு படிப்படியாக நாங்கள் திரும்பிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் ஒன்றுகூடல்கள் மிகவும் ஆபத்தானவை என்பதை கருத்திற்கொண்டு மக்கள் தங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக திருமண நிகழ்வுகள் மற்றும் மரணவீடுகளில் பொதுமக்கள் சுகாதாரவிதிமுறைகளுக்கு முரணாக ஒன்றுகூடும்பட்சத்தில் கொரோனா தொற்று அதிகரிக்கும் ஆபத்து நிலைமையை கருத்திற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும், இளவயதினர் தங்களுடைய ஒன்றுகூடல்களை இன்னும் சற்று காலத்திற்கு தவிர்த்துக்கொள்வதுடன், அத்தியாவசியமான ஒன்றுகூடல்களை சுகாதார விதிமுறைப்படி மேற்கொள்ளுமாறும் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் பறூசா நக்பர் கேட்டுள்ளார்.

# 50 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு வழங்கிவைப்பு

**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**



கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் கொரோனா தொற்றுக்குள்ளானோருக்கு சிகிச்சையளிக்கும் நிலையத்திற்கு 50 இலட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏ.எல்.எப்.ரஹ்மான் தலைமையில் நேற்று (13) நடைபெற்றது.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இந்த உபகரணங்களை கையளித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுகாதார அமைச்சுக்கு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க சுகாதார அமைச்சினூடாக இந்த உபகரணங்கள் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நேரடியாக பார்வையிட்டதுடன், எதிர்கால தேவைகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்துகொண்டார்.

# ஹெபிடாட் போ கியூமானடி ஸ்ரீலங்கா அமைப்பினால் மட்டு. அரசாங்க அதிபரிடம் 5 மோட்டார் சைக்கிள்கள் கையளிப்பு

(கே.எ.ஹமிட்)

ஹெபிடாட் போ கியூமானடி ஸ்ரீலங்கா அமைப்பினால் “வீடு அல்ல வாழ்விடம்” எனும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (12) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் ஹெபிடாட் போ கியூமானடி ஸ்ரீலங்கா அமைப்பினால் வீடற்றவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பயன்படுத்திய ஹொண்டா ரக ஐந்து மேட்டார் சைக்கிள்கள் அமைப்பின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஜே.எஸ்.ஜெயமாரனினால் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனிடம் கையளிக்கப்பட்டன.



இம்மாவட்டத்தில் ஏறாவூர்பற்று, செங்கலடி, வவுணதீவு, பட்டிப்பளை மற்றும் வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் வசிக்கும் வறிய மக்களுக்கு சுமார் 8 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 669 வீடுகள் ஐக்கிய நாடுகளின் நிதிப்பங்களிப்பில் இவ்வமைப்பினால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

இவற்றில் சி.எஸ்.ஈ.பீ. எனும் தொழில்நுட்பத்தினூடாக அமைக்கப்பட்ட கற்களைக் கொண்ட 377 வீடுகளும், ஏனைய மாற்றியமைக்கப்பட்ட தொழில்நுட்பத்தினூடாக 292 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 2017இல் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் இவ்வாண்டு ஜூன் மாதத்துடன் நிறைவடைந்தது. இதனையடுத்து களப்பணிக்காகப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், திட்டம் அமுல்படுத்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கும், மாவட்ட செயலகத்திற்கும் வழங்குவதற்காக அரசாங்க அதிபர் கருணாகரனிடம் கையளிக்கப்பட்டன. இதன்போது ஹெபிடாட் போ கியூமானடி ஸ்ரீலங்கா அமைப்பின் மட்டு. நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் எஸ்.புஸ்பாகரன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் கே.ஜெகதீஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர் கே.தயாபரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# மர்ஹூம் எம்.எச்.எம்.ஷம்ஸின் 19 ஆவது நினைவேந்தல் நிகழ்வு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

நாடறிந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும், கலைஞருமான மர்ஹூம் எம்.எச்.எம். ஷம்ஸின் 19 ஆவது நினைவேந்தல் நிகழ்வு ‘நினைவில் வாழும் ஷம்ஸ்’ எனும் தொனிப்பொருளில் நாளை 15 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8.00 மணிக்கு ஒன்லைனில் சூம் தொழில்நுட்பத்தின் வாயிலாக இடம்பெறவுள்ளது.

எம்.எச்.எம்.ஷம்ஸ் மன்றத்தின் ஏற்பாட்டில், பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், வரவேற்புரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் எம்.ஏ.எம். நிலாம் நிகழ்த்துகிறார்.

இந்நிகழ்வில் ஆர்வலர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் திறந்த அழைப்பு விடுத்துள்ளனர்.

இணைந்து கொள்ள சூம் முகவரி:-
Join Zoom Meeting
https://us05web.zoom.us/j/81400059380?pwd=NXZkSS9kL3VKZnVNYVA4dElFRkJ3Zz09
Meeting ID: 814 0005 9380
Passcode: 123456

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோருக்கு 27ஆம் திகதி வரை விளக்கமறியல்

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு, கல்குடா கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 10 பேரையும் தொடர்ந்து எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று (13) உத்தரவிட்டார்.

கடந்த மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்வதற்கு எதிராக லவக்குமாருக்கு நீதிமன்றத் தடை உத்தரவு பெறப்பட்ட நிலையில், அவர் உட்பட 10 பேர் அன்றைய தினம் நீதிமன்ற தடை உத்தரவை மீறி கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச்சுடர் ஏற்றி கடலில் பூக்களைத் தூவி அஞ்சலி செலுத்தி, அதனைப் படமெடுத்து முகநூலில் பதிவுசெய்த நிலையில், அவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கல்குடா பொலிஸார் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்ற அனுமதியினைப் பெற்று 3 நாள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இதனையடுத்து நேற்று (13) குறித்த வழக்கு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் 10 பேரின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் தலைமையில் கனகரத்தினம் சுகாஸ் ஆகியோர் ஆஜராகினர்.

# கந்தளாயில் பிறந்த சிசுவொன்று தீமூட்டி கொலை

## சந்தேகத்தில் சிசுவின் தாய் கைது



(எப்.முபாரக்)

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிறந்த சிசுவொன்றை கொலைசெய்து எரித்த குற்றச்சாட்டின்பேரில் சிசுவின் தாயை நேற்று முன்தினம் மாலை கைதுசெய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மத்ரஸா நகர் பேராறு கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயொருவரை கைதுசெய்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த பெண்ணின் கணவர் வெளிநாடு சென்றுள்ளதாகவும் பிறந்த சிசு பெண் குழந்தையெனவும் கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வேறு ஒரு நபருடனான தகாத உறவு மூலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சிசு பிறந்துள்ளதாகவும், பிறந்த சிசுவினை கொலைசெய்து எரித்துள்ள நிலையில், அதனை தெருநாய்கள் கவ்விச் சென்றுள்ளது. இந்நிலையில், அயலவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் சிசுவை பிரசவித்த பெண்ணைக் கைதுசெய்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

சிசுவின் சடலத்தினை கந்தளாய் நீதிமன்ற நீதிவான் நேற்று பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக கந்தளாய் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சிசுவை பிரசவித்த பெண் பரிசோதனைக்காக கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக கல்முனையில் விழிப்புணர்வு போராட்டம்











(பாண்டிருப்பு நிருபர்)

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பினால் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு போராட்டம் நேற்று நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் கலைவாணி தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வுப் போராட்டத்தில் பெண்கள் அமைப்பைச் சேர்ந்த பலர் கலந்துகொண்டனர். சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியவாறு இந்த அமைதிப் போராட்டம் நடைபெற்றது.

இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் குழந்தைகளுக்கு பாலியல் வன்முறை மற்றும் அச்சமில்லாத வாழ்க்கையை வழங்குவது நமது கடமையாகும், சிறுமிகளின் வாழ்வை சீரழிக்காதீர்கள், சிறுவர் உரிமைகளை உயிரென மதிப்போம், சிறுவர்களை துஷ்பிரயோகப்படுத்துபவர்களுக்கு தண்டனை வழங்குங்கள் போன்ற பதாதைகளை தாங்கியிருந்தனர்.

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பித்த இந்த விழிப்புணர்வுப் போராட்டம் மணல்சேனை பிரதான வீதிவரை சென்று நிறைவுற்றது. இதில் அம்பாறை பெண்கள் வலையமைப்பின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி இராஜகோபால் தினுஷா கலந்து கொண்டிருந்தார்.

இக்கவனயீர்ப்புப் போராட்டத்தின் இறுதியில் அம்பாறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் வி.ஜெகதீசனிடம் மகஜர் ஒன்றையும் கையளிப்பதற்கான ஏற்பாடுகளை இப்பெண்கள் வலையமைப்பினர் செய்திருந்தனர்.

# கந்தளாய் காட்டுப் பகுதியில் பெறுமதியான காட்டுமரங்கள் இனந்தெரியாதோரால் அழிப்பு

## வேட்டையாடிய மானின் கொம்புகளும் மீட்பு









(எப்.முபாறக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதியில் இனந்தெரியாதோரால் பெறுமதியான காட்டுமரங்கள் வெட்டப் பட்டுள்ளன.

இப்பகுதி அதிகளவான தொல்பொருள் இடங்கள் காணப்படும் ஒரு பகுதியாகும். கந்தளாய் வான்எல சைதாபிட்டி பகுதியில் இனந்தெரியாதோரால் அதிகளவான பாரிய மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டும், தீ வைக்கப்பட்டும் காணப்படுகின்றன.

இப்பகுதியில் காணப்படும் வன பாதுகாப்பு கற்கள் வீசப்பட்டுள்ளதையும் காணலாம். இப்பகுதியிலுள்ள பால மரம், வீர மரம் மற்றும் வின்னாங்கு மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. இக்காட்டுப் பகுதி கந்தளாய் வன பாதுகாப்புப் பிரிவுக்குட்பட்ட பகுதியாகும்.

அத்தோடு வேட்டையாடிய மானின் எழும்புக்கூடு மற்றும் அதன் கொம்புகளும் அப்பகுதியில் காணப்படுகின்றன. சம்பவம் தொடர்பான விசாரணைகளை கந்தளாய் வன பாதுகாப்புப் பிரிவினரும், கந்தளாய் பொலிஸாரும் முன்னெடுத்து வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு பாகிஸ்தான் தூதுவராலயத்தின் செயலாளர் விஜயம்



(அக்கரைப்பற்று நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் தூதுவராலயத்தின் அரசியல், கலை, கலாசாரத்திற்கு பொறுப்பான செயலாளர் ஆயீஷா அபூபக்கர், அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு (தேசிய பாடசாலை) விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது பாடசாலை சமூகத்தினரால் வரவேற்கப்பட்டதுடன், அதிபர் திருமதி நஜீமா ஹாறுடீனால் நினைவுச்சின்னமும் வழங்கி கௌரவிக் கப்பட்டார். அத்தோடு பாடசாலையின் தேவைப்பாடுகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளரினால் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பழைய பெண் மாணவர்கள் சங்கப் பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள், கல்வி அமைச்சின் உயர் அதிகாரி இசட்.தாஜூடீன் மற்றும் பிரதி அதிபர், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

# அரசாங்கத்தின் வீதி அபிவிருத்தித் திட்டத்தில் சம்மாந்துறை - மஜீத்புரம் வீதி புனரமைப்பு



(எம். என். எம். அப்ராஸ்)

நாட்டின் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்திசெய்யும் திட்டத்தின் கீழ் சம்மாந்துறையில் வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சம்மாந்துறை தொகுதி முக்கியஸ்தரும் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் அஸ்பர் உதுமாலெப்பையின் முயற்சியின் பலனாக மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்ட சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மஜீத்புரம் பிரதேசத்திற்கு செல்லும் பிரதான வீதியானது புனரமைக்கப்படவுள்ளது.

வீதி அபிவிருத்தி அமைச்சினால் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் சுமார் 150 மில்லியன் ரூபா செலவில் சுமார் 5.5 கிலோமீற்றர் வீதி கொங்கிறீட் வீதியாக அபிவிருத்திசெய்யப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு வீதியின் ஆரம்ப வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் அஸ்பர் நேரடியாக மஜீத்புரத்திற்கு விஜயம் செய்து நிலைமைகள் தொடர்பில் பார்வையிட்டார்.

அத்துடன், மிக நீண்டகாலமாக குன்றும் குழியுமாக காணப்பட்ட இவ்வீதியின் அபிவிருத்தி தொடர்பில் மிகவும் கரிசனை செலுத்திய சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் அஸ்பர் உதுமாலெப்பைக்கு மஜீத்புர பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் வீதியினால் போக்குவரத்து மேற்கொள்வோர் நன்றியைத் தெரிவித்தனர்.

# கல்முனையில் 21 பேரிடம் மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி



(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் நேற்று 21 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 3 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கில் கொரோனா தொற்றின் மூன்றாவது அலையில் 144 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், இதுவரை 1304 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளும், 3110 பேருக்கு அன்ரிஜன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

கல்முனை பிரதேசத்தில் ஏற்கனவே கொரோனா நோயாளர்களுடன் பழகியவர்கள், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என 21 பேருக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. இதில் 3 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட கல்முனை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, துறைவந்தியமேடு ஆகிய கிராமங்களில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு விழிப்புணர்வு செயற்பாடுகளில் பிராந்திய சுகாதாரப் பணிமனை ஈடுபட்டுள்ளது.

கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் கொரோனா நோயாளர்களை கண்டறிவதற்கான அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளனர்.

# பல்துறை கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கிவைப்பு

(அக்கரைப்பற்று நிருபர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின்கீழ், அக்கரைப்பற்று பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட பல்துறை சார்ந்த கலைஞர்களுக்கான உதவித்தொகைக்கான காசோலையாக வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் தலைமையில் பிரதேச செயலக கூட்டமண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட பல்துறை சார்ந்த ஏழு கலைஞர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் ஏ.எம்.அப்துல் லெத்தீப், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு காசோலையை கையளித்தார். இதன்போது மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.ரின்ஸான், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவப்பிரியா பிரசாந் மற்றும் கலைஞர்களும் கலந்துகொண்டனர்.

# மூதூரில் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்பவர்களுக்கு கழிப்பறைகள் அமைப்பதற்காக நிதி வழங்கிவைப்பு

(கந்தளாய் நிருபர்)

புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் நிதியொதுக்கீட்டின்கீழ் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கமைய கழிப்பறைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற கழிப்பறைகள் இல்லாத ஏழைக் குடும்பங்களுக்கு இவ்வாறு கழிப்பறைகள் அமைப்பதற்காக நிதி கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.





இதன்போது 20இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு கழிப்பறைகள் அமைப்பதற்காக நிதி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரல, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிக்கோரள, பிரதேச செயலாளர் குணநாதன் மற்றும் உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டார்கள்.

# காட்டுயானை தாக்கி குடும்பஸ்தர் படுகாயம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பகுதியின் போரதீவுப்பற்று பிரதேசத்திற் குட்பட்ட திக்கோடை ஐம்பது வீட்டுத்திட்டப் பகுதியில் நேற்று அதிகாலை காட்டுயானை தாக்கியத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

திக்கோடை ஐம்பது வீட்டுத்திட்டத்திலுள்ள தனது செங்கல் தொழில் செய்யும் இடத்தில் உறங்கிக்கொண்டிருந்த 4 பிள்ளைகளின் தந்தையான 47 வயதுடைய கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசம் என்பவர் அதிகாலை சுமார் 5.30 மணியளவில் எழுந்து வெளியில் வந்தபோது திடீரென வந்த காட்டுயானை ஒன்று தாக்கிவிட்டுச் சென்றுள்ளது.

இதில் பலத்த காயங்களுக்கும், உபாதைகளுக்கும் உள்ளான நபரை அருகிலிருந்தவர்கள் மீட்டு, களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் மீக நீண்டகாலமாகவிருந்த இந்து காட்டுயானைகளின் தொல்லைகளும், அட்டகாசங்களும் தொடர்ந்து அதிகரித்த வண்ணமே உள்ளன. இக்காட்டு யானைகளில் தாக்குதலால் அப்பகுதியில் பல அப்பாவி உயிர்கள் காவுகொள்ளப்பட்டும், பயிர்கள், வீடுகள் உள்ளிட்டவற்றையும் துவம்சம் செய்து வருகின்றன.

அப்பகுதியிலுள்ள பற்றைக்காடுகளில் தங்கியிருக்கும் காட்டுயானைகளை பிடித்து சரணாலயங்களுக்குக் கொண்டுவிடுமாறு அப்பகுதி மக்கள் மிகவும் உருக்கமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனவரி – மார்ச் வரையில் மூன்று மாதங்களில் விபத்துகளினால் 59 மரணங்கள் பதிவு

## மட்டு. பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தொற்றா நோய் பொறுப்பு வைத்தியர் சிவநாதன்

(வீரமுனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் முதல் மூன்று மாத காலப்பகுதியில் 59 மரணங்கள் விபத்துகளினால் நிகழ்ந்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோய்ப் பிரிவு பொறுப்பு வைத்தியர் டாக்டர் சிந்தாத்துரை சிவநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள விபத்துகள் தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

விபத்துக்குள்ளாகும் மிக அதிகமானவர்கள் பொருளாதார ரீதியில் அதீத பங்களிப்பை வழங்கக்கூடிய 15 வயதிற்கும் 44 வயதிற்கும் இடைப்பட்டவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

பொதுவாக ஆரோக்கியமற்ற வழிமுறைகளை கடைப்பிடிப்பதனாலேயே எதேச்சையாக சடுதியான மரணங்கள் சம்பவிப்பதுடன், அவ்வாறான மரணச் சம்பவங்களால் குடும்பத்திற்கும் அவர் சார்ந்த குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் அவரில் தங்கி வாழ்வோருக்கும் மட்டுமன்றி நாட்டுக்கும் மிகப்பெரிய பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில், வீடும் அதனுடைய சூழலும் சாலையும் பெருந்தெருக்களும் வேலைத்தளங்கள், நீர்நிலைகள், பொது இடங்கள் என்பன பிரதான விபத்துகள் ஏற்படுகின்ற இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

வீடுகளில் காணப்படும் பாதுகாப்பற்ற மின்சார இணைப்புகளை பாதுகாப்பான முறையில் செய்வதன் மூலம் அநாவசியமான மின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். மற்றும் பாதுகாப்பற்ற கிணறுகளை பாதுகாப்பாக மூடிவிடுவதன் மூலமாக சிறுபிள்ளைகள் தவறுதலாக கிணற்றுக்குள் விழுவதனை தடுக்கலாம்.

பொதுமக்களின் விழிப்புணர்வும், சட்டத்துக்கு கட்டுப்படுகின்ற சமூகமாக நாங்கள் இருக்கின்றபோது எதேச்சையான விபத்துகளைத் தடுத்து தாங்களும் தன்னைச் சுற்றியுள்ளவர்களும் சந்தோஷமான வாழ்க்கையை அமைப்பதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தில் பங்குதாரர்களாகி நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியும் - என்றார்.

# பிணையளிக்கப்பட்டவர்களை பலாத்காரமாக தனிமைப்படுத்தி தடுத்துவைப்பதென்பது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்

## மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயரும் மட்டு. சிவில் சமூக போசகருமான யோசப் பொன்னையா ஆண்டகை



(வீரமுனை நிருபர்)

ஜோசப் ஸ்டாலினும் அவரது சகாக்களும் மிக மோசமாக பாதுகாப்புப் படையினரால் கையாளப்பட்டதென்பது மனிதமற்ற நிலையினையே வெளிப்படுத்தியுள்ளது - என மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயரும் மட்டு. சிவில் சமூக போசகருமான யோசப் பொன்னையா ஆண்டகை தெரிவித்தார்.

அடிப்படை உரிமை மீறலுடன் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்கள் தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர் சமூகத்தின் பிரதிநிதிகளே ஆசிரிய தொழிற்சங்கங்களாகும். அவ்வாறான ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மீது பிரயோகிக்கப்படும் கைதுகள் உள்ளிட்ட விடயங்கள் வன்மையான கட்டணத்துக்குரிய செயற்பாடுகளாகும்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் மேலும் சங்கடத்திற்குள்ளாகியுள்ள செயற்பாடுகள் இனியும் இந்த நாட்டில் நடைபெறக்கூடாது. நாட்டின் ஜனாதிபதி, தொழிற் சங்கங்களின் செயற்பாடுகளை நன்கு அறிந்தவர். அதேபோல் பிரதமர் மஹிந்த, அரசியல் போராட்டக்காரராக மாற்றி மிக நீண்டகாலமாக தொழிலாளர் நலன்பேணும் தொழிற்சங்க அனுபவம் கொண்டவர் மட்டுமல்லாது அவ்வாறான குடும்பப் பின்னணியிலிருந்து வந்தவர்கள் ஆட்சிசெய்யும் இந்நாட்டில் இவ்வாறான சட்டவிரோத வன்மச் செயற்பாடுகள் நடைபெற இடமளிப்பது மிகவும் வேதனைக்குரியது.

கொரோனா சூழ்நிலையில் சுகாதார பாதுகாப்பு விதிகளுக்கமைய ஒன்றுகூடுவதற்கும் ஆர்ப்பாட்டங்கள் செய்வதற்கும் அடிப்படை உரிமை இருக்கிறது. தொழிற்சங்கம் கல்விச் சுதந்திரத்தை வலியுறுத்தி நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது கைதுசெய்யப்பட்டு, தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளவர்களில் தொழிற்சங்கத் தலைவரும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முக்கிய தலைவருமான ஜோசப் ஸ்டாலின், ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நன்கு பரீட்சயமான நபர்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச தொழிலாளர் சங்கம் என்பன குறித்த சம்பவம் தொடர்பில் அவதானம் செலுத்துமென நம்புகிறேன். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தீர்மானங்களில் இராணுவத் தலையீடுகள் ஏற்படுவதென்பதும் கொத்தலாவ பல்கலைக்கழக சட்டமூலத்தை நியாயப்படுத்தி தனியார்மயமாக்குவதும் சிறந்ததல்ல. நீதிமன்றத்தினால் பிணையளிக்கப்பட்டவர்களை பலாத்காரமாக தனிமைப்படுத்தி தடுத்து வைப்பதென்பது பிணையளித்த நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நூரானியா – வேதத்தீவு பாலம் வரையிலான வீதியை புனரமைக்க அடிக்கல் நாட்டிவைப்பு



(திருகோணமலை நிருபர்)

நீண்டகாலமாக பழுதடைந்த நிலையிலுள்ள மூதூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நூரானியா வீதி தொடக்கம் வேதத்தீவு பாலம் வரையான பாதை சுமார் 4,10,60,000 நிதியில் புனரமைக்க நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன்போது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான கபில நுவன் அத்துகோரள பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இதில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள மற்றும் மூதூர் பிரதேசத்தின் பொதுஜன பெரமுன அமைப்பாளர் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரளவின் மூதூருக்கான இணைப்பாளர் எஸ்.எம்.எம்.முபாரக் தலைமையில் இடம்பெற்றது. சுமார் 2.68 கிலோமீற்றர் தூரம் வரையிலான வீதி கார்பட் வீதியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

# கல்முனை பிராந்திய சுகாதாரப் பிரிவுகளில் 24 மணிநேரத்தில் 53 பேருக்கு கொரோனா

(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுக்குட்பட்ட 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் கடந்த 24 மணிநேரத்தில் 53 பேர் கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 53 பேர் மரணித்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய மூன்றாம் அலையின் பிரகாரம் சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் 271பேர் இனங்காணப்பட்டுள்ளதாகவும் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கூடுதலானோர் தொற்றுடன் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

பிராந்தியத்திலுள்ள கல்விசாரா ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான தடுப்பூசி வழங்கல் துரிதப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்த பணிப்பாளர், முடக்கப்பட்ட மருதமுனை 3 பிரதேச மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

பொத்துவிலில் ஒரு கிராமசேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. சமயத்தளங்கள் திறக்கப்பட்டுள்ளன. இங்கு சுகாதார வைத்திய அதிகாரிகளின் கண்காணிப்பு இடம்பெறுகிறது. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் களத்தில் உள்ளனர். மாவட்ட மட்ட உள்ளக போக்குவரத்தும் இடம்பெறுகிறது.

# தமிழ் – முஸ்லிம் மக்களுக்கு நல்லது நடப்பதை தடுக்க கிழக்கு தமிழர்களிடையே ஒரு கூட்டம் இருக்கிறது

## ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத்



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச மாவடிப்பள்ளியிலிருந்து கல்முனை வரையான பாதையை கார்பட் வீதியாக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீதி அபிவிருத்தித் திட்டத்தை நிறுத்தும்படி காரைதீவிலுள்ள சிலர் கோருவதை ஐக்கிய காங்கிரஸ் கட்சி வன்மையாக கண்டித்திருப்பதுடன், இது அரசின் அபிவிருத்தியை முடக்கி மக்கள் மத்தியில் அரசு எதுவும் செய்வதில்லை என காட்டும் மக்கள் விரோத முயற்சியாகும் என்றும் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

யுத்த காலத்தின்போது காரைதீவு சந்தி வழியாக வர அச்சப்பட்ட முஸ்லிம் விவசாயிகள் மேற்படி கிறவல் வீதியையே தமது போக்குவரத்துக்கு பயன்படுத்தினர். அவ்வீதியை 50 அடி அகலத்தில் செப்பனிடும்படி நாம் முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் காலம்முதல் கோரிக்கை விடுத்து வருகிறோம். தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கிய தக்ம திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்திசெய்யும் வேலைத் திட்டத்தின்கீழ் மாவடிப்பள்ளியிலிருந்து வயல் பிரதேசத்தினூடாக கல்முனை வரையுள்ள மேற்படி 5 கிலோமீற்றர் நீள அணைக்கட்டு வீதியை கார்பட் வீதியாக்கும் வேலைகள் நடைபெறுவது மிகவும் பாராட்டுக்குரிய விடயமாகும்.

காரைதீவு மேற்கு பிரதேச வயல் காணிகளுக்குத் தேவையான தண்ணீர் பெறும் வசதியை இந்தத் திட்டம் தடைசெய்யும் என்பது வலிந்து சொல்லப்படும் காரணமாகும். ஏற்கனவே 10 அடி கிறவல் வீதி கல்முனை வரை உள்ளது. வீதி கார்பட் இல்லாத காலத்திலும் முறையான நீர்ப்பாசன வாய்க்கால் திட்டம் இல்லாததன் காரணமாக ஊருணியில் வெள்ளம் தேங்கியதை கண்டு வந்துள்ளோம். தற்போது இந்த வீதி அபிவிருத்திசெய்யப்பட்டு சரியான வடிகான் திட்டமும் செய்யப்படும் எனத் தெரிகிறது.

பொதுவாக தமிழ், முஸ்லிம்களுக்கும் நன்மை கிடைக்கக்கூடிய எதற்கும் கிழக்கிலுள்ள தமிழ் மக்களிடையே உள்ள ஒரு கூட்டம் எதிர்ப்புத் தெரிவிப்பது, வழமையான ஒன்று. ஆகவே, மேற்படி வீதியின் அபிவிருத்தியை தொடர்ந்தும் முன்னெடுக்கும்படி அரசின் பங்காளிக்கட்சி என்றவகையில் ஐக்கிய காங்கிரஸ் (உலமா) கட்சி அரசைக் கோரியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

# பொத்துவிலில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் மாயம்; 20 நாட்களின் பின்னர் வீடு திரும்பிய மீனவர்கள்

(எஸ்.அஷ்ரப்கான்)

கடந்த 23ஆம் திகதி அதிகாலை பொத்துவில் அறுகம்பை கடலிலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச்சென்ற இரு மீனவர்களே இவ்வாறு காணாமல்போயிருந்தனர். இம்மீனவர்கள் 20 நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் அதிகாலை வீடு திரும்பினர். பொத்துவில் களப்புக்கட்டு பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான முஹமட் தாஹா, பொத்துவில் பசறிச்சேனையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதுடைய முஹம்மத் ஜாஃபர் ஆகிய இருவருமே இவ்வாறு காணாமல்போனவர்கள்.

அந்த மீனவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

2021 மார்ச் மாதம் 23ஆம் திகதி நாங்கள் கடலுக்குப் போனோம். எங்களுக்கு ஒரு கொப்புறு மீன் பிடிபட்டது. அந்த மீனை நாங்கள் பிடித்தபோது அந்த மீன் எங்களை கடலின் மிகவும் உயரத்துக்குக் கொண்டு சென்றது. நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு கொண்டுசென்றோம். எங்களது இயந்திரமும் பழுதடைந்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் கடலில் எங்களது கண்ணுக்கு எட்டிய தூரத்தில் எவரும் இருக்கவில்லை. அங்குமிங்கும் நாங்கள் பார்த்தோம். எங்களை காப்பாற்றும் அளவுக்கு யாரும் இருக்கவில்லை. காற்றும் மிகவும் வேகமாக அடித்தது.

இதனால் எங்களை வேகமாக கடல் மிகவும் உயரத்துக்கு கொண்டுசென்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் யாருமில்லாததன் காரணமாக நாங்கள் 14 நாட்கள் நீரில் தத்தளித்தோம். ஒரு பெரிய இயந்திரப் படகொன்றின் மிதப்பு ஒன்று எங்களுக்கு கிடைத்தது. நான்கு நாட்களின் பின்னர் எங்களுக்கு கிடைத்தது. அதனைப் பிடித்துக்கொண்டு நாங்கள் கிடந்தோம். காலையில் அவர்கள் எங்களை அணுகி என்னவென்று கேட்டார்கள். எங்களது படகின் இயந்திரம் பழுதாகிவிட்டது. எங்களுக்கு உணவு தாருங்கள் என்று கேட்டோம். முதலில் நீங்கள் படகுக்குள் ஏறுங்கள் என்று கூறினார்கள். அதன்பின்னர் எங்களுக்கு போதுமான அளவு சாப்பாடு தந்தார்கள். எங்களது சகோதரர்கள் போன்று எங்களை கவனித்தார்கள். பின்னர் அவர்கள் எங்களை துறைமுகத்துக்கு கொண்டு சேர்ப்போம் என்று கூறினார்கள். பயப்படத் தேவையில்லை என்றும் கூறினார்கள். பின்னர் அவர்கள் கடற்படையினருக்கு அறிவித்தல் கொடுத்தார்கள்.

கடலில் தத்தளித்தவாறு சிறிய படகில் வந்தவர்கள் எங்களிடம் இருக்கிறார்கள். அவர்களை காப்பாற்றி வைத்திருக்கிறோம் என்று அவர்களிடம் கூறினார்கள். நாங்கள் அவர்களின் உதவியுடன் துறைமுகத்தை வந்தடைந்தோம். அவர்கள் எங்களிடம் வாய்மொழி எல்லாம் எடுத்து கையொப்பமும் எடுத்தார்கள்.

அந்த சிங்கள சகோதரர்களுக்கு நண்பர்களுக்கு நாங்கள் எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, எங்களை தேடுவதற்கும் எங்களை காப்பாற்றுவதற்கும் மிகவும் முயற்சிசெய்து செயற்பட்ட அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு, ஊடகத்துறையினருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம் என்றும் குறிப்பிட்டார்கள்.

# நிந்தவூர் கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு இலவச குடிநீர்த் தாங்கியும் நீர்வழங்கலும்







(நூருல் ஹுதா உமர்)

குவைத் நாட்டின் அந்-நஜாத் சர்வதேச தொண்டு நிறுவன நிதி அனுசரணையில் இலங்கை அந்நூர் சமூக அமைப்பினால் நிந்தவூர் கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு இலவச குடிநீர்த் தாங்கி நிர்மாணித்து இலவச நீர் இணைப்பை பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நிந்தவூர் கொரோனா சிகிச்சை நிலையத்தில் நடைபெற்றது.

அரச காரியாலயங்கள், பாடசாலைகள், பள்ளிவாசல்களுக்கு இலவச குடிநீர் வழங்குதல் மற்றும் பல சமூகநல வேலைத்திட்டங்களை அந்நூர் சமூக அமைப்பு மக்களுக்காக தொடர்ந்தும் நாடளாவிய ரீதியில் செய்து வருகின்றது. அவர்களின் வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக அந்நூர் சமூக அமைப்பின் பிரதேச இணைப்பாளர் ஐ.எம்.நிசாட்டின் நெறிப்படுத்தலில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஸஹீலா இஸ்ஸதீனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நிந்தவூர் பிரதேச செயலாளர் டீ.எம்.அன்ஸார் கலந்துகொண்டார்.


மேலும் இந்நிகழ்வில் இலங்கை அந்நூர் சமூக அமைப்பின் தவிசாளர் எஸ்.எம்.அலியார் ஹாஜி, பொது வைத்திய நிபுணர் டாக்டர் ஷபிக் உட்பட வைத்தியர்கள், தாதிகள், அந்நூர் சமூக அமைப்பின் தேசிய இணைப்பாளர் ஏ.எம். சலீம், அந்நூர் சமூக அமைப்பின் பிரதேச இணைப்பாளர்களான ஐ.எம்.நிசாட், யூ.எல். அஸ்லிம் உட்பட நலன்விரும்பிகள் பலரும் கலந்துகொண்டனர். மின்தடைகளின்போது பாதிக்கப்படும் நோயாளிகளின் நன்மைகருதி மின்பிறப்பாக்கி ஒன்றினை பெற்றுத்தருமாறு கோரிய மகஜரொன்றும் இதன்போது இலங்கை அந்நூர் சமூக அமைப்பின் தவிசாளரிடம் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஸஹீலா இஸ்ஸதீன் கையளித்தார்.


## பெயர் மாற்றம்

கற்பிட்டி பெரியகுடியிருப்பைச் சேர்ந்த **மொஹமட் கஸாலி பஜ்ரியா பர்வின்** (Mohamed Kasaly Fajriya Farvin) ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **பஜ்ரியா பர்வின்** (Fajriya Farvin) என மாற்றியுள்ளேன் என்பதனை ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறயத்தருகின்றேன்.

**பஜ்ரியா பர்வின்**

# இறையாண்மையை மீறும் செயல்முறைக்கு எதிராக ஜனநாயகக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்



## ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

மக்களின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான முக்கிய வழி வாக்களிப்பாகும். ஒரு ஜனநாயக அரசின் ஜனநாயகமயமாக்கலைப் பாதுகாப்பதில் வாக்களிப்பு மிக முக்கியமான காரணியாகும். எனவே, ஜனநாயக நாடுகளில், தேர்தல்களை நடத்துவதற்கு பொறுப்பான நிறுவனம் ஒரு சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற அமைப்பாக செயற்பட அனுமதிக்கப்படுகிறது. நாட்டுமக்களின் இறையாண்மையை மீறும் செயல்முறைக்கு எதிராக அனைத்து ஜனநாயகக் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்படப்பட்டுள்ளது,

இலங்கைத் தேர்தல் திணைக்களமும் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவும் இந்தக் கொள்கைகளை அந்த நிறுவனங்களை செயற்படுத்துவதில் முடிந்தவரை முழுமையாகப் பாதுகாக்க செயற்பட்டன என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். தேர்தல் செயல்முறைக்கு பங்களிக்கும் அதிகாரிகள் தங்கள் கடமைகளை சுயாதீனமாக நிறைவேற்ற தேவையான ஏற்பாடுகளை அரசியலமைப்பு வழங்குகிறது. தேர்தலை ஒழுங்கமைப்பதும் வழிநடத்துவதும் ஒரு கடினமான பணி. எனவே, இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் ஆட்சேர்ப்பு மற்றும் இடமாற்றம் சாதாரண அரசாங்க விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டது.

இருப்பினும், கடந்த சில மாதங்களாக தேர்தல் ஆணைக்குழுவில் பணிபுரியும் அனுபவமுள்ள பல அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் குழுவை தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து இவ்வளவு குறுகிய காலத்தில் நீக்குவது கடுமையான சந்தேகத்திற்குரிய விடயமாகும். இது தேர்தல் ஆணைக்குழுவின் சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாகும். அரசியல் அதிகாரத்தின் செல்வாக்கால் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய புதிய அதிகாரிகளை நியமிப்பது சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்த வழிவகுக்காது என்ற அபாயமும் உள்ளது.

அரசியலமைப்புப் பேரவையை ஒழித்தல் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நியமனங்கள் ஆகியவற்றில் அரசியலமைப்பில் இருபதாம் திருத்தத்தின் தாக்கத்தைக் கருத்திற்கொண்டு, இது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய எளிய விடயமல்ல. ஐக்கிய மக்கள் சக்தி இது குறித்து மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது என்பதோடு, நாட்டுமக்களின் இறையாண்மையை மீறும் செயல்முறைக்கு எதிராக அனைத்து ஜனநாயகக் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதையும் நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# தொழிற்சங்கத் தலைவர்களை கைதுசெய்வது ஜனநாயகத்தை ஒடுக்கும் செயலாகும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. குற்றச்சாட்டு



(க.கிஷாந்தன்)

தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடும் தலைவர்களை கைதுசெய்து, அவர்களை பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியமையானது ஜனநாயகத்தை ஒடுக்கும் செயலுக்கு ஒப்பானதாகும் - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டினார்.

ஹட்டனில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலவசக் கல்வியை பாதுகாப்பதற்காக ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் அறவழியில் போராட்டம் நடத்தினார்கள். அதற்கான ஜனநாயக உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டத்தை காரணங்காட்டி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஒடுக்கப்பட்டு, கைதுசெய்யப்பட்டனர். நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவர்களுக்கு பிணை கிடைத்தது. எனினும், பொலிஸார் பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர். நாட்டில் பொலிஸ் அராஜகம் தொடர்கின்றது என்பதற்கு இச்சம்பவமும் சான்று.

தொழிற்சங்கத் தலைவர்களின் உரிமைக்கான போராட்டத்தை ஒடுக்குவதானது ஜனநாயகத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது.

அதேவேளை, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுக்கொடுக்கப்பட்டுவிட்டது எனக் கூறப்பட்டாலும், அது பூச்சாண்டி காட்டுவதற்கான நடவடிக்கையாகவே உள்ளது. வேலைச்சுமைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு எதிரான கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. இதற்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

கொட்டியாகலை பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை. அரச அதிபரிடம் வினவினால், நிதி வழங்கப்படவில்ல எனக் கூறுகின்றார் - என்றார்.

# மக்கள், ஊடகங்களின் கருத்து சுதந்திரத்தை முடக்கவேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை

## அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல சுட்டிக்காட்டு



(யோ.தர்மராஜ்)

நாட்டு மக்களினதும் ஊடகவியலாளர்களினதும் பேச்சு சுதந்திரத்தை முடக்கவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது - என அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தனியார் ஊடகத்திற்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் கடந்த வாரம் நாடாளுமன்றில் உரையாற்றினார்.


இதில் எவ்வித உண்மைத்தன்மையும் கிடையாது. இது குறித்து நாங்கள் கவலையடைகின்றோம். ஒருசில ஊடகங்களின் செயற்பாடுகள் ஊடக கொள்கைக்கு முரணாக காணப்படுகின்றன. அதற்கு முன்னெடுக்கவேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்து சட்டத்தரணிகளிடம் ஆலோசனை கோரப்பட்டது. இதனை எவ்வாறு தவறான செயற்பாடு என்று குறிப்பிட முடியும். சட்ட கட்டமைப்பிலிருந்து அனைத்து பிரச்சினைக்கும் தீர்வு காண முயற்சிக்கின்றனர். மேலும், இதனை எதிர்க்கட்சியினர் அரசியலாக்குகின்றனர்.

ஆகவே, ஊடகவியலாளர்களினதும், நாட்டு மக்களினதும் பேச்சு சுதந்திரத்தை முடக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது. அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரத்தை ஒரு தரப்பினர் தவறான வழியில் பயன்படுத்தும்போது அதற்கு எதிராக நடவடிக்கைகள் உரிய நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும். இதனை பேச்சு சுதந்திரத்திற்கு எதிராக அரசாங்கம் செயற்படுகிறது என்று கூற முடியாது.

நாட்டு மக்களுக்கு உண்மையான தகவல்களை வழங்கும் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு, எனினும், ஊடகங்களின் செயற்பாடுகளை கண்காணிக்கும் பொறுப்பு ஊடகத்துறை அமைச்சுக்கு உள்ளது. இவ்விடயத்தில் பொறுப்புடன் செயற்படுவோம். நாட்டுமக்கள் உண்மை விடயங்களை அறிந்துகொள்ள வேண்டும்.

கொத்தலாவல பாதுகாப்பு சட்டமூலத்திற்கு எதிராக கடந்த வாரம் நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின்போது போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இதன்போது செய்தி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் மீது பொலிஸார் தாக்குதலை முன்னெடுத்ததாக குறிப்பிடப்படுகிறது.

இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் இருப்பின் அவர் முதலில் முறைப்பாடளிக்க வேண்டும். அவர் வழங்கும் முறைப்பாட்டை அடிப்படையாகக்கொண்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார்.



கொரோனா தொற்றுக்கான தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் நேற்று நாரஹேன்பிட்டி சாலிகா மைதானத்தில் இடம்பெற்றது (படப்பிடிப்பு – கிரிஷான் காரியவசம்)

## சிறுமியை துஷ்பிரயோகப்படுத்திய விவகாரம்:

# சம்பந்தப்பட்ட இணையத்தளங்களை தடைசெய்ய அனுமதி கோரி நீதிமன்றில் மனு

கல்கிஸையில் இணையத்தளத்தினூடாக 15 வயது சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இதுவரையில் 41 பேர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சில இணையத்தளங்களை தடைசெய்வதற்கு நீதிமன்றத்தில் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளுக்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் நேற்று பொலிஸ் தலைமையகத்தினால் வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது,

இணையத்தளத்தை பயன்படுத்தி 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியது தொடர்பில் பொலிஸாரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நபரொருவரினால் சிறுமியொருவர் இணையத்தளத்தினூடாக பாலியல் நடவடிக்கைகளுக்கு விற்பனை செய்வதாக கடந்த ஜூன் மாதம் 07 ஆம் திகதி கல்கிஸை பொலிஸ் தலைமையகத்தின் பொலிஸ் பரிசோதகர் திலுப பெரேராவுக்கு கிடைத்த தகவலுக்கமைய 35 வயதுடைய நபரொருவர் கைதுசெய்யப்பட்டு கல்கிஸை பொலிஸ் பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதன்போது 15 வயது சிறுமி பொலிஸாரினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்தில் சிறுமியின் தாயார் பிரதான சந்தேகநபர் என்பது அடையாளங்காணப்பட்டதை அடுத்து இதுதொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

விசாரணைகளினூடாக கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய ஆழ்ந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது உறுதிப்படுத்தப்பட்டமையினால் இந்த விசாரணைகளை பொலிஸ் தலைமையகத்தின் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்பு பணயகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கமைய தற்போதுவரையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம், குற்றப்புலானய்வு தடுப்புப் பிரிவு. சட்டவிரோத உடைமைகள் மற்றும் சொத்துகள் விசாரணைப் பிரிவு, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் உள்ளிட்ட பல்வேறு பிரிவினர் இணைந்து இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உற்படுத்திய 41 பேர் வரையில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த சிறுமி 2018ஆம் ஆண்டு குறித்த சிறுமி அவரது தந்தையினால் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டதால் தந்தையும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் சிறுமியின் தாய் இந்த குற்றச்செயலுக்கு உதவிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார். தொலைபேசி அறிக்கை, இணையத்தளங்கள், வங்கி அறிக்கை, சி.சி.டி.வி. உள்ளிட்ட வேறுபட்ட தகவல்கள் தொடர்பில் பரிசோதனைக்குட்படுத்தி பல்வேறு விதங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் பாலியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறு இணையத்தளங்களை தடைசெய்வதற்கு நீதிமன்றத்தில் கோரப்பட்டுள்ளதுடன் அதற்காக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் நீதிமன்றத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போதுள்ள அவ்வாறான இணையத்தளங்களை அடையாளம் காண்பதற்காக பொலிஸாரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


இதுதொடர்பில் சட்டமா அதிபரினால் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக மேலதிக சொலிஸ்டர் ஜெனரல் ஒருவர் உள்ளிட்ட அரச சட்டத்தரணிகள் சிலர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை விரைவுபடுத்துவதற்கு முறையாக சாட்சிகளை ஆஜர்படுத்துவதற்கு அவர்களினால் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இதுவரையில் கைதுசெய்யப்பட்டுள்ள சகலரையும் கொழும்பு, புதுக்கடை 06ஆம் இலக்க நிதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# தேர்தல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பில் விசேட பரிந்துரைகள் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க பெவ்ரல் அமைப்புக்கு அழைப்பு

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் மறுசீரமைப்பு குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட நாடாளுமன்றக் குழு முன்னிலையில் இன்று பெவ்ரல் அமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சபை முதல்வரும் வெளிநாட்டு அமைச்சருமான தினேஷ் குணவர்தனவின் தலைமையிலான இந்த விசேட குழு இன்று முற்பகல் நாடாளுமன்றத்தில் கூடவிருப்பதுடன், இதில் குழுவின் அழைப்பையேற்றுக் கலந்துகொள்ளவிருக்கும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (பெவ்ரல்) தமது முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவுள்ளது.

அதேநேரம், நாடாளுமன்ற விசேட குழு முன்னிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைப்பது தொடர்பில் அமைச்சர் தினேஷ் குணவர்தன முன்வைத்த யோசனைக்கும் விசேட குழுவின் அனுமதி கிடைத்திருப்பதாக






இக்குழுவின் செயலாளரும், நாடாளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானீ ரோஹனதீர தெரிவித்தார்.

அத்துடன், இக்குழுவின் சகல கூட்டங்களின் போதும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் செயற்பாட்டாளர்களை பங்கெடுக்கச் செய்யுமாறும் தலைவர் அறிவுறுத்தியிருப்பதாக ரோஹனதீர குறிப்பிட்டார்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் மறுசீரமைப்பு குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட நாடாளுமன்றக் குழுவுக்கு அரசியல் கட்சிகளின் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் பூர்த்தியடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜனநாயகத்தை பாதுகாக்குமாறும் மனித சுதந்திரத்தை பாதுகாக்குமாறும் கோரி ஐக்கிய மக்கள் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப் போராட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று கடவத்த நகரத்தில் இடம்பெற்றது.

# புதிய கொரோனா திரிபுகளினால் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும்

## தடுப்பூசி வேலைத்திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்து

(ஜவ்ட் சமந்த)

தடுப்பூசிகள் முறையாக வழங்கப்படா விட்டால் புதிய கொரோனா திரிபுகளினால் பாரதூரமான ஆபத்து நிலையை சந்திக்க நேரிடும் என்றும், கொரோனா தொற்றிலிருந்து மக்களை விரைவில் மீட்டெடுக்க வேண்டுமாயின் தடுப்பூசி வேலைத்திட்டத்தை மேலும் கடுமையாக்க வேண்டுமென்றும் இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டிலுள்ள நிலைமைக் கமைய தற்போதைய மொத்த மக்கள் தொகையில் குறைந்தது 25 சதவீதமானவர்களுக்காவது கொரோனா தடுப்பூசி வழங்கப்பட வேண்டும். இருப்பினும் துரதிஷ்டவசமாக மொத்த மக்கள் தொகையில் தற்போது வரையில் 20 சதவீதமானவர்களுக்கு மாத்திரமே தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்தா விட்டால் புதிதாக கண்டுபிடிக்கப்படும் புதிய



திரிபுகளினால் பாரதூரமான ஆபத்துகளை சந்திக்க நேரிடும் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.

கடந்த தினங்களில் இரண்டு எதிர்ப்பு போராட்டங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நபர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துதல் தொடர்பில் தற்போது வரையில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன்போது, ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்ட சிலர் சுகாதார வைத்திய அதிகாரிகளினாலேயே தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஏனைய ஆர்ப்பாட்டக்காரர்களை தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்துமாறு பிரதேசங்களுக்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரிகளினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்கவே, அந்த பிரதேசங்களுக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.


இந்த நடவடிக்கைகள் தற்போது நீதிமன்றத்தினால் முன்னெடுக்கப்படுவதாக நாங்கள் தெரிவிக்கப் போவதில்லை. ஆனால், எதிர்காலத்தில் நீதிமன்றத்தினால் தீர்வு வழங்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். எவ்வாறாயினும், சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மாத்திரமே எதிர்காலத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள். நாங்கள் அதுதொடர்பில் அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டுமென சகல சுகாதார பரிசோதகர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

# பலாங்கொடையில் கொரோனா நோயாளி தப்பியோட்டம்

இரத்தினபுரி - பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கொரோனா நோயாளி ஒருவர் நேற்று (13) பகல் தப்பிச்சென்றுள்ளார்.

அவிசாவளை – கொஸ்ஹேன்கம, ஹேவாயின்ன பிரதேசத்தைச் சேர்ந்த நந்தசிறி போவத்த என்ற 72 வயது நபரே இவ்வாறு தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு உரித்தான சிங்கராஜ பகுதியில் வைத்து கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.



# சுகாதாரத்துறைக்குள் இராணுவம் உள்நுழைவது தவறு

## – அரசாங்கத்தை சாடுகிறார் எரான் விக்ரமரத்ன எம்.பி. –

குறுகிய காலத்தில் இந்த அரசாங்கம் மதிப்பிழந்துள்ளது. சுகாதாரப் பிரச்சினைகளை இராணுவத்திடம் ஒப்படைப்பது தவறு. இது ஒரு பயங்கரவாத பிரச்சினை என்றால் பரவாயில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

நேற்று (13) எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் மிகுந்த அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் பெரும் பொருளாதார அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளனர். வருமானம் குறைந்துள்ளது. வேலைகள் இழக்கப்பட்டுள்ளன. அரச ஊழியர்கள் மாத்திரமே தொடராக தொழிலுக்குச் செல்கின்றனர். நாளாந்த தொழிலில் ஈடுபட்டவர்கள் வீட்டிலயே உள்ளனர். நல்லாட்சி அரசாங்கமே அரச ஊழியர்களின் சம்பளத்தை கீழ் மட்டம் தொடக்கம் உயர் மட்டம் வரை உயர்த்தியது. மிகக் குறைந்த செலவினம் நல்லாட்சியின் போதே இடம்பெற்றது.

பொருட்களின் விலைகள் குறைந்த மட்டத்தில் இருந்தன. ஒரு தேங்காய் அப்போது 60 ரூபாவாக இருந்தது. இப்போது அது 90 ரூபாவாக உள்ளது. இதேபோல், அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் நல்லாட்சி அரசாங்கத்தை விட அதிகமாக உயர்ந்துள்ளன. வரியைக் குறைத்தமையினால் அரசாங்கத்தால் பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியவில்லை. சீனியின் வரியை 25 சதவீதமாக குறைத்து 15.9 பில்லியன் ரூபாவை அரசாங்கத்திற்கு இழக்கச் செய்தது. அன்று சீனி 85 ரூபா. இன்று 130 ரூபா. இதனால் நுகர்வோர் பயனடையவில்லை. சமூகத்தால் பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியவில்லை.

உலக மசகு எண்ணெயின் விலை குறைக்கப்பட்ட போதிலும், இந்த அரசாங்கம் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலைகளை அதிகரிப்பதன் மூலம் மக்களுக்கு அந்த நிவாரணத்தை வழங்கவில்லை. பெற்றோல் அன்று 137 ரூபா. இன்று 157 ரூபா. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் 320 ஆக இருந்த தேங்காய் எண்ணெய் தற்போது 750 ரூபாவாக உயர்ந்துள்ளது. சமையலறையில் இவற்றின் விலையை நீங்கள் உணர முடியும். ஜனாதிபதி பதவியேற்று ஒரு வருடத்திற்குள்ளேயே இவை அனைத்தும் இடம் பெற்றுள்ளது.

நல்லாட்சியில் சுகாதாரத்துறைக்கு பல நிதிகளை ஒதுக்கினோம். புற்று நோயாளிக்கு ஒரு பெரிய தொகையை ஒதுக்குவதன் மூலமும் நிவாரணங்கள் வழங்கப்பட்டன. ஸ்டென்டுகளின் விலையை 24 ஆயிரம் ரூபாவாகக் குறைத்தோம். நல்லாட்சி அரசாங்கம் நாட்டின் ஆரோக்கியத்திற்காக ஒரு சிறந்த சேவையைச் செய்துள்ளது. இன்று மருந்துகளின் தட்டுப்பாடுகளால் பல நோயாளிகள் நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொத்தலாவல பல்கலைக் கழக சட்டமூலம், 20 ஆவது திருத்தம் போன்று நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது. அதை ஒரு நாளுக்குள் நிறைவேற்ற அரசாங்கம் முயன்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் முயற்சியால் அது பிற்போடப்பட்டது.

பாதுகாப்புப் கல்லூரி வைத்திருப்பதில் எந்த பிரச்சினையும் எங்களுக்கு இல்லை. ஏனெனில், பாதுகாப்புத்துறையில் உள்ளவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். ஆனால், அது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாக இருக்க வேண்டும். ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வுகளுக்கு ஓர் முறைமை இருக்க வேண்டும். சகலருக்கும் சம கல்வி வாய்ப்பை தராதரங்களுடன் நிறுவ வேண்டும்.

சைட்டத்துக்கு என்ன நடந்தது என்று தெரியும். மாணவர்கள் முதல் விரிவுரையாளர்கள் வரை சுதந்திர செயற்பாடு இருக்க வேண்டும். கல்வியின் ஏற்பாடு மற்றும் ஒழுங்குமுறைகளை கேள்விக்குட்படுத்துவதற்கு சுதந்திரமாக இருக்க வேண்டும்,

அதனால்தான் அதுபல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் இருக்க வேண்டும்



என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் தவறானபொருளாதாரக் கொள்கைகளால் அரசாங்கம் தடுமாறுகிறது. வரிகளை குறைப்பதாக கூறி தேர்தலுக்குப் பிறகு அரசாங்கம் வரிகளைச் செலுத்துவதையும் விட்டு பெரிய முதலாளிமார்களை விடுவித்தது. வரி மூலம் மட்டுமே சமூக நீதியை அடைய முடியும்.

இன்று எதிர்க்கட்சியாக உள்ள நாங்கள் அடுத்த எமது அரசாங்கத்தில், பொறுப்புடன் செயற்படுவோம். குறுகிய காலத்தில் இந்த அரசாங்கம் மதிப்பிழந்துள்ளது. சுகாதாரப் பிரச்சினைகளை இராணுவத்திடம் ஒப்படைப்பது தவறு. இது ஒரு பயங்கரவாத பிரச்சினை என்றால் பரவாயில்லை. இதிலிருந்து அரசாங்க நிர்வாகத்தின் தவறைக் கவனித்துக் கொள்ளலாம்.

உலகில் எந்த நாட்டிலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் அமைச்சரவையில் இல்லை. அவ்வாறு ஐவர் உள்ள ஒரே நாடு நம் நாடுதான் என்று தெரிவித்தார்.

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த இளைஞனுக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த 21 வயதுடைய இளைஞனை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.நிஸ்வான் நேற்று செவ்வாய்க்கிழமை (13) உத்தரவிட்டார்

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுமியை அவர்களது பெற்றோருக்கு தெரியாமல் சம்பவ தினமான கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) சிறுமியின் வீட்டிற்கு அருகாமையிலுள்ள குறித்த இளைஞன், கோவிலுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்ததாக சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், குறித்த இளைஞனை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (12) கைது செய்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, இவரை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை விளக்கமறியலில் வைக்கப்பட்ட இளைஞன் உட்பட இருவர் சத்துருக்கொண்டான் பகுதியில் வீதியால் சென்ற பெண்ணொருவரின் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது இருவரையும் 27ஆம் திகதிவரை விளக்கமறியில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# 95 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி திருட்டு

(ஜவ்ட் சமந்த)

தனது காதலியை சந்தித்துவிட்டு பின்னர் வீட்டுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது 95 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி திருடுபோன சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சிலாபம் - புத்தளம் வீதியில் ராஜகந்தலுவ தேவாலயத்துக்கு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பங்கதெனிய, வீரகுமந்தளுவயைச் சேர்ந்த 23 வயதுடைய நபரொருவரே இந்த சம்பவத்தில் பாதிப்படைந்துள்ளார்.

ஆராச்சிக்கட்டுவ, அத்தன்கதய பிரதேசத்திலுள்ள தனது காதலியை காண்பதற்காக சென்று மோட்டார் சைக்கிளில் வீட்டை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்ததாகவும், எரிபொருள் தீர்ந்தமையினால் மோட்டார் சைக்கிள் இடையில் நின்றுவிட்டதாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அந்த சந்தர்ப்பத்தில் மேலுமொரு மோட்டார் சைக்கிளில் வருகை தந்தவர் ஒருவர் ''என்ன தம்பி, ஏதாவது பிரச்சினையா?'' என்று விசாரித்துவிட்டு திடீரென தான் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை திருடிவிட்டு தப்பிச் சென்றதாக அவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் யார் என்பது இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என்பதுடன், ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# எல்.ரி.ரி.ஈ அமைப்பை மறுசீரமைப்பு செய்வதற்கு நிதியுதவி வழங்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மறுசீரமைப்பு செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் முள்ளியாவளை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் 41 வயதுடைய நபரொருவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த பாக்கியத்துறை நகுலேஸ்வரன் என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மறுசீரமைப்பதற்கு 2009 ஆம் ஆண்டு முதல் நிதியுதவி வழங்கியமை தொடர்பில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் 2009 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து கட்டாருக்கு தப்பிச்சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது. அதன் பின்னர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் அவருக்கு எதிராக நீல அறிக்கை பெறப்பட்டிருந்தது. அதனடிப்படையில் அவர் கட்டார் அரசால் வெளியேற்றப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவர் நாட்டை வந்தடைந்ததும் 14 நாட்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்ததன் பின்னர் நேற்று முன்தினம் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கமைய அவரை தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# துணைத் தூதுவர்களுடன் வெளிநாட்டு அமைச்சர் சந்திப்பு



கொவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவிகளை வழங்குமாறு இலங்கையின் துணைத் தூதுவர்களிடம் வெளிநாட்டு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா, பல்கேரியா, சீஷெல்ஸ், ஈக்வடோர் மற்றும் போலந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த தூதுவர்கள் வெளிநாட்டு அமைச்சரை அண்மையில் வெளிநாட்டு அமைச்சில் வைத்து சந்தித்திருந்தனர். அதன்போதே, அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அணிசேரா வெளியுறவுக் கொள்கையுடன் இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளுடன் நட்புறவில் ஒத்துழைத்து வருவதால், ஏனைய நாடுகளின் உதவியை அது எளிதாக்குவதாகத் தெரிவித்த அமைச்சர், இலங்கையின் பொருளாதார மற்றும் வணிக விவகாரங்களுக்காக உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்குமாறும் அவர்களிடம் கேட்டுக் கொண்டார்.



வரலாற்றுச் சிறப்புமிக்க மிகவும் பழைமை வாய்ந்த வத்தளை உனுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீமுத்துக்குமரன் ஆலயத்தில் திருவாசகமுற்றோதல், நான்காவது தடவையாக கொரோனா சுகாதார வழிகாட்டுதலுக்கமைய மாணிக்கவாசகர் அறப்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று (13) நடைபெற்றது. இதன்போது, ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ சோதிரத்தின குருக்கள் பூஜை வழிபாடுகளை நடத்துவதையும், மன்றத்தின் தலைவர் பாபு ரெட்டியார், செயலாளர் மு.துரைராசா உள்ளிட்டோர் கலந்துகொண்டதையும் படங்களில் காணலாம். (படங்கள் -ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# முல்லைத்தீவு காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டம்

(வன்னி செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான முதலாவது காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுவின் தலைவருமான க.விமலநாதனின் தலைமையில் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.



இக்கலந்துரையாடலில் பிரதேச மட்ட காணிப் பயன் பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டத்தில் சிபாரிசுசெய்யப்பட்டு மாவட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள காணி தொடர்பான விபரங்கள் பிரதேச செயலர் ரீதியாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும், பொதுத் தேவைக்குப் பயன்படுத்தப்படும் காணிகளை கையளித்தல், நீண்டகால மற்றும் குறுகிய காலம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுக்கான அனுமதி பெறல், காணிக் கச்சேரி மூலம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளுக்கு அனுமதி வழங்குதல் தொடர்பான விடயங்கள் பிரதேச செயலக ரீதியாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடலில் மாவட்ட செயலக காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், மாகாண காணி உதவி ஆணையாளர், சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர்கள், காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

# அமிர்தலிங்கத்தின் நினைவுதினம் வலிகாமத்தில் அனுஷ்டிப்பு



மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் முதுபெரும் தமிழ் அரசியல் தலைவருமான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 32ஆவது நினைவு தினம் நேற்று வலிகாமம் மேற்கு பிரதேச சபை முன்றலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், தமிழ் அரசு கட்சியின் பொருளாளர் பொ.கனகசபாபதி, வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் நடனேந்திரன், சே.கலையமுதன், கௌரிகாந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்,

# கடற்பரப்பில் கரையொதுங்கிய சந்தேகத்திற்கிடமான படகு



(மன்னார் நகர் நிருபர்)


மன்னார் பொலிஸ் பிரிவிலுள்ள சௌத்பார் கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (இந்திய நாட்டுப் படகு என சந்தேகிக்கப்படும் படகொன்று கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த படகில் பதிவு இலக்கமோ படகின் இலக்கமோ இல்லாத நிலையில் படகில் 'அர்ச்சனா' என பெயர் குறிப்பிடப்பட்டு சிறிய உடைவுகளுடன் குறித்த நாட்டுப்படகு கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த படகு காற்றின் வேகம் காரணமாக கரையொதுங்கியுள்ளதா? அல்லது சட்டவிரோத கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டு கைவிடப்படுள்ளதா? என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# யாழுக்கு நன்னீர் திட்டம்

## கிளிநொச்சியில் அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை





இரணைமடு, கல்மடு, விசுவமடு, உடையார்கட்டு போன்ற குளங்களிலிருந்து வழிந்தோடி விரயமாகின்ற நீரைப் பயன்படுத்தி, யாழ். மாவட்டத்திற்கான நன்னீரை பெறுக்கொள்ளும் திட்டத்தினை செயற்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இதுதொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு நன்னீரை கொண்டுசெல்லும் திட்டம் தொடர்பாக 1962ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆறுமுகம் திட்டம் பிரஸ்தாபிக்கப்பட்ட போதிலும், ஆனையிறவு கடல் நீரேரியில் பருவகால மீன்பிடித தொழிலில் ஈடுபடுவோரின் எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி ஆனையிறவு கடல் நீரேரியில் 23 வீதமான பகுதியை மறித்து அணை அமைத்து, திட்டத்தினை முன்னெடுப்பது தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தினால் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், பிரதேச மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு, புதிய திட்டம் தொடர்பாக தெளிவுபடுத்தி, கருத்துகளை அறிந்துகொள்ளும் வகையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, நெதர்லாந்து அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மறுசீரமைக்கப்பட்ட திட்டம் தொடர்பாக கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் த. இராஜகோபுவினால் தெளிவுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக மங்களேஸ்வரன் நியமனம்



(வவுனியா நிருபர்)

இலங்கை வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரைகாலமும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வளாகமாக இயங்கிவந்த 'யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகம்' எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதிமுதல் 'இலங்கை வவுனியா பல்கலைக்கழகம்' என தரமுயருமென கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸினால் கடந்த மாதம் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, இலங்கை வவுனியா பல்கலைக்கழகத்தைத் தாபிப்பதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அதன் ஒரு நிலையாக யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# மன்னாரில் 22,230 பைசர் தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கை இன்று ஆரம்பம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதன்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்திற்கென மேலும் வழங்கப்பட்டுள்ள 22 ஆயிரத்து 230 பைஸர் தடுப்பூசிகள் இன்று புதன்கிழமை முதல் 30 வயதிற்கு மேற்பட்ட மன்னார் மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன – என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.



மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த 5ஆம் திகதிமுதல் சமூகத் தடுப்பூசி வழங்கலின் 2 ஆவது கட்டம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 3 ஆவது கட்டம் இடம்பெற்று வருகின்றது.

2 ஆவது கட்டத்தில் பாதுகாப்புப் படையினரால் விநியோகிக்கப்பட்ட 5 ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசிகள் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமைமுதல் நேற்று திங்கட்கிழமை வரை கிடைக்கப்பெற்ற

20 ஆயிரம் பைசர் தடுப்பூசிகளில் 19 ஆயிரத்து 500 வரையிலான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

செப்டெம்பர் மாதம் நாட்டை முழுமையாக திறக்கவேண்டும் என்ற ஜனாதிபதியின் சிந்தனையின் அடிப்படையில் இந்திய மீனவர்களுடன் தொடர்புபடுகின்ற மன்னார் மீனவர்களினால் ஏற்படக்கூடிய கொரோனா அச்சநிலையை நீக்குவதற்காக மன்னார் மாவட்டத்திற்கு விசேடமாக குறித்த தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு எமக்கு மேலும் 22 ஆயிரத்து 230 பைஸர் தடுப்பூசிகள் அனுப்பிவைக்கப்பட்டு கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றின் விநியோகம் இன்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகும்.

குறித்த தடுப்பூசிகள் மன்னார் மாவட்டத்தில் 5 அல்லது 6 நிலையங்களில் ஒவ்வொரு நாளும் வழங்கப்படும். இதன்போது 30 வயதிற்கு மேற்பட்ட மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நிரந்தர வதிவுரிமை பெற்ற அனைவரும் எந்த நிலையத்திலும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும்.


2 ஆம், 3 ஆம் நிலையை கடந்த கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் ஒரு வயதிலும் குறைந்த குழந்தைகளைக் கொண்டுள்ள தாய்மார்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் வாரத்தில் இடம்பெறும்.

இவர்கள் பொதுமக்களுக்கான தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு சென்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ள தேவையில்லை. இவர்களுக்கு விசேடமாக வேறு நிலையங்களில் எதிர்வரும் வாரம் வழங்கப்படும்.

இதுவரை மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 899 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 882 பேர் இந்த வருடம் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதத்தில் தற்போதுவரை 90 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் – என்றார்.

# மரபுவழியில் இடம்பெற்ற நீராவியடிப்பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் விழா







(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு - செம்மலை கிழக்கு, நாயாறு பகுதியில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக நீராவியடிபிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நேற்று இடம்பெற்றது.

குறிப்பாக முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய், கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்தில் மரபுவழியில் விசேட பூசைவழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து, நேற்று அதிகாலை 4 மணியளவில் அங்கிருந்து பாரம்பரிய முறைப்படி மடைப்பண்டம் எடுத்துவரப்பட்டதையடுத்து, நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்தின் இவ்வருடத்திற்கான பொங்கல் வழிபாடுகள் இனிதே ஆரம்பித்தன.

தொடர்ந்து நீராவியடிப்பிள்ளையாருக்கு விசேட அபிஷேக, ஆராதனைகள் இடம்பெற்றதுடன், பாரம்பரிய கிராமிய முறைப்படி வளர்ந்து நேர்ந்து பொங்கல் பொங்கப்பட்டு, மடைபரவி வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

குறித்த வழிபாடுகள் அனைத்தும் தற்போதைய கொவிட் - 19 சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றியே இடம்பெற்றிருந்தன.

அதேவேளை சுகாதார நடைமுறைகளைக் கண்காணிப்பதற்கென பொதுச் சுகாதாரப பரிசோதகர் ஆலய வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அதிகளவில் பொலிஸாரும் புலனாய்வாளர்களும் ஆலய வளாகத்தைச் சூழ்ந்திருந்ததையும் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது.

மேலும் இந்த வழிபாடுகளில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் குகநேசன், தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத்தலைவர்களுள் ஒருவரான விஜயகுமார் நவநீதன் ஆகியோருடன் அடியவர்களும் கலந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கூமாங்குளத்தில் வீடு கையளிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பமொன்றுக்கு வீடொன்று கையளிக்கப்பட்டது.



நம் தாயகம் நிறுவன உரிமையாளரின் நிதி உதவியில் மாணிக்கதாசன் நற்பணி மன்றத்தால் கட்டப்பட்ட குறித்த வீடு கையளிக்கப்பட்டது.

மூன்று அங்கத்தவர்களைக் கொண்டதாக வறுமைக்கோட்டின் கீழ் கொட்டில் வீட்டில் வசித்துவந்த நிலையில், அக்குடும்பத்தின் உறைவிடத் தேவையை பூர்த்திசெய்யும் முகமாக ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் இந்த வீடு அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைவர் யோகராசா, செட்டிகுளம் பிரதேச சபைத் தலைவர் ஜெகதீஸ்வரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் மயூரன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் சந்திரபத்மன், கலைஞர் மாணிக்கம் ஜெகன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# வவுனியா தபால் நிலைய ஊழியர்களுக்கு வைத்தியசாலையில் தடுப்பூசி ஏற்றிவைப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்றுக் காலை 8.30 மணிமுதல் 1.30 மணிவரையில் தபால் சேவை சார்ந்தவர்களுக்கு சினோபார்ம் கொவிட் தடுப்பூசி ஏற்றிவைக்கப்பட்டது.





சீன அரசாங்கத்தால் இலங்கை அரசாங்கத்திற்கு கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை பல்வேறு மாவட்டங்களிலும் தேவையின் பொருட்டு பயன்படுத்துவதற்கான நடவடிக்கையினை சுகாதாரத்துறையினர் முன்னெடுத்துள்ளனர்.

அதனடிப்படையில் வவுனியா மாவட்டத்திலுள்ள தபால் சேவை நிலையத்தில் பணியாற்றும் அதிகாரிகள், ஊழியர்கள், தபால் வழங்குனர்கள் என அனைவருக்கும் சினோபார்ம் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

# உலக செய்திகள்

## ஆளில்லா கடலடி ஏவுகணை தயாரிக்கும் சீனா



மனித வழிகாட்டுதலின்றி தானாக இயங்கி எதிரிகளின் இலக்கைத் தாக்கும் கடலடி ஏவுகணைகளை சீனா உருவாக்கி வருகிறது.

டர்பிடோக்கள் எனப்படும் ஏவுகணைகள் பெரும்பாலும் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் இயக்கப்படுவது வழக்கம். ஆனால், மனித இழப்புகள் ஏற்படுவதைத் தடுக்க செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் டர்பிடோக்களை பயன்படுத்த சீனா முடிவுசெய்துள்ளது. இந்த டர்பிடோக்கள் எதிரி நாட்டு நீர்மூழ்கிக் கப்பல்களை அடையாளம் காணவும், தேவைப்பட்டால் மறைந்திருந்து தாக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதற்கான சோதனை தாய்வான் நீரிணையில் சுமார் 30 அடி ஆழத்தில் நடந்தது. இந்தச் சோதனை வெற்றிபெற்றதாக சீனா அறிவித்துள்ளது. யுயுவி என அழைக்கப்படும் இந்த டர்பிடோக்கள் தேவைப்படும் நேரத்தில் தனியாகவும், குழுவாகவும் தாக்கும் தன்மை கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

### அறிந்துகொள்வோம்!

## நிலக்கடலையின் தாயகம் எது?



நிலக்கடலை பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதர்களால் உண்ணப்பட்டுவரும் உணவுப்பொருள். நமக்கு நிலக்கடலை அறிமுகமானது கடந்த நூற்றாண்டுகளில்தான். வேர்க்கடலை, மணிலாக்கடலை, மல்லாட்டை, மணிலாக் கொட்டை, கடலை முத்து எனப் பல பெயர்களில் வழங்கப்படும். இதன் தாவரவியல் பெயர் 'அரேகிஸ் ஹைபோஜியா'. இதன் பூர்விகம் தென்னமெரிக்க கண்டம்தான். ஏழாயிரத்து 600 ஆண்டுகளுக்கு முன்பே நிலக்கடலையை தென்னமெரிக்கர்கள் சாகுபடி செய்திருக்கிறார்கள். வடமேற்கு அர்ஜென்டினாவில் தொடக்கத்தில் சாகுபடி செய்யப்பட்ட இப்பயிர் பின்னர் அங்கிருந்து பெரு, ஈக்வடார், பொலிவியா, பிரேஸில், பராகுவே, உருகுவே ஆகிய நாடுகளுக்கும் பரவியது.

இன்று நிலக்கடலையை சீனா, இந்தியா, நைஜீரியா போன்ற நாடுகளும் அதிகமாக பயிரிடுகின்றன. அதிலும் சீனாதான் இதை மிக அதிகமாக உற்பத்தி செய்கிறது. கடந்த ஆண்டு நிலக்கடலை சாகுபடி ஐம்பது தொன். இதில் சுமார் முப்பத்தெட்டு சதவீதத்தை சீனாவே உற்பத்தி செய்துள்ளது. நிலக்கடலையில் மாவுச்சத்தும், கொழுப்புச்சத்தும் நிறைந்துள்ளன. இதைத் தவிர, பொட்டாசியம், கல்சியம், மக்னீஷியம் போன்ற தாதுப்புகளும் நிறைந்துள்ளன. நிலக்கடலை பசியை அடக்கும். இதயத்தை வலுவாக்கும். உடலில் கொழுப்பை பெருக்கி எடை கட்டுப்பாட்டுக்கு உதவும்.

### 18.82 கோடியை கடந்த உலக கொரோனா பாதிப்பு

# வெவ்வேறு தடுப்பூசிகளை செலுத்திக்கொள்வது ஆபத்தானது

### உலக சுகாதார அமைப்பு

இரு வெவ்வேறு தடுப்பூசிகளை செலுத்திக்கொள்வதென்பது ஆபத்தான போக்கு என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 18.82 கோடியை கடந்துள்ளதுடன், 40.58 இலட்சத்தை தாண்டியுள்ளது.

பல்வேறு நாடுகளில் தடுப்பூசி பற்றாக்குறை பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக, வளர்ந்துவரும் மற்றும் பின்தங்கிய நாடுகளில் மக்களுக்கு இரண்டு தவணை தடுப்பூசி செலுத்தும்போது இரண்டு வெவ்வேறு நிறுவனங்கள் தயாரித்த தடுப்பூசிகள் அளிக்கப்படுகிறது.

இது ஆபத்தான போக்கு என உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌம்யா சுவாமிநாதன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும்



தெரிவிக்கையில்,

"இது சற்று ஆபத்தான போக்கு. இரண்டு வெவ்வேறு நிறுவனங்கள் தயாரித்த தடுப்பூசிகள் செலுத்திக்கொள்வதால் என்ன தாக்கங்கள் ஏற்படும் என்பது குறித்த ஆதாரங்களோ தரவுகளோ நம்மிடம் இல்லை.

இரண்டாம், மூன்றாம், நான்காம் தவணை தடுப்பூசிகளை எப்போது யார் செலுத்தவேண்டும் என்பதை மக்களே முடிவெடுத்தால் அது குழப்பமான சூழலை ஏற்படுத்தும்" - என்றார்.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆண்டின் இறுதியில் கண்டறியப்பட்ட கொவிட் - 19 வைரஸ் உலகம் முழுவதுமுள்ள 222 நாடுகள் மற்றும் பெரு நகரங்களில் பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கொண்டுவரப்பட்டுள்ள போதும் நாளுக்கு நாள் கொரோனாவால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

அந்தவகையில் நேற்று செவ்வாய்க்கிழமை நிலைவரப்படி உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவோரின் எண்ணிக்கை 1.20 கோடியை கடந்துள்ளது.

அதாவது 1,20,06,477 பேர் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 78,545 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை) 18,82,12,206 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 40,58,103 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 17,21,01,443 பேர் இதுவரை குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்புகளின்படி அமெரிக்கா, இந்தியா, பிரேஸில் ஆகிய நாடுகள் முன்னிலையில் உள்ளன.


அந்தவகையில் அமெரிக்காவில் இதுவரை 3,47,66,404 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 623,029பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் கொரோனாவால் இதுவரை 3,09,07,282 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 4,09,338 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேபோல் பிரேஸிலில் 1,91,06,971 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 5,34,311பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேஸிலுக்கு அடுத்தாக பிரான்ஸ், ரஷ்யா, துருக்கி, பிரித்தானியா, ஆர்ஜென்டினா, கொலம்பியா, இத்தாலி ஆகிய நாடுகளில் கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்புகள் வெகுவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக் கொரோனா மருத்துவமனையில் தீ: 64 நோயாளிகள் உயிரிழப்பு; 67பேர் காயம்







ஈராக்கில் கொரோனா நோயாளிகள் சிகிச்சைபெற்றுவந்த மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 64 பேர் உயிரிழந்துள்ளதுடன், 67 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கின் தெற்கு நகரமான நாசியாவில் கொரோனா நோயாளிகளுக்கென்று மருத்துவமனை ஒன்று செயற்பட்டுவந்தது. இங்கு 200இற்கும் மேற்பட்ட கொரோனா நோயாளிகள் சிகிச்சைபெற்றுவந்த நிலையில், மருத்துவமனையில் பொருத்தப்பட்டிருந்த ஒட்சிசன் சேமிப்பு தாங்கிகளில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ கொழுந்துவிட்டு எரிந்ததால் ஒட்சிசன் சிலிண்டர்கள் பயங்கரமாக வெடித்துச் சிதறின.

பொதுமக்கள் மற்றும் நோயாளிகளின் உதவியுடன் அங்கு சிகிச்சை பெற்றுவந்த 100இற்கும் மேற்பட்டவர்களை காப்பாற்றி பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றினர். விரைந்து வந்த தீயணைப்பு வீரர்களும் பல மணிநேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர். இருப்பினும், தீ மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக கொரோனா நோயாளிகள் 52 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட 50 பேருக்கு நாசியாவிலுள்ள பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

ஒட்சிசன் சேமிப்பு கிடங்களில் போதுமான தீ தடுப்பு பாதுகாப்பு உபகரணங்கள் இல்லை என்பது முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதையடுத்து வைத்தியசாலை நிர்வாக அதிகாரி பணியிடை மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# சீனாவில் கடும் மழை: வெள்ளத்தில் மிதக்கும் தென்மேற்கு மாநிலங்கள்

### முக்கிய நதிகளில் அபாய அளவைத் தாண்டி கரைபுரளும் வெள்ளம்; அச்சத்தில் மக்கள்..!!

சீனாவில் தொடர்ந்தும் பெய்துவரும் கடும் மழையால் அந்நாட்டில் தென்மேற்கு மாநிலங்கள் வெள்ளத்தில் மிதப்பதுடன், பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. வீதிகள் - கட்டடங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக பெய்துவந்த பெருமழையால் சிச்சுவான், தோன்சுவான், தாங்சுவான் மாநிலங்களிலுள்ள முக்கிய நகரங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. 75இற்கும் மேற்பட்ட கிராமங்களை வெள்ளம் தனி தீவுகளாக மாற்றியிருக்கின்றன. இதனால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

தொடர்ந்து பாகே, யாங்ஷீ, ஜியாலிங் ஆகிய நதிகளில் வெள்ளம் அபாய அளவை தாண்டி கரைபுரண்டு ஓடுகிறது. இதுகுறித்து பாதிக்கப்பட்ட கிராமவாசி டியூ ஜியங் குறிப்பிட்டதாவது, பல நாட்களாக பெய்துவந்த மழை நின்றுவிட்டது. ஆனால், வெள்ளம் நொடிக்கு நொடி அதிகரித்து வருகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 200இற்கும்



மேற்பட்டோர் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தற்போது சிச்சுவான் பகுதிகளில் மழை குறைந்துள்ளபோதும் வெள்ளத்தின் தாக்கம் அதிகரித்து வருகிறது. பல்வேறு நகரங்களின் வீதிகளில் வெள்ள நீர் வியாபித்திருப்பதால் வாகனங்கள் படகுகளைபோல் நீந்திச் செல்கின்றன. இதனிடையே மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை சிச்சுவான் மாநில அரசு போர்க்கால அடிப்படையில் முடுக்கிவிட்டுள்ளது.



### 45 நாட்கள் 8 மணிநேர பயணம்..!

## உலகின் மிகப்பெரிய Mississippi ஆற்றை படகு மூலம் கடந்து பெண் சாதனை

அமெரிக்காவில் பாயும் உலகின் மிகப்பெரிய ஆறுகளில் ஒன்றான Mississippi ஆற்றை படகு மூலம் பெண் ஒருவர் தன்னந்தனியாக கடந்துள்ளார்.

'Mississippi Mermaid' என்று செல்லமாக அழைக்கப்படும் அந்தப் பெண் கடந்த மே மாதம் 17ஆம் திகதி Minnesotaவில் தனது சாதனைப் பயணத்தை தொடங்கினார்.

45 நாட்கள் 8 மணிநேரம் பயணம்செய்த அவர், அந்த ஆறு கடலில் கலக்கும் Louisianaவில் பயணத்தை நிறைவுசெய்தார்.

## சீன கம்யூனிஸ்ட் கட்சியில் சேர நடிகர் ஜெக்கி சான் விருப்பம்



பிரபல ஹொலிவுட் நடிகரான ஜொக்கி சான் (jackie chan) சீன கம்யூனிஸ்ட் கட்சியில் சேருவதற்கு முடிவு செய்துள்ளார்.

இதுதொடர்பான தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டி அளித்த அவர்,

''பல நாடுகளுக்கு தாம் சென்றபோது சீனா அனைத்து வகையிலும் குறுகிய காலத்திலேயே நல்ல வளர்ச்சியை கண்டுள்ளது.

சீன குடிமகனாக இருப்பதில் பெருமை அடைகிறேன். 5 நட்சத்திரங்களை உடைய நமது சீன சிவப்பு கொடிக்கு உலகம் முழுவதும் மரியாதை கிடைக்கிறது'' என்றார்.

இதன்போது ஹொங்கொங்கும், சீனாவும் தமது பிறப்பிடம் மட்டுமல்ல, வீடு என்று கூறிய ஜெக்கிசான், ஹொங்கொங்கில் விரைவில் அமைதி திரும்பும் என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

பிரபல அதிரடி ஹீரோ ஜெக்கி சான், தனது ஸ்டண்ட் படங்கள் மூலமாக உலகம் முழுவதிலும் கோடிக்கணக்கான ரசிகர்களை கொண்டுள்ளவர். தற்போது 67 வயதாகும் ஜாக்கி சான் சீன திரைப்பட சங்கத்தின் துணை தலைவராகவும் செயலாற்றி வருகிறார்.

## உலகின் மிக ஆழமான நீச்சல் குளம் டுபாயில்



உலகிலேயே மிக ஆழமான நீச்சல் குளம் டுபாயில் திறக்கப்பட்டுள்ளது. டீப் டைவ் (deep dive) எனும் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இந்த நீச்சல் குளத்தை டுபாய் பட்டத்து இளவரசர் Sheikh Hamdan bin Mohammed bin Rashid Al Maktoum திறந்துவைத்தார்.

196 அடி ஆழத்தில், Nad Al Sheba பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த நீச்சல் குளத்தில் கூட்ட அரங்கம், விளையாட்டு அரங்கம், நூலகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் இடம்பெற்றுள்ளன.

14 மில்லியன் லீற்றர் நீரைக் கொண்டிருக்கும் இந்த நீச்சல் குளத்தின் கொள்ளளவு ஆறு ஒலிம்பிக் அளவிலான நீச்சல் குளங்களுக்கு சமமாகும். டைவிங் செய்ய விரும்புவோருக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கும் இந்த நீச்சல் குளம், உலகிலேயே மிக ஆழமான நீச்சல் குளம் என்ற கின்னஸ் சாதனையை பெற்றுள்ளது.

## நேபாள பிரதமராக ஷேர் பகதூர் பதவியேற்பு..!



நேபாளத்தின் பிரதமராக ஷேர் பகதூர் டியூபா பதவியேற்கிறார்.

முன்னாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலியின் பரிந்துரையின் பேரில் நாடாளுமன்ற கீழவையை கலைத்து, நவம்பர் மாதம் தேர்தல் நடத்த ஜனாதிபதி வித்யா தேவி பண்டாரி உத்தரவிட்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் 30இற்கும் மேற்பட்ட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மனுக்களை விசாரித்த 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவை இரத்துச்செய்வதாக தீர்ப்பு வழங்கினர்.

நேபாளி காங்கிரஸ் கட்சித் தலைவர் ஷேர் பகதூர் தியுபாவை புதிய பிரதமராக நியமிக்க வேண்டும் என்றும் வரும் 18ஆம் திகதிக்குள் நாடாளுமன்ற அவையை கூட்ட வேண்டும் எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். இதனை அடுத்து புதிய பிரதமராக ஷேர் பகதூர் டியூபா இன்று பதவியேற்கிறார்.

இதன்படி நேபாளத்தின் பிரதமராக, 5ஆவது முறையாகவும் நேபாள காங்கிரஸ் தலைவர் ஷேர் பகதூர் பொறுப்பேற்கிறார்.



காஷ்மீரில் எல்லை பாதுகாப்புப் பணியில் இராணுவ வீரர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் 'அசாம் ரைபிள்' படையைச் சேர்ந்த பெண் வீரர்கள்

இந்திய செய்திகள்

### இராமநாதபுரத்திலிருந்து இலங்கைக்கு...

# 6 நாட்களில் 3 ஆயிரம் கிலோ கடத்தல் கடலட்டைகள் - 3 நாட்டுப்படகுகள் பறிமுதல்

## கடத்தல்காரர்கள் எழுவர் கைது; மண்டபம் வனத்துறை நடவடிக்கை



இலங்கைக்கு கடத்தப்படவிருந்த தடைசெய்யப்பட்ட 3 ஆயிரம் கிலோ கடலட்டைகளை பறிமுதல்செய்த வனத்துறையினர் கடத்தலுக்கு பயன்படுத்தப்படும் 24 இலட்சம் மதிப்பிலான நாட்டுப்படகுகளும், கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய 7 குற்றவாளிகளையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையிலடைத்துள்ளனர்.

இலங்கைக்கு அருகே இராமேஸ்வரம் உள்ளதால் மன்னார் வளைகுடா கடல் வழியாக தடைசெய்யப்பட்ட கடலட்டைகள், கடல் பல்லி, டொல்பின் துடுப்பு உள்ளிட்டவைகள் சமீபகாலமாக அதிகளவு கடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நேற்று இராமநாதபுரம் மாவட்டம் வேதாளை கடற்கரை பகுதியிலிருந்து இலங்கைக்கு கடலட்டைகள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து மண்டபம் வனத்துறையினர் கடலில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது வேதாளை கடற்கரை நோக்கிவந்த நாட்டுப்படகொன்று



வனத்துறையினரை கண்டதும் கரைக்கு வராமல் மீண்டும் கடலுக்குள் சென்றது. இதனைக் கண்ட வனத்துறையினர், ரோந்து படகில் துரத்திச் சென்று முயல்தீவு அருகே வைத்து தப்பிச் சென்ற நாட்டுப்படகை மடக்கிப்பிடித்து சோதனை செய்ததில், படகில் தடைசெய்யப்பட்ட கடலட்டைகள் இருந்தமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து படகையும் அதிலிருந்த இருவரையும் கைதுசெய்து மண்டபம் வனத்துறை சோதனைச்சாவடிக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

விசாரணையின்போது, வனத்துறையினரை கண்டதும் நாட்டுப்படகிலிருந்து 500 கிலோ உயிர் கடலட்டைகளை கடலில் போட்டுவிட்டதாகவும் படகில் சுமார் 300 கிலோ கடலட்டைகள் மட்டுமே இருந்தன எனவும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து வேதாளையை சேர்ந்த மீரான்கனி, முகமது நசீர் ஆகிய இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையிலடைக்க மண்டபம் வனத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட சுமார் 8 இலட்சம் மதிப்பிலான நாட்டுப்படகு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆறு நாட்களில் மண்டபம் வனத்துறையினரின் தீவிர நடவடிக்கையால் 3 ஆயிரம் கிலோ கடத்தல் கடலட்டைகள் மற்றும் 3 நாட்டுப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், கடத்தல்காரர்கள் 7 பேரையும் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இமாச்சலப் பிரதேசத்தில் இடைவிடாத கடும் மழை: மண்சரிவு - வெள்ளப்பெருக்கில் சிக்கி 13 பேர் மாயம்



இமாச்சலப் பிரதேசத்தில் மேகவெடிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட கனமழையால் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளன. கார்கள், கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டன. 13 பேர் காணாமல் போயுள்ளனர்.

இமாச்சலப் பிரதேசத்தில் ஞாயிறு இரவுமுதல் இடைவிடாமல் பெய்த கனமழையால் பல்வேறு மலைப்பாதைகளில் மண்சரிவுகள் ஏற்பட்டன. தர்மசாலா, kangara, ஷாஹபுர் உள்ளிட்ட பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில், ஆடு மாடுகள், கார்கள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டன. பல வீடுகளும் இடிந்து சாய்ந்தன.

மாநிலத்தின் நெடுஞ்சாலைகளும் சண்டிகர், மணாலியை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலைகளும் மண்சரிவு காரணமாக மூடப்பட்டிருப்பதால், 5 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் பல மணிநேரமாக காத்திருந்தன.

வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்ட 9 வயது சிறுமி உட்பட 13 பேரைக் காணவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மீட்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகள் மலைப்பகுதிகளுக்கு வரவேண்டாம் என்றும் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு அதிகமாக இருப்பதால் கரையோரங்களுக்கு செல்லவேண்டாம் என்றும் பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மின்சாரம், தொலைத்தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகளில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இமாச்சலத்துக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று பிரதமர் மோடி உறுதியளித்துள்ளார். இமாச்சல் நிலைவரத்தை மத்திய அரசு நேரடியாக கண்காணித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**உத்தரகாண்ட்டில் வெள்ளம்**

உத்தரகாண்ட் மாநிலத்தில் பெய்துவரும் கனமழையால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, ரிஷிகேஷ், ஹரித்துவார் உள்ளிட்ட பகுதிகளில் அபாயக் கட்டத்தை தாண்டி, வெள்ளம் பாய்ந்தோடி வருகிறது.

டெஹ்ராடூன்(Dehradun) மாவட்டத்தில், கனமழையால் சேதமடைந்த தற்காலிக பாலம் வழியே உயிரைப் பணயம் வைத்தபடி அம்பாவா ஆற்றை அப்பகுதி மக்கள் கடந்து வருகின்றனர்.

# இந்தியாவில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா உயிரிழப்புகள்

## ஒரே நாளில் 2020 பேர் பலி

இந்தியாவில் மீண்டும் கொரோனா உயிரிழப்புகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. நேற்று ஒரேநாளில் 2020 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், இந்தியா முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 4.09 இலட்சமாக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் கடந்த சில மாதங்களாக கொரோனாவின் இரண்டாம் அலை தீவிரமடைந்திருந்தது. நாளொன்றில் கொரோனாவால் பாதிக்கப்படுவோர் மற்றும் உயிரிழப்போர் எண்ணிக்கை பார்ப்போரை மிரள வைத்திருந்த நிலையில், தற்போது நிலைமை சற்று தணிந்துள்ள நிலையில் மீண்டும் கொரோனா உயிரிழப்புகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், நேற்று ஒரேநாளில் 2020 பேர் உயிரிழந்துள்ளதுடன், 31,443 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா முழுவதும் இதுவரை 3,09,07,282 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4,09,338 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 4,34,224 பேர் இந்தியா முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்றுவருவதுடன், அவர்களில் 8,944 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


தற்போது பத்திரிகை முகவர்களிடம் பெறலாம்




விலை ரூ 30

தொடர்புகளுக்கு : 0777 983308 - விநியோகப்பிரிவு


# விஜய்க்கு ஒரு இலட்சம் அபராதம்: சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்த ரோல்ஸ் ரொய்ஸ் சொகுசுக்கு காருக்கு நுழைவு வரி விதிக்க தடை கோரி நடிகர் விஜய் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்துள்ள உயர்நீதிமன்றம், அவருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

''நாடாளும் அளவிற்கு நடிகர்கள் வளர்ந்துள்ள தமிழ்நாட்டில், கதாநாயகர்கள் ரியல் ஹீரோக்களாக இருக்கவேண்டுமே தவிர, ரீல் ஹீரோக்களாக இருக்கக்கூடாது'' என நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

நடிகர் விஜய் கடந்த 2012ஆம் ஆண்டு பிரிட்டனிலிருந்து ரோல்ஸ் ரொய்ஸ் கோஸ்ட் ரக காரை இறக்குமதிசெய்துள்ளார். இந்தக் காருக்கு நுழைவு வரி செலுத்த வணிக வரித்துறை உதவி ஆணையர் உத்தரவு பிறப்பித்தார்.



**''கதாநாயகர்கள் ரியல் ஹீரோக்களாக இருக்கவேண்டுமே தவிர, ரீல் ஹீரோக்களாக இருக்கக் கூடாது'' - நீதிபதி**

இந்த உத்தரவை எதிர்த்தும் நுழைவு வரி விதிக்க தடை கோரியும் நடிகர் விஜய், சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், ரோல்ஸ் ரொய்ஸ் காரை பதிவுசெய்யாததால் அதனை பயன்படுத்த முடியவில்லை என்றும், நுழைவு வரி செலுத்த வேண்டும் என்ற உத்தரவிற்கு தடை விதிக்குமாறும் மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.எம்.சுப்ரமணியம், ''மனுதாரர் தான் எந்த தொழில் செய்கிறோம் என்பதை மனுவில் குறிப்பிடவில்லை'' என்றும், வழக்கறிஞரிடம் கேட்டபோதுதான் மனுதாரர் நடிகர் என்பதை தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார். புகழ்பெற்ற சினிமா நடிகர்கள் முறையாக, உரியநேரத்தில் வரி செலுத்த வேண்டும் என்றும், வரி வருமானம் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்றும் நீதிபதி குறிப்பிட்டார்.

வரி என்பது கட்டாயமாக வழங்கவேண்டிய பங்களிப்புதானே தவிர, தானாக வழங்கக்கூடிய நன்கொடை அல்ல எனவும் தனது உத்தரவில் நீதிபதி காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மக்கள் செலுத்தக்கூடிய வரிதான், பாடசாலைகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட அரசின் நல திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன என்றும், தமிழ்நாட்டில் நாடாளுமளவிற்கு நடிகர்கள் வளர்ந்துள்ள நிலையில், அவர்கள் உண்மையான ஹீரோக்களாக இருக்கவேண்டுமே தவிர, ரீல் ஹீரோக்களாக இருக்கக்கூடாது என்றும் நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

சமூக நீதிக்கு பாடுபடுவதாக பிரதிபலிக்கும் நடிகர்கள், வரிஏய்ப்பு செய்வது ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், வரிஏய்ப்பு என்பது தேசத்துரோகம் எனவும் குறிப்பிட்ட நீதிபதி, இறக்குமதி செய்யப்பட்ட காருக்கான நுழைவு வரியை 2 வாரங்களில் செலுத்தவேண்டும் என நடிகர் விஜய்க்கு உத்தரவிட்டார்.

மேலும், நடிகர் விஜயின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்ட நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம், ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்து அதை முதலமைச்சர் கொரோனா நிவாரண நிதிக்கு இரண்டு வாரத்தில் வழங்கவேண்டும் எனவும் நடிகர் விஜய்க்கு உத்தரவிட்டுள்ளார்.

# தோல்வியால் இனவெறி தாக்குதலுக்குள்ளான ரஷ்ஃபோர்ட் உணர்ச்சிபூர்வ கடிதம்



யூரோ கிண்ண உதைபந்து தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த நிலையில், இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி தோல்வியை தழுவியதைத் தொடர்ந்து இனவெறித் தாக்குதல்களை எதிர்கொண்டு வருகின்ற இங்கிலாந்து அணியில் விளையாடிய கறுப்பினத்தவரான மார்கஸ் ரஷ்ஃபோர்ட் உணர்ச்சிபூர்வமான ஒரு கடிதத்தை எழுதி அவரது ட்விட்டர் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

2020 யூரோ கிண்ண உதைபந்து தொடரில் இங்கிலாந்து அணியை பெனால்டி சூட்டில் வீழ்த்திய இத்தாலி இரண்டாவது தடவையாக 53 வருடங்களின் பின்னர் யுரோ கிண்ணத்தை சுவீகரித்தது. இங்கிலாந்து அணி சார்பாக பெனால்டி சூட் அடித்த 3 கறுப்பின வீரர்களும் தங்களது வாய்ப்பை தவறவிட்டனர். இதனைத் தொடர்ந்து இங்கிலாந்தின் தோல்விக்கு கறுப்பர்கள்தான் காரணம் என்ற வகையில் இங்கிலாந்தில் கோஷங்கள் எழுந்தன.

இந்நிலையில், இங்கிலாந்து கறுப்பின வீரர் மார்கஸ் ரஷ்ஃபோர்ட் தனது கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். “இந்த நேரத்தில் நான் எப்படி உணர்கிறேன் என்று வார்த்தைகளில் சரியாக எப்படி சொல்வது என்று கூட எனக்குத் தெரியவில்லை. நான் எனது அணியினரை வீழ்த்தியதைபோல் உணர்ந்தேன். அனைவரையும் வீழ்த்துவதுபோல் உணர்ந்தேன்.''

“உடைக்க முடியாத ஒரு சகோதரத்துவம் கிடைத்துள்ளது. உங்கள் வெற்றி எனது வெற்றி. உங்கள் தோல்விகள் என்னுடையவை. என் தோலின் நிறம், நான் வளர்ந்த இடம், என் விளையாட்டு என என்னைப் பற்றி என்ன எழுதப்பட்டாலும் அதைப் படிக்க வேண்டும் என்ற ஒரு விளையாட்டில் நான் பங்கு பெற்றுள்ளேன் என்று எனக்குத் தெரியும்.''

“இந்த மூன்று சிங்கங்களையும் என் மார்பில் அணிந்துகொண்டு, ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில், என் குடும்பத்தினர் என்னை உற்சாகப்படுத்துவதைக் காட்டிலும் வேறு எந்த தருணத்தையும் நான் உணரவில்லை. இதுபோன்ற நாட்களுக்காக நான் கனவு கண்டேன். விம்பிள்டனில் கிடைத்த தோல்வியைக் கண்டு கண்ணீரின் விளிம்பில் இருக்கிறேன். என்னைச் சுற்றி எப்போதும் அரவணைக்கும் கைகளை கொண்டிருக்கும் சமூகங்கள் என்னை தொடர்ந்து நிலைநிறுத்துகின்றன.''

“நான் மார்கஸ் ரஷ்ஃபோர்ட். 23 வயது, தெற்கு மென்செஸ்டரின் வித்திங்டன் மற்றும் வைதன்ஷேவைச் சேர்ந்த கறுப்பு மனிதன். என்னிடம் வேறு எதுவும் இல்லை என்றாலும் இந்த அடையாளம் என்னிடம் உள்ளது. எல்லாவகையான செய்திகளுக்கும் நன்றி. நான் மீண்டும் வலுவாக திரும்பி வருவேன். நாங்கள் மீண்டும் வலுவாக திரும்புவோம்'' என உணர்ச்சிபூர்வமாக எழுதியுள்ளார்.

# இலங்கை அணிக்கு தற்காலிக துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்



ஷிகர் தவான் தலைமையிலான இந்திய அணியுடன் நடைபெறவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்கொண்ட தொடருக்கான இலங்கை அணியின் தற்காலிக துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக, இலங்கை இளையோர் அணியின் (19 வயதுக்குட்பட்ட) முன்னாள் தலைமை பயிற்றுவிப்பாளரான தம்மிக்க சுதர்சன நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப் பாட்ட பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவந்த கிரேண்ட் ஃப்ளவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் தற்போது சிகிச்சைபெற்று வருகிறார். இவ்வாறான நிலையிலேயே தற்காலிக துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக தம்மிக்க சுதர்சன நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளரான கிரேண்ட் ஃப்ளவரின் பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன் நிறைவுக்கு வரும் நிலையில், விரைவில் நிரந்தரமான புதிய துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளரை நியமிக்க இலங்கை கிரிக்கெட் சபை நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையிலேயே இவரது தற்காலிக நியமனம் அமைந்துள்ளது.

# இலங்கை அணியின் கணினி தரவு ஆய்வாளராக நவரத்னம்

ஷிகர் தவான் தலைமையிலான இந்திய அணியுடன் நடைபெறவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்கொண்ட தொடருக்கான இலங்கை அணியின் கணினி தரவு ஆய்வாளராக பிரட் நவரத்னம் நியமிக்கப்பட்டுள்ளார்.



இலங்கை கிரிக்கெட் அணியின் கணினி தரவு ஆய்வாளராக செயற்பட்டுவந்த ஜி.டி.நிரோஷனுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் அணியின் கணினி தரவு ஆய்வாளராக பிரட் நவரத்னம் நியமிக்கப்பட்டுள்ளார்.

34 வயதான இவர், முன்னர் அவுஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸில் வெஸ்ட் டைகர்ஸ் அணியின் கணினி தரவு ஆய்வாளராக செயற்பட்டிருந்தார். தற்போது வழங்கப்பட்டுள்ள இந்த நியமனம் கணினி தரவு ஆய்வாளராக அவரது முதல் தேசிய அணியொன்றுடனான நியமனம் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# யூரோ கிண்ண இறுதிப்போட்டியின் பின்னர் இனவெறித் தாக்குதல்

*(ரமணி)*

**இத்தாலிக்கு எதிரான யூரோ கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்து பெனால்டி சூட்டில் தோல்வியடைந்ததற்கு இங்கிலாந்து அணியில் விளையாடும் வெளிநாட்டு வீரர்கள்தான் காரணம் என இங்கிலாந்து ரசிகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

**பெனால்டி சூட்டில் ஹரி கேன், ஹேரி மேகுவர் ஆகிய இருவரும் கோல் அடித்தனர். மார்க்கஸ் ரஷ்ஃபோர்ட், ஜேடன் சாஞ்சோ, புக்காயோ சாகோ ஆகிய மூவரும் கோல் அடிக்கவில்லை. “வந்தேறிகளால்தான் இங்கிலாந்து தோற்றது'' என இந்த வீரர்களின் நிறம் மற்றும் பிறப்பிடம் குறித்து கடுமையான விமர்சனங்களை செய்து வருகிறார்கள் சில இங்கிலாந்து ரசிகர்கள்.**

**இங்கிலாந்தின் தோல்வியை ஏற்றுக்கொள்ளாத ரசிகர்கள் இத்தாலி ரசிகர்கள் மீதும், இங்கிலாந்தில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் மீதும் தாக்குதல் நடத்தினார்கள். மார்க்கஸ் ரஷ்ஃபோர்ட்டின் குடும்பம் கரிபீயன் தீவுகளிலிருந்து இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்தது. புக்காயோ சாகா நைஜீரிய பின்னணி கொண்டவர். ஜேடன் சாஞ்சோவின் பெற்றோர் மேற்கிந்திய தீவுகளிலிருந்து இங்கிலாந்துக்கு குடியேறியவர்.**

**“வெளிநாட்டில் இருந்துவந்த வீரர்களால்தான் நாம் தோற்றோம். பூர்வீக இங்கிலாந்து வீரர்கள் இருவரும் சரியாக கோல் அடித்துவிட்டார்கள்'' என தாக்குதலில் ஈடுபட்டிருக்கிறார்கள் இனவெறி ரசிகர்கள். இறுதிப் போட்டி முடிந்து மைதானத்தைவிட்டு வெளியேறிய இத்தாலிய ரசிகர்களை தேடித்தேடி தாக்கினார்கள் இங்கிலாந்து ரசிகர்கள்.**

**“இனவெறித் தாக்குதல்களை பொறுத்துக்கொள்ள முடியாது'' என இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் கண்டித்ததுடன், இலட்சக் கணக்கான இனவெறி ட்வீட்கள் தொடர்ந்து எழுதப்பட்டு வருகின்றன. தாக்குதல் நடத்தியவர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.**

# முதல் வீரராக சாதனை படைத்த கிறிஸ் கெய்ல்



அவுஸ்திரேலிய அணியுடனான மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியின்போது அரைச்சதம் கடந்து 67 ஓட்டங்களை குவித்த மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான கிறிஸ் கெய்ல், ஐந்து வருடங்களின் பின்னர் இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் முதலாவது அரைச்சதத்தை பதிவு செய்ததுடன், இருபதுக்கு 20 போட்டிகளில் 14 ஆயிரம் ஓட்டங்களை கடந்த முதல் வீரராகவும் சாதனை படைத்தார்.

சுற்றுலா அவுஸ்திரேலிய அணிக்கும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் மூன்றாவது போட்டி நேற்று செயின்ட் லூசியாவில் நடைபெற்றது. இந்தப் போட்டியையும் வெற்றிகொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி 5 போட்டிகள்கொண்ட தொடரைக் கைப்பற்றி 3-0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது.

நேற்று நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 141 ஓட்டங்களை பெற்றது. 142 என்ற இலகு வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 14.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக துடுப்பாட்டத்தில் 67 ஓட்டங்களை குவித்த கிறிஸ் கெய்ல் தெரிவானார்.

# இத்தாலியின் வெற்றிக்கொண்டாட்டத்தில் இருவர் பலி: மூவர் கவலைக்கிடம்!

**யூரோ கிண்ணத்தை இத்தாலி வெற்றிகொண்டதை தொடர்ந்து அந்த வெற்றியை அந்நாட்டு ரசிகர்கள் மிகவும் மகிழ்ச்சியாக கொண்டாடி வருகின்ற நிலையில், வெற்றிக்கொண்டாட்டத்தில் பங்கேற்கச் சென்ற 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கார் விபத்தில் உயிரிழந்ததுடன், மேலுமொருவர் பலியாகியுள்ளார்.**

**பிபா உலகக்கிண்ணத் தொடருக்கு அடுத்ததாக உதைபந்து உலகில் நடைபெறுகின்ற இரண்டாவது மிகப்பெரிய தொடராக கருதப்படுகின்ற 16ஆவது யூரோ கிண்ணத் தொடரை இத்தாலி அணி கைப்பற் றியது. கோடிக்கணக்கான ரசிகர்களின் எதிர் பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்ற மாபெரும் இறுதிப் போட்டியில் பெனால்டி சூட் அடிப்படையில் 3-2 என்ற கோல்கள் அடிப்படையில் இங்கிலாந்தை வீழ்த்தி இரண்டாவது தடவையாக 53 வருடங்களின் பின்னர் இத்தாலி சம்பியனானது.**



**இந்நிலையிலேயே இத்தாலியில் நடைபெற்ற வெற்றிக் கொண்டாட்டத்தின்போது ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மிலன் நகரில் நடைபெற்ற வெற்றிக்கொண்டாட்டத்தில் பட்டாசு வெடித்ததில் 15 பேர் காயமடைந்தனர். அதில் மூன்று பேரின் நிலை கவலைக்கிடமாக உள் ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**




# ஜூன் மாதத்தின் சிறந்த வீரராக கோன்வே வீராங்கனையாக எக்லஸ்டோன்



2021 ஜனவரி மாதத்திலிருந்து சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மாதத்திற்கு ஒரு சிறந்த வீரர், வீராங்கனையை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பின் அடிப்படையில், ஜூன் மாதத்திற்கான சிறந்த வீரராக நியூஸிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான டிவோன் கோன்வே தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் ஜூன் மாதத்தின் ஆடவருக்கான சிறந்த வீரரை தெரிவுசெய்வதற்காக நியூஸிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டிவோன் கோன்வே, நியூஸிலாந்து அணியின் இளம் வேகப்பந்துவீச்சாளர் கைல் ஜெமிசன் மற்றும் தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குயின்டன் டி கொக் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டிருந்தனர். அதனடிப்படையில் இணையவழி மூலமாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் மூலம் நியூஸிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான டிவோன் கோன்வே அதிக வாக்குகளை பெற்று ஜூன் மாதத்தின் சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

**ஜனவரி – ஜுன் வெற்றியாளர்கள்**

ஆடவர் பிரிவின் சிறந்த வீரர்களாக கடந்த மாதங்களில் ரிஷப் பண்ட் (ஜனவரி), ரவிச்சந்திரன் அஸ்வின் (பெப்ரவரி), புவனேஸ்வர் குமார் (மார்ச்), பாபர் அஸாம் (ஏப்ரல்), முஷ்பிகூர் றஹீம் (மே) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, மகளிருக்கான சிறந்த வீராங்கனையை தெரிவு செய்வதற்கான பரிந்துரையில் இந்திய வீராங்கனைகளான ஷபாலி வர்மா மற்றும் ஸ்னே ரானா, இங்கிலாந்து வீராங்கனையான சோபி எக்லஸ்டோன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இதில் இங்கிலாந்து வீராங்கனை சோபி எக்லஸ்டோன் சிறந்த வீராங்கனையாக தெரிவாகியுள்ளார்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7